இராஜராஜசோழன் சதயவிழா

நினைவுமலர்

Copy delivered is pursuant to the Delivery of Books (Public Libraries) Act, 1954
Date of Publication 20-10-196
2 OCT 1969

பெரியகோயில் நந்தி

வெளியிடுவோர் :

சதயவிழா நினைவுமலர் வெளியீட்டுக்குழு
தஞ்சாவூர்
1969

மலர் வெளியீட்டுக்குழு

திரு. டி. என். சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,

திரு. ந. தர்மலிங்கம் எம். எல். ஏ.,

திரு. கி. கோதண்டபாணி எம். ஏ., எம். ஓ. எல்.,

திரு. கோவை. இளஞ்சேரன்

திரு. இரா. அரங்கசாமி பி. எஸ்ஸி., பி. எல்.,

திரு. வி. கே. கண்ணபிரான் பி. ஏ.,

ஸ்ரீ நவனீதேசுவரசுவாமி திருக்கோயில்

சிக்கல்

நாகை வட்டம் :: தஞ்சை மாவட்டம்

CONNEMARA PUBLIC LIBRARY
2 OCT 1969
MADRAS

இத்திருக்கோயில் திருவாரூர் நாகைப் பெருவழியில் உள்ளது. அருணகிரிநாதராலும், சம்பந்தர், சுந்தரர் ஆகியோராலும் பாடல் பெற்றது இத்திருக்கோயில். இத்திருத்தலத்தில் கந்தசஷ்டி விழாவின் போது வேல்வாங்கும் காட்சியைக்காண மக்கள் திரளாக வருகின்றனர். அதுபோழ்து ஸ்ரீ சிங்காரவேலருக்கு முகத்தில் வியர்வை அரும்பி வடிவதை யாவரும் கண்டுகளிக்கலாம். வழிபடுவோர் தங்குவதற்கு வசதியான விடுதிகள் உள்ளன.

திருக்கோயில் நிதியிலிருந்து அனாதை இல்லம் ஒன்று செயல் படுகின்றது. இத்தலத்தில் ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி விழாவும், சித்திரை மாதத்தில் பிர்மோற்சவத் திருவிழாவும், மார்கழி மாதத்தில் பகல் பத்து இராப்பத்துத் திருவிழாவும் மிகச் சிறப்புடையனவாகும்.

நிர்வாக அதிகாரி
திரு. T. நாகராஜன் B. Sc.,

அறங்காவலர்கள் :

திரு. D. R. அருணாசலம் (குழுத்தலைவர்)
திரு. M. சண்முகசுந்தரம்
திரு. கருமுத்து. அழ. மாணிக்கஞ்செட்டியார்
திரு. A. அம்பலவாணன்
திரு. K. காளிமுத்து M. A., B. L.,

ஸ்ரீ அட்சயலிங்கசுவாமி திருக்கோயில்

கீழ்வேளூர்

நாகை வட்டம் :: தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் திருவாரூர் நாகூர் புகைவண்டிப் பாதையில் உள்ள கீழ்வேளூர் நிலையத்திலிருந்து 1 கல் தொலைவில் உள்ளது. திருவாரூர் நாகப்பட்டினம் பெருவழிப் பாதையிலுள்ளது. சமயகுரவர் களில் மூவரான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் இக்கோயிலைச் சிறப்பித்துப் பதிகம் பாடியுள்ளனர். முருகன் இப்பூவுலகில் பூசித்த தலமாகையால் கீழ்வேளூர் எனப் பெயர்பெற்றது.

இங்கு ஆனி மகத்திருவிழாவும், ஐப்பசி மாதத்தில் கந்தர் சஷ்டி விழாவும், மார்கழி மாதத்தில் நிறைபணி விழாவும் சிறப்புடையன.

இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அஞ்சுவட்டத் தம்பாள் மிகவும் சக்திவாய்ந்த தெய்வமாகக் கருதப்படுகிறாள்.

நிர்வாக அதிகாரி

திரு. L. சங்கரகுத்தாலம்

அறங்காவலர்கள்:

திரு. M. D. தியாகராஜ பிள்ளை (தலைவர்)

திரு. A. R. கோவிந்தராஜ பிள்ளை

திரு. S. K. கோவிந்தராஜு நாயுடு

ஸ்ரீ கைலாசநாதசுவாமி திருக்கோயில்

செம்பியமகாதேவி

நாகை வட்டம் — தஞ்சை மாவட்டம்

சரித்திரப் புகழ்வாய்ந்த இத்தலம் கீழ்வேளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே செல்லும் நெடுஞ்சாலையில் தேவூரிலிருந்து தென்கிழக்கே 4 கல் தொலைவில் உள்ளது. இத்திருக்கோயில் செம்பியன்மாதேவியால் கட்டப்பட்டது.

நிர்வாக அதிகாரி
திரு. சு. பன்னீர்செல்வம்

அறங்காவலர் குழு:

திரு. S. K. கோவிந்தராஜுலு நாயுடு (தலைவர்)
திரு. B. வாசுதேவ நாயுடு
திரு. P. சுப்பிரமணியன்

ஸ்ரீ தாமோதர நாராயணப்பெருமாள் திருக்கோயில்

திருக்கண்ணங்குடி

கீழ்வேளூர் வழி :: நாகை வட்டம்

இத்திருக்கோயில் திருவாரூர் நாகூர் புகைவண்டிப் பாதையில் கீழ்வேளூர் நிலையத்திலிருந்து கிழக்கே $1\frac{1}{2}$ கல் தொலைவில் உள்ளது. திருவாரூர் நாகப்பட்டினம் பெருவழியில் ஆழியூரிலிருந்து தெற்கே $1\frac{1}{2}$ கல் தொலைவில் உள்ளது. இத்தலம் 108 வைணவத் தலங்களில் ஒன்று. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது.

இங்கு சித்திரைப் பெருவிழாவும், மார்கழி அத்யயனவிழாவும், மாசிமகவிழாவும் சிறப்புடையன.

அறங்காவலர்கள்:

திரு. S. குருசாமிப்பிள்ளை (தலைவர்) திரு. T. N. ராமசாமி முதலியார்
திரு. S. கோவிந்தராஜுலு நாயுடு திரு. T. S. ராஜம் ஐயங்கார்
திரு. T. ஆபதோத்தாரண செட்டியார்

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

எட்டுகுடி

நாகை வட்டம் — தஞ்சை மாவட்டம்

திருக்கோயிலுக்குச்செல்ல நாகப்பட்டினத்திலிருந்தும், திருவாரூரிலிருந்தும், திருத்துறைப்பூண்டியிலிருந்தும் பேருந்து வசதிகள் இருக்கின்றன. இத்தலம் அருணகிரி நாதரால் பாடல் பெற்றது. வன்னிமரம் தலவிருட்சம். வால்மீகி முனிவர் அடக்கம். மூலவர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஒரு அரிய அடைப்பு.

இங்கு நடைபெறும் கந்தர்சஷ்டி விழாவும், சித்திரா பௌர்ணமி விழாவும் மிகவும் சிறப்புடையன.

நிர்வாக அதிகாரி

திரு. G. சோமசுந்தரம் B. Sc.,

அறங்காவலர்கள் :

திரு. M. சுவாமிநாத முதலியார் (தலைவர்)

திரு. V. செல்வராஜ்

திரு. S. நடராஜபிள்ளை

திரு. R. துரைசாமித்தேவர்

திரு. P. சிங்காருவாய்க்காரர்

ஸ்ரீ சிவலோகநாதசுவாமி திருக்கோயில்

திருப்புன்கூர்

சீர்காழி வட்டம் :—: தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் சென்னை மாயவரம் புகைவண்டிப் பாதையில் வைத்தீஸ்வரன் கோயில் நிலையத்திற்கு மேற்கே 1½ கல் தொலைவில் உள்ளது. நந்தனாருக்கு நந்தி விலகிக் காட்சிகொடுத்த தலம். சமயகுரவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியவர்களால் பாடல் பெற்றது. மழையை வேண்டிப் பிரார்த்தனை செய்யும் தலம்.

நிர்வாக அதிகாரி

K. கிருஷ்ணமூர்த்தி முதலியார்

அறங்காவலர்கள் :

திரு. *P. கல்யாணசுந்தரம் பிள்ளை* (தலைவர்)
திரு. *L. சிதம்பரம்*, B. E.,
திரு. *R. தங்கவேலு*, B. A., B. L.,

ஸ்ரீ ஜம்புகேசுவரர் அகிலாண்டேசுவரி திருக்கோயில்

திருஆனைக்காவல் — திருச்சி - 5

தொன்மையான திருக்கோயில். மிகப்புனிதமான திருத்தலமாம். ஆதி சங்கரரால் தாடங்கம் சாத்தப்பட்ட ஆலயம். கோபூசை உலக நன்மைக்காக நடந்துவரும் கோயில். கலைச்செல்வம் நிறைந்தகோயில். ஆலயத் தூய்மைக்காகப் பரிசு பெற்றிருக்கும் திருக்கோயில்.

இங்குப் பெருமளவில் நடந்துவரும் திருப்பணிக்கு இன்னும் தேவை ஐந்து லட்சம் ரூபாய். நன்கொடை வழங்க எண்ணுவோர் நிர்வாக அதிகாரி முகவரிக்கு அனுப்பவும்.

தலைவர்,
திரு. தி. மு. நாராயணசாமி பிள்ளை,
திருப்பணிக்குழு.

நிர்வாக அதிகாரி,
திரு. வி. முருகன்,
செயலாளர்.

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

குமாரவயலூர் திருச்சி மாவட்டம்

இத்திருக்கோயில் திருச்சியிலிருந்து மேற்கே 6 கல் தொலைவில் உள்ள சோமரசம்பேட்டையின் அண்மையில் உள்ளது. இங்கு அருணகிரிநாதருக்கு 'கைத்தல நிறைகனி' எனத் துவங்கித்திருப்புகழ் பாடும்ஆற்றலைத்தந்த பொய்யாக் கணபதி சந்நிதி இருக்கிறது. மக்கள் முக்கியமாகக் கருதும் ஸ்ரீ சுப்பிரமணியர் வள்ளி தேவசேனா சமேதராக விளங்குகிறார். சித்தர்களால் பூசிக்கப்பட்டதற்குச் சான்றாக இங்குச் சித்தர்தோப்பு என்னும் சித்தர் ஊர் இருக்கிறது. கந்தர் சஷ்டியும், பங்குனி உத்திரமும், வைகாசி விசாகமும் சிறந்த திருவிழாக்களாகும்.

அறங்காவலர் : நிர்வாக அதிகாரி

திரு. ஆ. சி. லிங்கய்யன் செட்டியார் (தலைவர்) திரு. அ. சேதுரத்தினம்

திரு. எம். கோபாலன் நாயர்

திரு. ஜி. ஆர். கல்கிவரதராஜுலு செட்டியார்

ஸ்ரீ சுவர்ணபுரீசுவரசுவாமி திருக்கோயில்

செம்பொன்னார்கோயில்

மாயவரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயவரம் - தரங்கம்பாடி புகைவண்டிப் பாதையில் செம்பொன்னார் கோயில் நிலையத்திலிருந்து கிழக்கே ½ கல் தொலைவிலுள்ளது. சமயகுரவர்களில் இருவரான சம்பந்தரும் நாவுக்கரசரும் இத்தலத்தைப் பாடியுள்ளார்கள். ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் 7ம் நாள் முதல் 18ம் நாள் முடிய 12 நாட்கள் கதிரவனின் கிரணங்கள் மூலத்தான மூர்த்தியின்மேல் விழுவதால் அந்நாட்களில் விசேட பூசைகள்செய்து பெருந்திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

நிர்வாக அதிகாரி

திரு. மு. ஆறுமுகம்

அறங்காவலர்கள் :

திரு. சொ. ராமமூர்த்தி பிள்ளை திரு. ச. சந்திரசேகரன் பிள்ளை

திரு. இரா. பாண்டுரெங்க நாயுடு திரு. க. திருஞானசம்பந்த முதலியார்

திரு. வீ. சோமசுந்திர முதலியார்

ஸ்ரீ சாரங்கபாணிசுவாமி திருக்கோயில்

கும்பகோணம் தஞ்சை மாவட்டம்

MARA PUBLIC LIBRARY
OCT 1964
MADRAS

சோழமன்னர்களால் கட்டப்பட்ட இத்திருக்கோயில் மிக வனப்புடையது. வைணவத் திருத்தலங்களான 108 திருக்கோயில்களில் இந்தக் கோயிலும் ஒன்ருகும். பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமிழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் ஆகிய எழுவரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலில் திருமிழிசையாழ்வார் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி உத்தானசயனத்தில் சேவை சாதிக்கிருர்.

சித்திரை மாதத்தில் சைத்ரோத்சவம், வைகாசி மாதத்தில் வசந்த உற்சவம், ஆடி மாதத்தில் ஜேஷ்டாபிடேகம், மார்கழி மாதத்தில் திரு அத்யயன உத்சவம், மாசிமாதம் மக உத்சவமும் தெப்பத்திருநாளும், பங்குனிமாதம் ஸ்ரீ கோமளவல்லித்தாயார் பிரமோத்சவமும் சிறப்புற நடைபெறுகின்றன. ஆலய நிதியிலிருந்து ஏழைகளுக்கு தயிரன்னம் வினியோகம் உண்டு. கோயிலின் சார்பில் ஒரு பிரபந்த பாடசாலேயும் நடைபெறுகிறது.

அறங்காவலர்கள்:

Dr. வி. ராஜகோபாலய்யங்கார் M. B., B. S.,

திரு. ஆர். மாதவராவ் திரு. கே. ராகவாச்சாரி

திரு. என். நவநீதகிருஷ்ணன் பி. ஏ., பி. எல்.,

நிர்வாக அதிகாரி

திரு. என். தியாகராஜன் B. Com.,

திரு. கே. சாமிஞதய்யர்

ஸ்ரீ சீனிவாசப்பெருமாள் திருக்கோயில்

நாச்சியார்கோயில்

கும்பகோணம் வட்டம் **தஞ்சை மாவட்டம்**

இத்திருக்கோயில் கும்பகோணம் – திருவாரூர் பெருவழியில் கும்பகோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே ஐந்து கல் தொலைவில் உள்ள நாச்சியார் கோயில் கிராமத்தில் அமைந்துள்ளது. இங்கிருந்து திருநாகேஸ்வரம், ஒப்பிலியப்பன் கோயில் ஆகிய இடங்களுக்குச் செல்ல பேருந்து வசதியுண்டு. இந்தத் திருக்கோயில் தோன்றிய காலத்தைக் கணக்கிடச் சரியான சான்றுகள் இல்லை. இத்திருக்கோயிலைச் சோழமன்னன் கோச்செங்கணன் செப்பனிட்டு எழிலுறச் செய்தான் என வரலாறு செப்புகிறது.

இத்திருத்தலம் வைணவப் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வாரால் பாடப்பெற்று மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

திருமங்கை ஆழ்வார் இத்திருக்கோயிலைப்பற்றிப் பெரிய திருமொழியில் 6-ம் பத்தில் 70 பாடல்களும், 7-ம் பத்தில் 30 பாடல்களும் மற்றும் பெரிய திருமடல், சிறிய திருமடல் பிரபந்தத்தில் அருளிச்செய்திருக்கிறார்கள். இத்திருக்கோயிலில் ஓர் தங்கும் விடுதியும் இருக்கிறது. நாள்தோறும் 30 சேவார்த்திகளுக்கு அமுதும் படைக்கப்படுகிறது. ஆலய நிதியிலிருந்து ஓர் அன்பு இல்லம் நடத்தப்படுகிறது. இதில் 21 குழந்தைகள் கல்வி கற்றுவருகின்றனர்.

கீழ்க்கண்டவாறு முக்கியத் திருவிழாக்கள் இவ்வாலயத்தில் நடைபெறும்:

1. ஆவணிமாதம் விசாக விண்மீன் திருக்கல்யாணம்.
2. மார்கழிமாதம் வைகுண்ட ஏகாதசி முக்கோடி தெப்போற்சவம்.
3. பங்குனிமாதம் உத்திர விண்மீன் திருத்தேர் பிரமோற்சவம்.

நிர்வாக அதிகாரி

திரு. வி. எஸ். வெங்கிடாசலம்

அறங்காவலர்கள் :

திரு. **பி. ஆர் பொன்னுசாமி** (குழுத்தலைவர்)
திரு. **சி. சி. கிருஷ்ணமூர்த்தி** எம். எல். ஏ.
திரு. **எஸ். சங்கரதாணு பத்தர்**

ஸ்ரீ காயாரோகணசுவாமி ஸ்ரீ நீலாயதாட்சியம்மன் திருக்கோயில்

நாகப்பட்டினம் — தஞ்சை மாவட்டம்

2 OCT 1969



சரித்திரப் புகழ்பெற்ற இவ்வாலயம் மூவராலும் பாடப்பெற்றது. சப்தவிடங்கத் தலங்களுள் சுந்திரவிடங்கரைக்கொண்டது. புண்டரீகமுனிவர், பெருமானைக்காயத்தோடு ஆரோகணித்து முத்தி பெற்றதால் காயாரோகணம் என்ற காரணப் பெயர் பெறுவதாயிற்று. அம்மை கருந்தடங்கண்ணி என அப்பர் தேவாரத்தில் குறிக்கப்பெறுகிறாள்.

அறுபத்திநான்கு சக்தி பீடங்களில் இத்திருக்கோயிலும் ஒன்று. அம்பாளுக்கு ஆண்டுதோறும் ஆடிப்பூரத்திருவிழா பத்து நாட்களுக்குச் சிறப்பாக நடைபெறுகிறது. முத்தித்தலங்கள் மூன்றனுள் ஒன்றாகும். வள்ளலார் இத்திருக்கோயிலுக்கு வருகை தந்து கால்பதித்துச் சென்றுள்ளார். இத் திருக்கோயிலில் உள்ள ஸ்ரீ நாகாபரண விநாயகர் சிலை மிகவும் வனப்புடையது.

நிர்வாக அதிகாரி

திரு. கே. எஸ். கோவிந்தராஜன்

அறங்காவலர்கள் :

திரு. வி. பி. கே. காயாரோகணம்பிள்ளை (குழுத்தலைவர்)

திரு. பி. ஆர். ராமகிருஷ்ணன்

திரு. ஆர். தம்பையா நாயுடு பி. ஏ., பி. எல்.,

ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில்

திருவாரூர்



(திருவாரூர் கோபுரம்)

தென்னாட்டிலே தொன்மை வாய்ந்தபதிகளில் திருவாரூர் மிகப் பழமையுற்ற ஊராகும். இதைப் பிருதுவித் (மண்) தலம் என்பர். இப்பெயருக்கு ஏற்ப இவ்வூரில் கோயில் கொண்டுள்ள அருவுருவத் திருமேனி தாங்கிய இறைவர் வன்மீகநாதராக (புற்றிடங் கொண்டார்) உள்ளார். இப் பெருமான் அமர்ந்துள்ள கருவறையே பூங்கோயில் எனப் படுகின்றது. "பூங்கோயில் உள்ளிருந்து போகா திருந் தாரே" என்பது அப்பர் சுவாமிகளின் அருள்வாக்கு.

தேவாரம் பாடிய மூவரும் மாணிக்கவாசகரும் குமரகுருபரரும் சேரமான்பெருமான் நாயனாரும் அருணகிரியாரும் இத்தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இக்கோயிலின் பரப்பு ஐந்து வேலியாகும்.

இக்கோயில் சிற்பக்கலையிலும் ஓவியக்கலையிலும் தலை சிறந்து விளங்குவது. இத் தலத்துக்கு மேலும் பெருமை தருவன. ஐவேலிப் பரப்பினை உடைய கமலாலயம் என்னும் திருக்குளமும் திருத்தேரும் ஆகும்.

இக்கோயிலில் ஸ்ரீ கமலாம்பாள் ஆடிப்பூர உற்சவமும் மார்கழியில் திருவாதிரையும் பங்குனியில் உத்திரவிழாவும் அதையொட்டிய 3 நாட்களும் தெப்போற்சவமும் மிகச்சிறப்புடைய நிகழ்ச்சிகளாகும்.

நிர்வாக அதிகாரி

திரு. B. கிருஷ்ணசுவாமி

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீ மாசிலாமணீசுவரர் என்னும் ஸ்ரீ கோமுக்தீசுவரர் திருக்கோயில்

திருவாவடுதுறை

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்



இத்திருத்தலம் மாயூரம் கும்பகோணம் பெருவழியில் மாயூரத்திலிருந்து 12 கல் தொலைவிலும் கும்பகோணத்திலிருந்து 12 கல் தொலைவிலும் உள்ளது. கும்பகோணம் மாயூரம் புகைவண்டிப்பாதையில் நரசிங்கன்பேட்டை நிலைபத்திலிருந்து ½ கல் தொலைவில் உள்ளது.

ஒன்பதாம் திருமுறை பாடிய திருமாளிகைத்தேவர் பாடல் பெற்றது

சமயகுரவர்கள் நால்வராலும் பாடப்பெற்றது இத்தலம். சேக்கிழாரும் "ஆவின் அருங்கன்றுறையும் ஆவடுதண் துறை'' எனப்பாடியுள்ளார். இத்தலத்திலே 3000 ஆண்டு திருமூலநாயனர் தவம்புரிந்து 3000 திருமந்திரம் என்னும் தமிழ் மந்திரத்தை நாட்டுக்கு நல்கியுள்ளார். இத்திருக்கோயிலில் தைத்திங்கள்தோறும் நடைபெறும் ரதசப்தமிவிழா சிறப்புடையது.

இத்திருக்கோவில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாட்சியின் கீழ் உள்ளது.

ஸ்ரீ தேனுபுரீஸ்வரஸ்வாமி திருக்கோயில்

பட்டீஸ்வரம்

கும்பகோணம் வட்டம் தஞ்சாவூர் மாவட்டம்

இத்திருக்கோயில் தாராசுரம் புகைவண்டி நிலையத்தின் அருகிலுள்ள பட்டீஸ்வரத்திலுள்ளது. நாராய், நாராய் என்ற அகவலைப்பாடிய சத்திமுற்றப் புலவர் வாழ்ந்தவிடம். இப்பட்டீஸ்வரத்தையடுத்தது திருச்சத்தி முத்தமேயாகும். தேவாரப் பாடல்பெற்ற 274 தலங்களில் காவேரிக்குத் தென்கரையிலுள்ள 127 தலங்களில் இது 23-வது தலமாகும். இத்தலம் இயற்கை வளத்துடன் இயங்குகிறது. திருஞானசம்பந்தப் பெருமானால் பாடல் பெற்றது.

இத்தலம் ஸ்ரீ ராமபிரான் பூசித்து வழிபட்ட பெரும் தலம். ராமபிரான் இங்கு தனது வில்லின் முனையால் கோடி தீர்த்தத்தை ஏற்படுத்தி இருக்கிறார். சோழப் பேரரசர்கள் முடிசூடும் பெருநகரங்களில் ஒன்றான பழையாறையைச் சார்ந்த மழபாடி என்னும் தலமே இப்பட்டீஸ்வரம். இப்பட்டீஸ்வரர் ஆலயத்தைச்சுற்றி திருச்சத்திமுற்றம், வடதளி, திருமேற்றளிகை, சோழன் மாளிகை, சுந்தரப்பெருமாள்கோவில், தாராசுரம், முனையூர், வள்ளலார் கோயில் ஆகிய தலங்கள் உள்ளன.

ஒவ்வொரு வருடமும் ஆனிமாதம் முதல்தேதி அன்று இத்தலத்தில் திருஞானசம்பந்தருக்கு இறைவன் முத்துப்பந்தல் அருளும் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. வடக்குக் கோபுரவாயிலில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ துர்க்கையம்மன் மிகவும் சக்திவாய்ந்த தெய்வமாகும்.

நிர்வாக அதிகாரி

திரு. D. சம்பந்தம்

அறங்காவலர்கள் :

திரு. **கோபு, கோ. கோபாலசாமி செட்டியார்** (குழுத்தலைவர்)

திரு. **R. குப்புசாமி பிள்ளை**

திரு. **N. கிருஷ்ணசாமி அய்யர்**

ஸ்ரீ பசுபதீசுவரர் திருக்கோயில்

பந்தநல்லூர்

கும்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் கும்பகோணத்திலிருந்து வடகிழக்கே 18 கல் தொலைவில் உள்ளது. இத்தலத்திற்கு கும்பகோணத்திலிருந்தும், குத்தாலத்திலிருந்தும் பேருந்து வசதியுள்ளன. தஞ்சாவூர்—மாயவரம் புகைவண்டி மார்க்கத்திலுள்ள குத்தாலம் புகைவண்டி நிலையம் இத் தலத்திற்கு தெற்கே 6 கல் தொலைவில் உள்ளது.

இக்கோயில் பழமையானது. சோழர்காலத்தில் கட்டப்பட்டதாக கருதப்படுகிறது. சென்ற 6–6–69ல் இக்கோவிலுக்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மிக சிறப்பாக நடைபெற்றது. திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் இத்திருக்கோயில் பாடல் பெற்றுள்ளது. இத்திருக்கோயிலை தென்கயிலை என்றும், கோவூர் என்றும், கொன்றைவனம் என்றும், பானுபுரம் என்றும், இந்திரபுரி என்றும், கண்ணுவர் ஆச்சிரமம் என்றும், வாலிநகர் என்றும், ஆவூர் என்றும் அழைக்கின்றார்கள்.

ஸ்ரீ பசுபதீசுவரருக்கு மாசி மகத்தில் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

நிர்வாக அதிகாரி

திரு. சோமசுப்பையர்

அறங்காவலர்கள் :

திரு. P. மணிப்பிள்ளை
மேலாளும் பரம்பரை அறங்காவலர்

திரு. P. பெத்துராஜபிள்ளை
பரம்பரை அறங்காவலர்

ஸ்ரீ சாரநாதப்பெருமாள் திருக்கோயில்

திருச்சேறை

கும்பகோணம் வட்டம் :: தஞ்சை மாவட்டம்

இந்தத் திருக்கோயில் குடந்தை புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே திருவாரூர் செல்லும் சாலையில் 9 கல் தொலைவில் உள்ளது. குடந்தையிலிருந்தும், திருவாரூரிலிருந்தும் இங்குசெல்லப் பேருந்து வசதி உண்டு. சோழமன்னர்களால் கட்டப்பட்ட இந்த ஆலயம் திருமங்கை ஆழ்வாரால் பாடப்பெற்றது.

"உண்ணாது வெங்கூற்றம் ஓவாது பாவங்கள் சேரா மேல்
விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும் மென்தளிர்போ லடியி னானைப்
பண்ணார வண்டியம்பும் பைம்பொழில்சூழ் தண்சேறை யம்மான் தன்னைக்
கண்ணாரக் கண்டுருகிக் கையாரத் தொழுவாரைக் கருதுங் காலே"

பெருமாளுக்கு இங்கு ஐந்து லட்சுமிகள் உண்டு. பெருமாளின் திருக்கையில் கமலமலர் உள்ளது. ஆலய நிதியிலிருந்து பசுமடம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

தைமாதத்தில் தைப்பூசத் திருவிழா இங்கு நடைபெறுகிறது. இத்திருக்கோயிலைத் தவிர வேறு எந்த விஷ்ணு ஆலயத்திலும் தைப் பூசத் திருவிழா நடைபெறுவதில்லை. ஆவணிமாதத்தில் திருப்பவித்ரோத் சவம், புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழா, ஐப்பசி மாதம் மணவாள மாமுனி விழா, கார்த்திகை, மார்கழி மாதங்களில் திருவாய்மொழித் திருநாள் ஆகியவை இங்கு முக்கிய விழாக்களாகும்.

நிர்வாக அதிகாரி
திரு. N. ஈசுவரமுத்து M. A.,

அறங்காவலர்கள் :

திரு. S. குஞ்சிதபாதம் அய்யர் B. A. (குழுத்தலைவர்)
திரு. S. R. G. ரெங்கநாதன் செட்டியார் திரு. K. ராமதாஸ் அய்யர்
திரு. G. பரமசிவ உடையார் திரு. T. S. கோவிந்தராஜன்

ஸ்ரீ சுவாமிநாதசுவாமி திருக்கோயில்

சுவாமிமலை (திருவேரகம்)

குடம்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்

ஆறுமுகனுக்குகந்த ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய இந்தத்தலம், தஞ்சாவூர் கும்பகோணம் புகைவண்டிப்பாதையில் சுவாமிமலை புகைவண்டி நிலையத்திலிருந்து $\frac{3}{4}$ கல் தொலைவிலுள்ளது. ஆண்டொன்றுக்கு $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் வருமானமுள்ள இவ்வாலயத்திற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மாதக்கார்த்திகை மற்றும் திருவிழாக்களுக்கு மக்கள் திரளாக வருகின்றனர்.

இத்தலத்து முருகவேள் தந்தைக்கு உபதேசித்த ஞானதேசிகன். இவரை மெய்யன்புடன் வழிபட்டோர் உண்மை ஞானத்தைப் பெறுவர் என்பது நம்பிக்கை. அருணகிரிநாதரால் நாற்பது திருப்புகழ் பாடல்களும், நக்கீரரால் திருமுருகாற்றுப்படையும் பாடப்பெற்றது. சமயக்குரவர்கள் நால்வரில் ஞானசம்பந்தரால் தேவாரமும், நாவுக்கரசரால் திருக்குருந்தொகை திருத்தாண்டகமும் பாடப்பெற்றது.

ஐப்பசி மாதத்தில் நடைபெறும் கந்தசஷ்டி விழாவும், கார்த்திகை மாதத்தில் நடைபெறும் திருக்கார்த்திகை விழாவும், பங்குனி மாதத்தில் நடைபெறும் ஸ்ரீ வள்ளி கல்யாணவிழாவும் மிகவும் சிறப்புடையனவாகும்.

நிர்வாக அதிகாரி

திரு. அ. கோபாலசுவாமி உடையார் *பி. ஏ.,*

அறங்காவலர்கள் :

திரு. டி. எஸ். சுவாமிநாத உடையார் *எம். எல். ஏ., (தலைவர்)*

திரு. டி. வி. சுப்பிரமணிய அய்யர்

திரு. ஆர். சுப்பிரமணியம் *பி. ஏ.,*

திரு. பி. ராமசாமித்தேவர்

திரு. ஜி. சுந்தரராஜ வன்னியர்

ஸ்ரீ

திருபாசமுத்திரப்பெருமாள் திருக்கோயில்

சிறுபுலியூர்

கொல்லுமாங்குடி அஞ்சல் — நன்னிலம் வட்டம்

இத்திருக்கோயில் மாயவரம் – திருவாரூர் புகைவண்டிப் பாதையில், கொல்லுமாங்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 1 கல் தொலைவில் உள்ளது. தெற்கு நோக்கியுள்ள ஆலயத்தின் நுழைவாயிலில் 75 அடி உயரம் உள்ள இராசகோபுரம் உள்ளது. புலிக்கால் முனிவர் வழிபட்டதாலும், முனிவருக்கு எம்பெருமான் பாலசயனமாய் சேவை அளித்ததாலும் இந்தத் தலம் சிறுபுலியூர் என வழங்கலாயிற்று.

108 வைணவத் திருப்பதிகளுள் இத்தலம் 11 வது பதியாக உள்ளது. திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது. 'கருமா முகிலுருவா, கனலுருவா, புனலுருவா, பெருமாள் வரையுருவா, பிறவுருவா, நினதுருவா, திருமாமகள் மருவும் சிறுபுலியூர் சல சயனத்து அருமா கடலமுதே உனதடியே சரணமே' என்று இத்தலத்தினைப் பாடுகிறார்.

இங்கு ஐப்பசி மாதத்தில் ஸ்ரீ மணவாளமாமுனிகளது பத்து நாள் திருவிழாவும், 10-வது நாள் சாற்றுமுறைத் திருவிழாவும், மார்கழி மாதத்தில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி திருவிழாவும், மாசிமாதம் வளர்பிறை ஏகாதசியில் அனந்தாழ்வாருக்கு பெருமாள் சேவைதரும் திருவிழாவும், வைகாசி மாதம் பிரமோற்சவத் திருநாளும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்தலம் இயற்கைக் காட்சிகள் நிறைந்த குளிர்ந்த சோலைகளுடையது. சூரியன், அனந்தன், துர்வாசர், மணவாளமாமுனிகள் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றது. சமயபேதமின்றிச் சிவனடியார்களும், வைணவ அடியார்களும், வழிபட்ட பதி இது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் பெருமை உடையது.

நிர்வாக அதிகாரி

திரு. ஆர். ஒய்யாணன் *பி. ஏ.,*

அறங்காவலர்கள் :

திரு. கே. எம். குருசாமிப்பிள்ளை (*தலைவர்*)

திரு. கே. ஜெகந்நாத அய்யங்கார்

திரு. பி. ஜெயராஜ் *எம். எல். ஏ.*

ஸ்ரீ ஆதிகும்பேசுவரசுவாமி திருக்கோயில்

கும்பகோணம்

இத்திருக்கோயில் மிகத் தொன்மையானது. சோழமன்னர்களும், நாயக்க மன்னர்களும் இத்திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளனர். வான் அளாவிய கோபுரத்தைக்கொண்ட இந்த ஆலயத்திற்கு மூன்று பிரகாரங்கள். நான்காவது பிரகாரம் தேரோடும் வீதி. இத்திருக்கோயிலை,

" அரவிரி கோடனீட லணிகா விரியாற் றயலே
மரவிரி பொதுமௌவல் மணமல் லிகைகள் ளவிழும்
குரவிரி சோலை சூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்தா னவனெம் மிறையே "

எனத் திருஞானசம்பந்தரும்,

" பூவணத் தவன் புண்ணிய னண்ணியங்
காவணத் துடை யானடி யார்களைத்
தீவணத் திரு நீறுமெய் பூசியோர்
கோவணத் துடை யான்குட மூக்கிலே "

என்று திருநாவுக்கரசரும் பாடியுள்ளனர்.

இந்த ஆலயத்திலுள்ள மூலத்தான லிங்கம், பிரளயத்தில் மிதந்துவந்த அமுத கும்பத்தை இறைவன் வேட வடிவங்கொண்டு அம்பு எய்து உடைத்து, சிதறிய பாகத்தைத் தன் கரங்களால் ஒன்றுசேர்த்துக் கும்பம்போன்ற லிங்கவடிவ மாக்கித் தானே அதைப் பூசைசெய்து லிங்கத்தில் ஒன்றிவிட்டதாகக் கூறப்படு கிறது. இறைவனுக்கு அமுதகும்பேஸ்வரர் என்றும் தேவிக்கு மங்களநாயகி என்றும் பெயர்.

இத்திருக்கோயிலில் நடைபெறும் கீழ்க்கண்ட உற்சவத் திருவிழாக்கள் சிறப்புடையன. புரட்டாசி மாதம் நவராத்திரிவிழா, மாசி மாதம் மாசிமகவிழா, பங்குனி மாதம் தெப்பத்திருவிழா, சித்திரை மாதம் சப்தஸ்தானம், வைகாசி மாதம் திருக்கல்யாணம்.

12 ஆண்டுகட்கு ஒருமுறை திருக்குடந்தையில் நடைபெறும் "மகாமகப் பெருவிழா" இத்தலத்தை முக்கியமாகக்கொண்டது. 12 வருடங்களுக்கு ஒரு முறை குரு சிம்மராசியிலும் சந்திரன் கும்பராசியிலும் வரும் மாசி மக நட்சத் திரத்தில் முழுமதி நன்னாளில் மகாமகத் தீர்த்தம் நடைபெறும்.

நிர்வாக அதிகாரி

திரு. எம். எஸ். சண்முகம்

அறங்காவலர்கள் :

திரு. சு. பத்மநாபன் (குழுத்தலைவர்)

திரு. சி. திருவேங்கடம், திரு. ஜி. கே. சுந்தரம்பிள்ளை

ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரசுவாமி திருக்கோயில்

அம்பல்

நன்னிலம் வட்டம் **தஞ்சை மாவட்டம்**

பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்தினின்று தென்கிழக்கில் 3 கல் தூரத்தில் "அம்பல்" எனத் தற்காலப்பெயருடன் உள்ளது. பேருந்து வசதியுண்டு.

தலச்சிறப்பு: திருமுறையில் 54-வது தலமாக வைக்கப்பெற்றுள்ளது. ஞானசம்பந்தரின் பாமாலைகொண்டது. அறுபான்மூவரில் ஒருவரான சோமாசிமாறனர் அவதரித்த தலம். சங்ககால சோழமன்னன் கோச்செங்கணான் இங்கு இறைவனுக்கு மாடக்கோயில் எடுப்பித்தனன்.

இறைவன்பெயர்: பிரமபுரீசுரர். இறைவிபெயர்: பூங்குழல்நாயகி. தீர்த்தம்: அன்னமாப் பொய்கை. தலவிருட்சம்: புன்னை. இங்கு பிரமன் பூசித்து அன்ன உரு நீங்கப்பெற்றார். காமன் சாபம்நீங்கித் தன்தொழில் கைவரப்பெற்றான்.

3-ஆம் குலோத்துங்கசோழன் மதுரையும், ஈழமும், கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி:

திரு. சி. கந்தசாமிப்பிள்ளை (குழுத்தலைவர்) **திரு. சுவாமி வேங்கடாசலம்**

திரு. மு. சிதம்பரம் பிள்ளை **திரு. வே. மாசிலாமணிப் பிள்ளை**

திரு. சு. தனுஷ்கோடிப் பிள்ளை **திரு. கனகசபைப் பிள்ளை.**

ஸ்ரீ பார்வதீசுவரசுவாமி திருக்கோயில்

இஞ்சிக்குடி

நன்னிலம் வட்டம் **தஞ்சை மாவட்டம்**

சந்தன மரத்தைத் தல விருட்சமாகக் கொண்டுள்ள இந்த ஆலயத்திற்கு "கந்தவனம்" என்று மறு பெயருமுண்டு. இத்தலம் மாயவரம் – திருவாரூர் புகைவண்டிப் பாதையில், பேரளம் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே அரை கல் தொலைவிலுள்ளது. மாயவரம், திருவாரூர், நன்னிலம் ஆகிய இடங்களிலிருந்து பேருந்து வசதியும் உண்டு.

இத்திருக்கோயிலைக் குறித்து அருணகிரிநாதரும், இரட்டைப் புலவர்களும் பாடியுள்ளனர். இங்கு வைகாசி விசாகத்திருவிழா பிரம்மோற்சவமாக ஆண்டு தோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

திரு. கே. சீனிவாச அய்யர் (தலைவர்) **திரு. சி. தட்சணாமூர்த்தி** பி. ஏ.,

திரு. எஸ். கந்தசாமிப் பிள்ளை, திரு. எஸ். நடராசன்,

திரு. கொ. முத்து, திரு. எஸ். இராமனுதன்.

ஸ்ரீ அக்னீசுவரசுவாமி திருக்கோயில்

திருப்புகலூர்

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

சமய குரவர்கள் நால்வரில், மூவரால் பாடல்பெற்ற இத்தகைய தலம் மாயவரம் திருவாரூர் புகைவண்டிப் பாதையில், நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே மூன்று கல் தொலைவில், நன்னிலம் நாகைப் பட்டினம் பெருவழிப்பாதையில் உள்ளது. உழவாரப்பணியின் சிறப்பை உலகிற்கு எடுத்தியம்ப வந்த திருநாவுக்கரசர் பெருமானுர் இறைவனுடன் இரண்டறக் கலந்த தலம் இதுவேயாகும். அகழால் சூழப்பெற்ற திருக் கோயில் அழகாக அமைந்துள்ளது.

நாயன்மார்களில் ஒருவரான ஸ்ரீ முருகநாயனுர் இந்தத் தலத்திலே தோன்றி, மடம் நடாத்தி, மலர்த்தொண்டாற்றி, அப்பர், சம்பந்தர், சிறுத் தொண்டர், திருநீலநக்கர் ஆகியோருடன் உடனுறைந்து பயன் பெற்றிருக் கிருர். சுந்தரர் செங்கற்களைத் தலையணையாக வைத்து, துயில்கொண்டு பொன் கற்களாக்கிப் பரவையாருக்குக் கொடுத்திருக்கிருர். இத்திருக்கோயில் வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர் ஆதிக்கத்திற்குட்பட்டது.

இத்திருக்கோயிலின் சார்பில் பசுமடம் ஒன்றும், சித்தவைத்தியசாலை கள் இரண்டும், வேதசிவாகம தேவாரப் பாடசாலை ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. ஆலய நிதியிலிருந்து ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. வழிபடுவோர் வந்து தங்குவதற்குத் தங்கும் விடுதிகள் அமைக்கப்பெற்றுள்ளன.

திருக்கோயில் லிங்கம் சுயம்புலிங்கம். மூலவருக்கு ஸ்ரீ அக்னீஸ்வரர் என்றும், கோணப்பிரான் என்றும் பெயர்கள் உண்டு. அசுரவம்சத்தைச் சேர்ந்த பாணுசுரன் தன் தாயாரின் சிவபூசைக்கு அடையாளம் காட்டும் வண்ணம் லிங்கம் சற்று வடக்கே சாய்வாக இருப்பதை இன்றுங்காணலாம்.

நாவுக்கரசருக்கு இங்கு 10 தினங்கள் விசேடத்திருநாள் நடைபெறு கின்றது. அதையொட்டித் திருமுறை மாநாடும் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீலஸ்ரீ அஜபாநடேசுவர பண்டாரசந்நிதிகள்
(வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர்)
பரம்பரை நிர்வாக அறங்காவலர்

திரு. வி. நாராயணன் பி. ஏ.,
(பொருளாளர்)
நிர்வாக அதிகாரி

ஸ்ரீ ரெத்தினகிரீஸ்வரசுவாமி திருக்கோயில்

திருமருகல்

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

சோழவள நாட்டில் பாடல்பெற்ற தலங்களுள் சிறப்பு மிக்கது இத்திருக் கோயில். குசகேது மன்னர் காலத்தில் கட்டப்பட்டதாக வரலாறு. கோச்செங்கண் சோழரால் எழுப்பப்பெற்ற மாடக்கோயில்களில் இதுவும் ஒன்று. இங்குறையும் இறைவன் திருநாமம் இரத்தினகிரீசுவரர். இறைவி பெயர் ஆமமாதாளகநாயகி. தமிழில் இறைவனை மாணிக்கவண்ணர் என்றும் இறைவியை வண்டுவார்குழலி என்றும் அழைக்கப்படுகிறது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் இவர்களால் பாடல்பெற்றது இத்தலம். மாயவரம் - காரைக்குடி புகைவண்டிப்பாதையில் நன்னிலம் புகை வண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஏழுகல் தொலைவிலுள்ளது இத்திருக்கோயில். இவ்வூரில் சீராளன் கல்வி பயின்றதாக வரலாறு.

சித்திரை மாதத்தில் 10 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. திருவிழாவில் 6-வது நாள் நடக்கும் செட்டிப்பிள்ளைக்கு விடம்தீர்த்த திருவிழா சிறப்புடையது.

அறங்காவலர்கள் : — நிர்வாக அதிகாரி

திரு. G. கோவிந்தசாமி நாயுடு (தலைவர்) — திரு. C. V. சிகிவாகனன் நாயர் B. Sc.

திரு. C. T. இராமனுதன் செட்டியார், திரு. V. கோவிந்தசாமி.

ஸ்ரீ வாஞ்சிநாதசுவாமி திருக்கோயில்

திருவாஞ்சியம்

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இக்கோயில் தமிழகத்திலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களுள் ஒன்றாகும். திருமகளை வாஞ்சித்து (அடைய விரும்பி) திருமால் பூசித்த தலமாதலால் இத்தலம் திருவாஞ்சியம் என்று பெயர்பெற்றது. நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 6 கல் தொலைவிலும், நன்னிலம் பேருந்து நிலையத்திலிருந்து மேற்கே 4 கல் தொலைவிலும் உள்ளது இத்தலம்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல்பெற்றது இத்திருக் கோயில். இத்தலத்து முருகனை அருணகிரியார் பாடியுள்ளார். இறைவன் பெயர் வாஞ்சியநாதர். இறைவிபெயர் வாழவந்தநாயகி. 27 கல்வெட்டுகள் இங்குள்ளன.

இக்கோயிலில், அம்பாளுக்கு ஆடிப் பூர உற்சவமும், சுவாமிக்கு மாசிமகத் திருவிழாவும் நடைபெறுகிறது. இத்தலம் காவிரியின் தென்கரையில் உள்ள தலங்களுள் 70-வது தலமாகும்.

அறங்காவலர்கள்: — *நிர்வாக அதிகாரி :*

திரு. R. ராஜேஸ்வரன் — திரு. S. கோலப்பன் B. A.,

திரு. N. சாம்பசிவ சர்மா — திரு. R. மாசிலாமணி.

ஸ்ரீ வீரகோதண்டராமசுவாமி திருக்கோயில்

தில்லைவிளாகம்

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்



எழில் மிகுந்த இவ்வாலயத்திற்கு வருகைதந்து ஸ்ரீ வீரகோதண்டராமரைத் தொழும் அன்பர்கள் வாழ்வில் வளம்பெறுவர் என்பது நம்பிக்கை. இத்திருக்கோயில் குடமுழுக்குவிழா வருகிற தைத்திங்களில் நடைபெறவிருக்கிறது. தமிழக அரசின் மானியத்தொகையிலிருந்தும், இடும்பாவனம் ஸ்ரீ சுகுணநாதசுவாமி கோயில் உபரி நிதியிலிருந்தும் கிடைக்கப்பெற்ற பணத்தினால் திருப்பணி நடந்து வருகிறது. (அன்பர்கள் திருப்பணிக்கும், குடமுழுக்கு விழாவிற்கும் கீழ்கண்ட முகவரிக்குப் பணம் அனுப்பிவைக்க வேண்டப்படுகிறார்கள்.)

நிர்வாக அதிகாரி

ஸ்ரீ கோதண்டராமசுவாமி திருக்கோயில்

தில்லைவிளாகம்.

ஸ்ரீ உத்தராபதீசுவரசுவாமி திருக்கோயில்

திருச்செங்காட்டங்குடி

நன்னிலம் வட்டம் **தஞ்சை மாவட்டம்**

சமய குரவர்களில் சம்பந்தராலும், அப்பராலும் பாடல்பெற்ற இத்தலம் நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து 6 கல் தொலைவிலும், நன்னிலம் நாகப்பட்டினம் பெருவழிப் பாதையில் திருப்புகலூருக்குத் தென்கிழக்கில் 2 கல் தொலைவிலுமுள்ளது. விநாயகர் கயமுகாசூரனை வென்று சிவபெருமானை வழிபட்ட காரணத்தினால் கணபதீசுவரம் என்றும், கயமுகாசூரனின் இரத்தம் பெருகி செங்காடுபோல் காட்சி அளித்தமையால் செங்காடு எனவும் பெயர் பெற்றது. சிறுத்தொண்டரின் அவதாரத்தலமும் இதுவே. திருக்கோயில் சோழ அரசர்களாலும், பல்லவர்களாலும் அமைக்கப்பெற்றது. வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர் இந்த ஆலயத்தின் பரம்பரை நிர்வாக அறங்காவலராக இருந்துவருகிறார்.

சித்திரை பரணியில் இங்கு நடைபெறும் அமுதுபடையல் விழாவிற்கும் திருவோணத்தன்று நடைபெறும் ஐயடிகள் காடவர்கோன் காட்சித் திருவிழாவிற்கும் தமிழகமெங்குமிருந்து மக்கள் பெருவெள்ளமென வருகின்றனர். திருக்கோயில் நிதியிலிருந்து மக்களுக்குக் குடிநீர் வசதிசெய்து தரப்பட்டுள்ளது. திருக்கோயிலுக்குப் புதிய இராசகோபுரம் அமைக்கப்பெற்று வருகிறது.

அறங்காவலர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அஜபா நடேசுவர பண்டாரசந்நிதிகள்,
வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர்.

நிர்வாக அதிகாரி
திரு. இரா. செயச்சந்திரன்,
பொருளாளர்.

ஸ்ரீ சாட்சிநாதசுவாமி திருக்கோயில்

அவளிவநல்லூர்

பாபநாசம் வட்டம் **தஞ்சை மாவட்டம்**

தஞ்சை - நாகூர் புகைவண்டிப் பாதையிலுள்ள அம்மாப்பேட்டையிலிருந்து வடக்கே 4 கல் தொலைவிலுள்ளது. இக்கோயில் ஞானசம்பந்தராலும் நாவுக்கரசராலும் பாடல்பெற்றது. புல்லாரண்யம், சாட்சிநாதபுரம், பாதிரிவனம் என முப்பெயர்கொண்டது இத்திருத்தலம். இறைவனது பெயர் சாட்சிநாதர். இறைவியின் திருப்பெயர் சௌந்திரநாயகி. தை மாத அமாவாசையின்போது நடைபெறும் ஏகதினவிழா மிகவும் சிறப்புடையது.

அறங்காவலர்கள்:
திரு. T. கைலாசத்தேவர்,
திரு. A. சீனிவாசத்தேவர்,
திரு. K. V. கலியபெருமாள்.

நிர்வாக அதிகாரி
திரு. C. முத்துரெத்தினம்

ஸ்ரீ உத்தமர் திருக்கோயில்

(திருமூர்த்திகள் தலம்)

உத்தமர் கோயில் — திருச்சி மாவட்டம்

இத்தலம் திருச்சி சென்னை புகைவண்டிப்பாதையில் திருச்சி சந்திப்பிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள உத்தமர்கோயில் புகைவண்டி நிலையத்தினருகில் உள்ளது. இங்கு மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் ஒருங்கே அமைந்திருப்பதால் திருமூர்த்திகள் தலம் எனப் பெயர்பெற்றது. 108 திருப்பதிகளில் ஒன்றான இத்தலம் திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்விக்கப்பட்டுள்ளது.

அறங்காவலர்கள் :

திரு. N. S.ராஜுப்பிள்ளை (தலைவர்)

திரு. R. V. P. ராமசாமிப்பிள்ளை

நிர்வாக அதிகாரி

திரு. D. புருடோத்தமன்

ஸ்ரீ வேதபுரீசுவரசுவாமி திருக்கோயில்

நேமம், எழிலூர் அஞ்சல்

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

சமயகுரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற இத்தலம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ளது. இறைவர் திருநாமம் வேதபுரீசுவரர். இறைவி வேதநாயகி. திருக்கோயிலின் மேற்கில் உள்ள திருக்குளத்தில் நீராடுவோர் பொன்மயமானமேனி பெறுவர் என்பது நம்பிக்கை.

நிர்வாக அதிகாரி

திரு. ஏ. மாணிக்கம் பி. ஏ.,

அறங்காவலர்கள் :

திரு. கோ. பழனிசாமிபிள்ளை (தலைவர்)

திரு. ரெ. கோவிந்தசாமி நாயுடு, திரு. சா. இராமச்சந்திரன்

திரு. சொ. மாணிக்கம், திரு. அ. வரதராசராயர்

ஸ்ரீ தாயுமானவர் திருக்கோயில்

திருச்சிராப்பள்ளி

" சிராப்பள்ளி குன்றுடையானைக் கூறஎன்னுள்ளம் குளிரும்மே "

நவீன கருவிகளில்லாத அற்றை நாளில், இக்குன்றின்மீது பெரும்பகுதி கருங்கற்கூறைகளால் வேயப்பட்ட இப்பெருங்கோயிலை அமைத்தது நம்முடைய முன்னோர்களின் அரிய சாதனையாகும். கி. பி. ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்த மகேந்திர வர்ம பல்லவன் குடைவித்த இம்மலையிலுள்ள குகைக்கோயில் நம் உள்ளத்திற்கு உவகையூட்டுவதாம்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டதாயினும் கி. பி. 9, 13, 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் முறையே சோழர், பாண்டியர், விஜயநகரப்பேரரசு வழியினர் குறுநில நாயக்க மன்னர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட இக்கோயிலின் சுற்றமைப்பும் பராமரிப்பும் போற்றத்தக்கதாகும்.

இம்மலையின் மேலிருந்து நாம் காணும் இயற்கை எழிலும் நகரப்பொலிவும் நம் உள்ளத்து உயர்வுகளை மிக உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்கின்றன.

நிர்வாக அதிகாரி
திரு. வி. வாசகபெருமாள்

அறங்காவலர்கள்:
திரு. ஆர். கிருஷ்ணசாமிரெட்டியார் *(நிர்வாக தர்மகர்த்தர்)*
திரு. ஏ. டி. பி. தேவராஜபிள்ளை, திரு. வே. பிச்சைக்காரன்.

ஸ்ரீ சௌந்தரேசுவரசுவாமி திருக்கோயில்

பேட்டை — முத்துப்பேட்டை அஞ்சல்

திருத்துறைப்பூண்டி வட்டம் — **தஞ்சை மாவட்டம்**

திருமேனியழகரது இத்திருக்கோயில் முத்துப்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. அம்பிகையின் திருநாமம் வடிவழகி. இறைவன் திருமேனியழகர். சிவலிங்கமூர்த்தியாக மிகப்பெரிய மூர்த்தியாக காட்சிதருகிறார். இறைவனை சுக்ரீவன் முதலானோர் வழிபட்டதாக வரலாறு.

சித்திரை மாதத்தில் இத்திருக்கோயிலில் நடைபெறும் பெருந்திரு விழா மிகவும் சிறப்புடையது.

அறங்காவலர்கள் : — *நிர்வாக அதிகாரி*

திரு. K. S. **சிவராமதேவர்** (தலைவர்) — திரு. R. **கோவிந்தராஜன்** B. Sc.,
திரு. A.N.S.T.S. **சோமசுந்தரம்** திரு. Pr.Nn.A. **தேவராஜன் செட்டியார்**

ஸ்ரீ வில்வாரண்யேசுவரர் திருக்கோயில்

திருக்கொள்ளம்பூதூர்

செல்லூர் அஞ்சல் தஞ்சை மாவட்டம்



இத்திருக்கோயில் திருக்குடந்தை கொரடாச்சேரி நெடுஞ்சாலையில் செல்லூரிலிருந்து மேற்கே 1 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. தஞ்சை திருவாரூர் புகைவண்டிப் பாதையிலுள்ள கொரடாச்சேரி புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே 4 கல் தொலைவிலுள்ளது. ஞானசம்பந்தப்பெருமான் தன் அடியார்கள் சூழவேல் நாவலமே கோலாகக்கொண்டு பதிகம் ஓதி ஓடம் செலுத்தி ஆற்றைக்கடந்து அக்கரைசேர்ந்து எம்பெருமானைத் தரிசிக்கவர, ஏறுதாங்கிய இறைவன் தேவியுடன் காட்சிதந்த அற்புதம் நிகழ்த்திய திருத்தலமிது. தேவாரப் பாடல்பெற்ற தலங்களில் காவிரித் தென்பால் அமர்ந்த 113 ஆவது திருத்தலம் திருக்கொள்ளம்பூதூர்.

சம்பந்தப்பெருமான் திருப்பதிகம் ஓதி (முள்ளியாறு) வெட்டாற்றைக் கடக்க ஓடம் செலுத்தி அடியவர்களை வாழ்வித்த அற்புத நிகழ்ச்சியைக்கொண்ட ஐதீகப் பெருவிழா. ஆண்டாண்டுதோறும் ஐப்பசித் திங்கள் அமாவாசை நன்னாளில் வெட்டாற்றில் தீர்த்தோற்சவப் பெருவிழாவும் அதற்கடுத்த நன்னாளில் ஓடோற்சவப் பெருவிழாவும் இன்னும் நடைபெற்று வருகின்றது. வழிபாட்டிற்கு வரும் அன்பர்கள் தங்குவதற்கு இங்கு விடுதி ஒன்று இருக்கிறது.

நிர்வாக அதிகாரி

திரு. எஸ். வைத்தியநாதன் பி. ஏ.,

அறங்காவலர்கள்:

திரு. பெ. ராம. ராம. சித. இராமன் செட்டியார் B. Com., (தலைவர்)

திரு. பெ. ராம. லெ. இராமநாதன் செட்டியார்.

திரு. லெ. அ. வயி. அண்ணாமலைச் செட்டியார்.

திரு. க. ரெத்தினசாமி வாண்டையார்.

ஸ்ரீ வேதாரண்யேசுவரசுவாமி திருக்கோயில்

வேதாரண்யம் (திருமறைக்காடு)

திருத்துறைப்பூண்டி வட்டம் **தஞ்சை மாவட்டம்**

அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் ஆகிய மூன்று சமயக்குரவர்களாலும் பாடப்பெற்ற புராதன புண்ணிய ஸ்தலம். இங்கு ஆடி, தைமாத அமாவாசைகளிலும், அர்த்தோதயம், மகோதயம் முதலிய புண்ணிய காலங்களிலும் சமுத்ரஸ்நானம் செய்வது விசேஷ பலனை அளிக்கும். வேதங்களால் பூஜித்துப் பூட்டப்பட்டதும், அப்பர் சுவாமிகளால் கதவு திறக்கப்பட்டதும், அகஸ்தியமா முனிவருக்கு ஈஸ்வரனும் பார்வதியும் திருமணக்கோலத்தில் காட்சி அளித்ததும், இந்த ஸ்தலத்தில் முக்கிய அம்சங்களாகும். இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரி மிக சக்தியுள்ள தெய்வம். வேண்டுவோருக்கு வேண்டுவன அளிக்கும் வரப்பிரசாதி.

இயாழ்ப்பாணம் வரணி ஆதீனம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ ச. கதிர்காம பண்டாரசந்நிதி
பரம்பரை தர்மகர்த்தா

நிர்வாக அதிகாரி
எஸ். ரெங்கசாமி

உ

திருப்பாவை - திருவெம்பாவை மத்தியக் குழு,

19, பெரியகடைத்தெரு, மாயூரம்.

குழந்தைகள் மார்கழி மாதத்தில் என்ன செய்யவேண்டும்?

அருமை குழந்தைகளே!

1. மார்கழி மாதம் பிறக்குமுன் திருப்பாவை - திருவெம்பாவை இவைகளை மனப்பாடம் செய்யுங்கள். மார்கழி 30 நாளும் காலையில் நீராடி, ஆண்டவனை நினைத்து பாடல்களைசொல்லிக்கொண்டு ஊர்வலம்வாருங்கள்.

2. திருவெம்பாவை 20 பாடல்களையோ அல்லது திருப்பாவை 30 பாடல்களையோ தெளிவாகவும், அழகாகவும் பாட பழகிக்கொள்ளுங்கள்.

3. குழந்தைகளே, இப்பொழுதே மனப்பாடம் செய்ய ஆரம்பித்தால் தான் மார்கழி மாதம் ஆரம்பத்திற்குள் மனப்பாடம் ஆகும்.

4. மார்கழி நீராடுங்கள், ஊர்வலம் வாருங்கள், தூங்கும் குழந்தைகளையும், பெரியவர்களையும், பாட்டுப்பாடி எழுப்புங்கள். ஆயுள் பூர்ணமாக ஆனந்தமாக வாழுங்கள்.

குழுவினர்.

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை - 9

தேதி 6—10—1969

தமிழ் மன்னர் வரலாற்றில் தனி இடம் கொண்டவர் ராஜராஜசோழர். தமிழர்களின் கட்டிடக்கலைக்கொரு சான்றாக அவர் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில் காலம் உள்ள அளவும் கதைகள் பல சொல்லி நிற்கும். சீரிய நிர்வாகத்திறனும், சமயத்தொண்டும் ராஜராஜரின் தனிச் சிறப்புக்களாகும்; தமிழ் இனத்தைத் தலைநிமிர்ந்துநிற்கச் செய்வனவாகும்.

தஞ்சையில் ராஜராஜசோழரின் சதயத்திருநாள் விழா சிறப்பாக நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். விழா இனிது நடந்தேற எனது நல்வாழ்த்துக்கள்.

மு. கருணாநிதி

துணைத்தலைவர்,

இராஜராஜசோழன் சதயத்திருநாள் விழாக்குழு,

தஞ்சாவூர்.

CONNEMARA PUBLIC LIBRARY
2 OCT 1969



மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள்
தமிழக முதல்வர்

மாண்புமிகு கே. வி. சுப்பையா அவர்கள்
தமிழக அறநிலைய அமைச்சர்

கே. வி. சுப்பையா, பி. ஏ.,
அறநிலைய அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை - 9
தேதி: 22—9—1969

PUBLIC LIBRARY
OCT 1969

உலகப் பெருமன்னர்கள் வரிசையில் ஒருவராக விளங்கும் இராஜராஜ சோழன் நினைவினைப் போற்றும் விழா எடுப்பது, தமிழ் மக்கள் அனைவருக்கும் உள்ளக் கிளர்ச்சியும் பெருமையும் தரும் செய்தியாகும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு இந்த விழாவினை, தமிழ்கூறு நல்லுலகம் முழுவதும் அறியும் முறையில் சிறப்பாக நடத்தும் என்று நம்புகிறேன்.

விழாவும் சிறப்பு மலர் முயற்சிகளும் இனிது நிறைவேற என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கே. வி. சுப்பையா

பெறுநர்:

திரு. ஆர். அரங்கசுவாமி,
செயலாளர்,
இராஜஇராஜசோழன் சதயத்திருநாள்
விழாக்குழு, தஞ்சாவூர்.

கா. வேழவேந்தன்,
பி. ஏ., பி. எல்.,
தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 9

20—9—1969

பேரன்புடையீர்,

வணக்கம்.

21—10—69 அன்று தஞ்சையில் இராசராச சோழன் சதயவிழா கொண்டாடவிருப்பதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். தங்கள் விழா வெற்றி பெறவும் தாங்கள் வெளியிட உத்தேசித்துள்ள சிறப்பு மலர் நன்முறையில் அமையவும் எனது மனமுவந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தங்கள் அன்புள்ள,
கா. வேழவேந்தன்

செயலாளர்,
இராசராசசோழன் சதயத்திருநாள்
விழாக்குழு, தஞ்சாவூர்.

உ

CONNEMARA PUBLIC LIBRARY
20 OCT 1969
MADRAS

ஸ்ரீ-ல-ஸ்ரீ
அம்பலவாண பண்டாரச்சந்நிதி அவர்கள்
ஆதீனகர்த்தர்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை
(தஞ்சை மாவட்டம்)

ஆசியுரை

ஸ்ரீ ஞானமா நடராசரது திருவருளால் ஸ்ரீ இராசராச சோழ தேவர் சதயநாள் விழா சிறப்பாக நடைபெற வேண்டுமென்று நாம் சதா சிந்தித்திருக்கிறோம்.

தன்னுடைய குலதெய்வமான ஸ்ரீ நடராசப் பெருமானிடம் விசேட பக்தியுடைய இராசராச சோழர் பெயர் உலகமுள்ளளவும் நிலை பெறும் பொருட்டுச் செய்துள்ள நற்செயல்கள் பல புலவர் பெரு மக்களால் என்றும் பாராட்டுதற்குரியன. திருமுறை கண்ட சோழ ராகவும், சிவபாதசேகரராகவும் விளங்கிய இராசராசசோழர் எடுப்பித்த தஞ்சை இராசராசேச்சுரத்திலேயே அவரது விழாக் கொண்டாடப் பெறுவது வேறு எவருக்கும் எக்காலத்தும் நிகழாத பெருஞ் சிறப்பு உடையதாகக் கருதுகிறோம். அவர் ஆட்சிக்காலம் 985 - 1014 ஆகும்.

"தொல்லைத் திருமரபிற் கெல்லாம் தொழுகுலமாம், தில்லைத் திருநடனம் சிந்தித்து" விளங்கிய இராசராச சோழருடைய சதயத் திருநாளைக் கொண்டாடுவதுடன் அமையாமல், அவ்'விழா மலர்' ஒன்றையும் மலர்வித்து, மக்கள் உள்ளத்தில் நாடோறும் உள்ளும்படி செய்யும் விழாக்குழுப் பேரன்பர்கள் பெருந்தொண்டு இன்றியமையாத தொன்றும் என்று நாம் எண்ணுகிறோம். அவர்கள் என்றும் நல் வாழ்வு பெற்றுச் சிறப்புறுவாராக.

உ

குருபாதம்

தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம் P. O.
20—9—1969.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

தமிழ்நாட்டை ஆண்ட முடியுடை மூவேந்தர்களில் சிவநெறித்தொண்டில் சிறந்து விளங்கியவர்கள் சோழமன்னர்களேயாவர். இவர்கள் வழிவழியாக என்றும் மாருத சிவநெறியை மேற்கொண்டவர்கள். 'மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறி கருதாத் தெய்வக் குடிச்சோழர்' என்று இவர்களை நம்பியாண்டார் நம்பிகள் பாராட்டுகின்றார். தில்லைக் கூத்தப்பெருமானே சோழ மன்னர்களின் குலதெய்வமாக விளங்குபவன். கோச்செங்கட்சோழர், புகழ்ச்சோழர் போன்றவர்கள் நாயன்மார் திருக்கூட்டத்தில் இடம் பெற்றவர்கள். கோச்செங்கட்சோழர் எண்தோள் ஈசற்கு எழுபது மாடக்கோயில் எடுத்தவர்.

காவிரியின் இருமருங்கிலும் எண்ணற்ற சிவாலயங்கள் சோழ மன்னர்களால் கற்றளிகளாகக் கட்டப்பெற்றன. இவர்களுள் முதல் இராஜராஜ சோழன் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவன். சிவபக்திச் சிறப்பால் இவன் சிவபாதசேகரன் என அழைக்கப்படுகிறான். தில்லைக்கோயிலில் மறைந்திருந்த தேவாரத்திருமுறைகளை வெளிப்படுத்தித் தமிழகமெங்கும் திருமுறை மணம் கமழச்செய்த பெருமைக்குரியவன் இம்மன்னன். இதனால் இவன் 'திருமுறை கண்ட சோழன்' என வழங்கப்பெற்றான்.

இராஜராஜசோழன் தான் பெற்ற வெற்றிச்சின்னமாகப் பிறவற்றைச் செய்யாமல் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை அமைத்திருத்தல் போற்றற்குரியது. இந்தத் திருக்கோயில் சிற்பக்கலைக்கும் பிறவற்றிற்கும் எடுத்துக் காட்டாய் இலங்குவது. இத்திருக்கோயிலில் தேவாரத் திருப்பதிகங்களை விண்ணப்பம் செய்ய ஓதுவார் பலரை இவன் நியமித்திருந்தமை கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. இவன் பிறந்த சதயநாள் விழா இவன் காலத்திலேயே சிறப்புறக் கொண்டாடப்பெற்றது.

இதனை இன்று இவ்விழாக் குழுவினர் பல்வகைச் சிறப்புக்களுடன் சிறப்புறக் கொண்டாடவும், விழா மலர் ஒன்று வெளியிடவும் முன்வந்திருப்பது பாராட்டற்குரியது.

விழாமலர் இனிது மலரவும், விழா இனிது நிகழவும், பங்கு கொள்ளும் அன்பர் பலரும் எல்லா நலன்களும் எய்தி இன்புறவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் முன்னிற்பதாக.

HIS HOLINESS
KASIVASI ARULNANDI TAMBIRAN AVL.,
TIRUPANANDAL
(TANJORE Dt.)

Dated 17—9—1969.

உ

சிவ சிவ

சிவபாதசேகரன் இராசராச சோழன் சதயநாள் விழா நினைவு மலர் இந்த ஆண்டு வெளியிடப்பெறுவது குறித்து மகிழ்ச்சி.

கி. பி. 985 - 1014 வரை அரசாட்சி செய்தவனும், சைவ சமயத்துக்கு மிக்க ஆக்கம் அளித்தவனும், நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு திருமுறை தொகுப்பித்தவனும், தஞ்சையில் இராசராசேச்சரம் என்ற கோயில் எடுப்பித்து நாற்பத்தெண்மர் பிடாரர்களை நியமித்து நாடோறும் திருப்பதிகம் விண்ணப்பம் செய்விக்கச் செய்தவனும், செந்தமிழ் நாட்டைப் பூலோக சிவலோகமாக்கியவனும், சிவபாதசேகரன் என்ற பட்டப்பெயர் பூண்டு கொண்டவனுமாகிய முதலாம் இராசராச சோழன் பிறந்த நாளாகிய சதயநாள் விழா தஞ்சைப் பெரிய கோயிலில் இந்த ஆண்டும் நடத்தப்பெறுவது சாலச்சிறந்ததாகும்.

இராசராசன் சைவசமய பரிபாலனம், கோயில் பரிபாலனம் செய்தது போலவே மகாராஷ்டிர அரச பரம்பரையில் வந்தவர்களும் தொடர்ந்து தஞ்சை பெரிய கோயில் முதலிய கோயில்களைப் பரிபாலனம் செய்து வருவது சாலப் பொருத்தமேயாகும்.

இராசராச சோழன் சதயத்திருநாள் விழாக்குழுவுக்குத் திருவண்ணாமலை ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள் (குன்றக்குடி அடிகளார்) தலைமை தாங்குவது மிகவும் பொருத்தமானதே. அவர்கள் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றி இளஞ்சிறார்களைச் சமயத் தொண்டாற்றச் செய்வது போற்றற்குரியது. அவர்களின் அருந்தொண்டை நன்கு உணர்ந்து தமிழ்நாடு அரசு முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள், தவத்திரு அடிகளாரைத் தமிழக மேல்சபை உறுப்பினராக ஆக்கியது பாராட்டத் தக்கதே. தவத்திரு குன்றக்குடி அடிகளாரை அறநிலைய அமைச்சராக ஆக்கின் தமிழ்நாடு மற்ற மாகாணங்களுக்கு எடுத்துக் காட்டாகத் திகழும்; ''மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திட'' என்ற சேக்கிழார் வாக்குக்கு இலக்காகும்.

ஷை சதயத்திருநாள் விழாவிற் பங்கு கொள்பவர் அனைவர்க்கும் செந்திலாண்டவன் திருவருள் மல்குவதாகுக.

சிவ சிவ

நெ. கிருஷ்ணசாமி ரெட்டி
ஹைகோர்ட் ஜட்ஜ்,

சென்னை
25—9—1969.

தமிழ் மக்களின் சீரிய பண்பை இத்தரணிக்கெல்லாம் எடுத்து இயம்பும் வகையில் தஞ்சைத்தரணியை ஆண்டு விஞ்சிய புகழெய்திய ராசராசசோழ மன்னனின் நினைவாக சதயவிழா எடுத்து மலர் வெளியிடுவதை எண்ணி மகிழ்கிறேன். பன்னெடுங்காலத்திற்கு முன்பே இம்மண்ணில் வாழ்ந்துவந்த மக்களின் பண்பாட்டையும் அருளுணர்வையும் அவனிக்கு எடுத்தியம்பும் வகையாக, மாமன்னரான ராசராசன் எடுத்த பெருவுடையார் கோயிலை எண்ணும்பொழுது அந்த மன்னனது இறையுணர்வும் அவ்வுணர்வில் அவன் உளம் நெகிழ்ந்த நெகிழ்வும் தெள்ளத் தெளிய விளங்குகிறது. சதய விழாவும், நினைவு மலரும் வெற்றிகரமாக அமைய எனது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

நெ. கிருஷ்ணசாமி ரெட்டி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்
காஞ்சிபுரம்.

முகாம்: காஞ்சீபுரம். தேதி: 4—10—1969.

தஞ்சையில் இராஜராஜேச்வரம் கோயிலைக்கட்டி உலகில் ஒப்பற்ற புகழ்பெற்ற முதலாம் இராஜராஜன் சதயத்திருநாள் தெய்விக விஷயங்களில் ஈடுபாடு உடைய அறநிலையப் பாது காப்புத்துறைத் துணை ஆணையர் திரு. சிங்காரவேலு B. A., B. L., அவர்கள் முயற்சியால் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு சென்ற வருஷம் விமரிசையாகக் கலைவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

இவ்வருஷமும் இவ்விழாவை நடத்தவும், இவ்விழாவை முன்னிட்டு, பல்வேறு ஆலயங்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் அடங்கிய மலரை வெளியிடவும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை அறிந்து ஸ்ரீ மஹாஸன்னிதானத்தில் ஸந்தோஷிக்கிறார்கள்.

தெய்வ பக்தியையும் நம் ப்ராசீன கலைகளையும் வளர்ப்பதில் ஆர்வமுடைய அன்பர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு எல்லா மங்களங்களையும் அடையும்படியாக ஸ்ரீ மஹாஸன்னிதானத்தில் அனுக்ரஹிக்கிறார்கள்.

ஆக்ஞைப்படி
V. Kalyanasundharam
மானேஜர்

Justice *B. S. Somasundaram*
B. A., B. L.,

Phone : 75757
" SABARIGIRI "
GREENWAYS ROAD,
MADRAS-28.
2-10-69

தமிழ் நாட்டில் பெரிய கோயில் என்று குறிப்பிட்டால் அது தஞ்சைப் பெரிய கோயிலைத்தான் குறிக்கும். ஆயிரம் வருடங்களுக்கு முன் தஞ்சையிலிருந்து அரசாண்ட சோழ சாம்ராஜ்ய சக்கரவர்த்தியான இராஜராஜன் கட்டிய கோயில் இது. சதயத்தில் தோன்றிய அவருக்கு 'சதய விழா' எடுத்து, விழா மலர் வெளியிடுவது பாராட்டத்தக்கது. எனது ஆசி.

விழா நல்ல முறையில் நடந்தேற, எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வ. சொ. சோமசுந்தரம்

Justice Sadasivam

Phone : 61546

" ANANDASHRAMAM "
2-14, ORMES, ROAD, KILPAUK,
MADRAS - 10.

26th September, 1969.

The Brahadeeswarar Temple, also known as the Big Temple, Thanjavur, is an ancient famous shrine in South India. The Temple is famous not only as a place of pilgrimage for religious devotees, but also as an architectural wonder, which attracts people from all countries. The great stone Nandi of a huge dimension, the Brahmanda Kal, the big granite stone, of the central gopuram and the paintaings around the sanctum sanctorum are objects of great interest to foreign and local visitors. Every Hindu, and particularly the Saivites of South India, should be grateful to the great First Raja Raja Chola, who constructed the Temple, and it is but appropriate that we should celebrate annually the Arpasi Sathaya Day on which he was born.

I wish the three day function to be held in October of this year every success.

Sadasivam

ஆ. இராதாகிருஷ்ணன்,
எம். ஏ., பி. எல்.,
முன்னாள் ஆணையாளர்.

சென்னை
3—10—1969.

தஞ்சையில் பெருவுடையாருக்கு ஒரு மாபெரும் ஆலயம் எழுப்புவித்து தனது இறையுணர்வை வையகமெங்கும் வெளிப்படுத்தினான் மாமன்னனான இராஜராஜன். இப்பெருமன்னனது பிறந்ததின விழாவை நன்முறையில் கொண்டாடவேண்டும் என்கிற எண்ணம் முதன் முதலாக சென்ற ஆண்டில் தஞ்சை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் திரு. டி. என். சிங்காரவேலு, பி. ஏ., பி. எல்., அவர்களது இதயத்திலே தோன்றி வெளி வந்தது. அதன் பயனாக சென்ற வருடத்தில் தமிழக மக்களெல்லாம் வியக்கும் வண்ணம் தஞ்சையிலே அறநிலைய ஆட்சித்துறையின் ஆதரவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்னாரது உழைப்புக்கு உறுதுணையாக நின்றார் தஞ்சை அரண்மனை அறநிலைய அலுவலக மேலாளராகப் பணியாற்றிய திரு. எஸ். ஆறுமுகம், பி. ஏ., அவர்கள்.

மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்களும் அறிஞர் பெருமக்கள் பலரும் விழாவில் பங்கு பெற்று சிறப்பித்தனர். அந்த விழாவை வர்ணிக்க முடியாது. காட்சியைக் கண்டவர்கள்தான் அந்த விழாவின் சிறப்பை நினைத்து மகிழமுடியும். சென்ற ஆண்டைப்போலவே இவ்வருடமும் சதய விழாவெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்கிறேன். அத்துடன் சதயவிழா நினைவாக ஒரு சிறப்பு மலரும் வெளியிடயிருப்பதை அறிந்து மிக்க மகிழ்கிறேன். சதய விழாவும் நினைவு மலரும் நன்முறையில் அமைய எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
ஆ. இராதாகிருஷ்ணன்.

prof. A. M. Paramasivanandam,
M. A., M. Litt.
Professor and Head of the Dept. of Tamil
Pachaiyappa's College, Madras - 30.

TAMIL KALAI ILLAM
MADRAS-10
26-9-69

தஞ்சை பெரியகோயில் தமிழ்நாட்டின் ஒளிவிளக்கு. அதனை அமைத்த இராசராசன் தமிழ் மன்னர்களில் தலைசிறந்தவன். தமிழக வரலாற்றிலேயே அவனுக்கு நிகராகக் கலைவளர்த்த மாமன்னரைக் காண இயலாது. அவனது நாளாகிய ஐப்பசிச் சதயத்திருநாளைத் தமிழர் ஒவ்வொருவரும் நிறை கூர்வது கடமையாகும். அந்நாளைப் போற்றுமுகத்தான் விழா எடுப்பதும் மலர் வெளியிடுவதும் சாலச்சிறந்த செயல்களாகும்.

இராசராசன் தமிழர்தம் புகழ் விளங்கக் கலைக்கோயில் கண்டான். தமிழர் தம் புறவாழ்வு மட்டுமின்றி அகவாழ்வாகிய உள்ளொளியும் அக்கலை நலத்தில் அழகுறக் காட்டப்பெற்றுள்ளது. தமிழர்தம் உள்ளம் போன்று உயர்ந்த கோபுரமும் மதிலும் கலை நலமும் பிறவும் உலகில் வாழும் பலநாட்டு மக்களாலும் போற்றப்பெறுகின்றன. தமிழர் அக்கலை நலத்தைக் காத்தோம்பக் கடமைப் பட்டுள்ளனர். 'பெரியகோயில்' என்ற பெயர் அக்கோயிலுக்கே பொருந்தும். அப்படியே பெருங்கலை நலம் அங்கே விளங்குகின்றது. தமிழர் வாழ்வு தரணியில் என்றென்றும் சிறக்கும்வகையிலும் அவ்வகை வாழ்வின் செம்மையை உலகு உணர்ந்து போற்றும் நெறியிலும் அக்கலைக்கோயில் காட்சித் தருகின்றது. அதை அமைத்த பெருமன்னன் இராசராசன் புகழ் சிறப்பதாக! அவன் நினைவில் விழாவாற்றும் தங்கள் தொண்டு தழைப்பதாக!

அன்புள்ள,

அ. மு. பரமசிவானந்தம்.

★

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீ வடவாரண்யேசுவரர் திருக்கோயில்

திருவாலங்காடு

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் – கும்பகோணம் பெருவழியில் மாயூரத்திலிருந்து 10 கல் தொலைவிலும், மாயூரம் கும்பகோணம் புகைவண்டிப்பாதையில் நரசிங்கன்பேட்டை நிலையத்திலிருந்து ஒன்றரைக்கல் தொலைவிலும் உள்ளது.

திருநாவுக்கரசு சுவாமிகள் இத்தலத்தை வைப்புத்தலமாக வைத்துப் பாடியுள்ளார். ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சிக்கு உட்பட்டது.

இக்கோயில் சிறிதாயினும் மிகுந்த இயற்கை எழிலோடு பொருந்தி அடியார்களைக் கவர்ந்து ஈடுபடுத்தக்கூடிய சிறப்பு வாய்ந்ததாகும்.

Justice S. Maharajan
Judge, High Court.

MADRAS
15th Sep. 1969.

ராஜராஜன் வளர்த்த தமிழும்
பண்பாடும் சமய உணர்வும் வாழ்க.

எஸ். மகராஜன்.

ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி திருக்கோயில்

வழுவூர்

மாயவரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயவரம் - திருவாரூர் புகைவண்டிப் பாதையில் உள்ள இலந்தங்குடி நிலையத்திலிருந்து 1 கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. தேவாரம் பாடிய மூவராலும் பதிகங்களில் பெயர்மட்டும் குறிக்கப்பெற்றவை வைப்புத் தலங்கள் எனப்படும். இப்பகுதியில் 249 தலங்கள் உள்ளன. இவைகளில் வழுவூர் ஒன்று.

இத்தலம் அட்ட வீரட்டானங்களில் யானையை உரித்த தலம் ஆகும். அமாவாசைதோறும் தீர்த்தவாரி நடைபெறுகிறது. மாசி மாதம் மகநாளில் பௌர்ணமியன்று உதயகாலத்தில் பெருமான் யானையை சம்காரம் செய்து நடனக்காட்சி தருகிறார். மார்கழி மாதத்திலும் திருவாதிரை நாளில் உதயகாலத்தில் கோயிலுக்குள் யானை உரித்தபெருமான் நடனம் நடைபெறும். திருவாதிரைக்கு முன்தினம் இரவில் யானையுரித்த பெருமான் வெண்மை அலங்காரத்துடன் காட்சிதருவார். இதர விழாக்களில் ஆனித் திருமஞ்சனம், ஆடிப்பூரம், நவராத்திரி ஆகிய விழாக்கள் சிறப்புடையன. இந்த திருக்கோயில் நிதியிலிருந்து ஏழை மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கப்படுகிறது.

நிர்வாக அதிகாரி

திரு. எஸ். சுப்பிரமணியம்

அறங்காவலர்கள் :

திரு. எம். பழனிவேலு

திரு. எம். மாணிக்கம் பி. ஏ., பி. எல்,

திரு. சி. இராஜகோபாலன் பி. எஸ்ஸி., பி. எல்.,

CONNEMARA PUBLIC LIBRARY
20 OCT 1969
MADRAS



கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I. A. S.

(ஆணையாளர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை)

வாழ்த்துச் செய்தி

கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I. A. S.
(ஆணையாளர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை)

நமது தமிழகத்தில் உள்ள எண்ணற்ற பல கோயில்களுள், ஒப்புயர்வற்ற கலைநலத்தினாலும், கட்டிட அமைப்புத் திறனாலும், வரலாற்றுப் புகழினாலும், மிகவும் தலைசிறந்தோங்குவது, தஞ்சைப் பெரிய கோயில். "உலகத்திலே கோயில்கள் கட்டுதலில் ஈடும் எடுப்பும் அற்றுச் சிறந்து திகழ்பவர்கள் தமிழர்கள்; இந்தியாவிலேயே மிகவும் சிறந்ததொரு பெருங்கோயிலாக எழில் மிக்கு விளங்குவது தஞ்சைப் பெரியகோயிலாகும்" என, அயல்நாட்டறிஞர்களும், இக்கோயிலின் எழில்மிக்க இனிய தோற்றத்தினைக் கண்டு, வியந்து புகழ்ந்து போற்றி மகிழ்ந்து இன்புறுகின்றனர். "தமிழர்களின் கட்டிடக் கலையின் உச்சநிலைக் கீர்த்திக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக எழில்மிக்கு விளங்குவது, தஞ்சைப் பெரிய கோயிலே" எனத் துணிந்து கூறலாம்.

தஞ்சையில் உள்ள இப்பெரியகோயில் என்னும் பிரகதீசுவரர் கோயிலைக் கட்டியவர், முதலாம் இராசராசன் (கி. பி. 985 - 1014) என்னும் புகழ்மிக்க சோழப்பேரரசர் ஆவார். போர்த்திறனும் ஆட்சித்திறனும் மிக்க பெருவீரனும் ஆக விளங்கிய இவர் காலத்தில், சோழப் பேரரசு கடல்கடந்த பிற நாடுகளிலும் பரவி, மிக்க வலிவும் பொலிவும் பெற்றுச் சிறந்தோங்கியிருந்தது. இராசராசசோழன் சேரனை வென்றான்; பாண்டியனைப் புறங்கண்டான்; சிங்களரை அடக்கினான்; குடகு நாட்டைக்கவர்ந்தான்; கங்கபாடி கல்யாணி வேங்கிநாடு மாலத்தீவு ஆகியவைகளைக் கைப்பற்றினான்.

இவனது இயற்பெயர் அருண்மொழி வர்மன் என்பது. முதற் பராந்தக சோழனைப் போலத் தில்லைக்கூத்தப்பிரான் கோயிலுக்கு நிபந்தங்கள் அளித்து வழிபட்டமையின், தில்லைவாழ் அந்தணர் இவனது ஆட்சியின் 19-ஆவது ஆண்டில் இராசராசன், சிவபாத சேகரன் என்னும் பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பித்தனர். பாண்டியர்களையும் சேரர்களையும் அடக்கி வெற்றிகொண்டதனால், இவனுக்குப் பாண்டிய குல அசனி, கேரள அந்தகன் என்னும் சிறப்புப் பெயர்கள் வழங்கும். மும்முடிச்சோழன், ஜெயங்கொண்டசோழன் என்பனவும் இராசராசனுக்கு உரிய சிறப்புப் பெயர்களாகும்.

இராசராசசோழன் சிறந்த சிவபக்தன். கலை உணர்ச்சி பெரிதும் மிக்கவன். தில்லைத் திருச்சிற்றம்பலத்தினின்று சைவத் திருமுறைகளைக் கண்டெடுத்தவனும், திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகளைக்கொண்டு அவைகளைத் தொகுத்துத் திருமுறைகளாக வகுக்கச் செய்தவனும், இராசராசசோழனே ஆவன். இசை நடனம் சிற்பம் ஓவியம் முதலிய பல்வேறு கலைகளையும், அவ்வரசன் பெரிதும் ஆதரித்து வளர்த்தான்.

இராசராசன், பெரிய கோயிலுக்கென்று ஏற்படுத்திய நிபந்தங்கள் மிகப் பலவாகும். இக்கோயிலுக்கு வேண்டிய அமைப்புகளுள் ஒன்றேனும் குறைவுபடாமல், அனைத்தும் நிரம்பும்படி செய்வதில், இப்பேரரசன் பெரிதும் கருத்தூன்றி இனிய ஏற்பாடுகள் யாவும் செய்திருந்தான். தான் புரிந்த போர்களில் வெற்றிபெற்றுக் கொணர்ந்த பொருள்கள்

அனைத்தையும், இந்தக் கோயிலுக்கே அளித்தான். ஏராளமான விளைநிலங்களும், விலை உயர்ந்த அணிகலன்களும், பொற்கலன்களும், அவனால் இக்கோயிலுக்கு வழங்கப்பட்டன.

தேவாரத் திருப்பதிகங்கள் பாடுவதற்காக மட்டும், 48 ஓதுவார்கள் நியமிக்கப்பெற்றிருந்தனர். பூத்தொடுத்தல், இசை பாடுதல், நடனமாடுதல் முதலிய கோயில் பணிகளைச் செய்ய, இசையிலும் நடனத்திலும் தேர்ச்சியுற்ற 400 தளிப் பெண்டுகள், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருவித்துக் கோயிலின் அருகே குடியேற்றுவிக்கப்பட்டனர். இசை பயிற்றுவிக்கும் காந்தர்வர்கள் 70 பேர் இருந்தனர். இங்ஙனம் எத்தனையோ அரிய பல ஏற்பாடுகளை 1000 ஆண்டுகளுக்கு முன்னரே அவ்வரசன் செய்திருந்தமை பெரிதும் வியக்கத் தக்கதாக உள்ளது.

இங்ஙனம் வரலாற்றுச் சிறப்பும், கலைச் சிறப்பும், தெய்விகச் சிறப்பும் மிக்கதாக விளங்கும் தஞ்சைப் பெரியகோயில், அருளாளர்களின் பாடல்பெற்ற சிறப்புமுடையதாகத் திகழ்கின்றது. சைவத் திருமுறைகளுள் 9–ஆம் திருமுறையாகிய திருவிசைப்பாவின்கண், கருவூர்த்தேவர் 11 பாடல்களால் இக்கோயிலைப் புகழ்ந்து துதித்துள்ளார். கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் விளங்கிய அருணகிரிநாதர், மூன்று திருப்புகழ்ப் பாடல்களால், இந்தக் கோயிலைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

தமிழ் மக்களின் கலை, நாகரிகப் பண்பு களின் ஒளி நிலையமாகத் திகழும் தஞ்சைப் பெரிய கோயிலையும், அதனை எடுப்பித்த இராசராச சோழப் பெருவேந்தனையும், நாம் பெரிதும் போற்றிச் சிறப்பிக்கக் கடமைப் பட்டிருக்கின்றோம். இராசராச சோழனுக்கு நமது நன்றிக்கடனைச் செலுத்தும்வகையில், சென்ற ஆண்டிற்போலவே இந்த ஆண்டிலும், அவ்வரசன்தோன்றிய ஐப்பசிச் சதயப் பெருநாளில், சிறந்த திருவிழா நிகழவிருப்பது மிகவும் மகிழ்தற்குரியதாகும்.

விழா நன்கு நடைபெறவும், விழாமலர் செவ்விதே அமையவும், தஞ்சைப் பெருவுடையாரின் திருவடிகளை இறைஞ்சி, விழாவிற்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

...MARA PUBLIC ...
2 . OCT 1969
MADRAS

ராஜஸ்ரீ ராஜாராம் ராஜாசாகேப்
சத்ரபதி சீனியர் பிரின்ஸ்.
பரம்பரை அறங்காவலர்

திரு. T. N. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,
துணை ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை தஞ்சை.

நினைவில் நின்றவை

டி. என், சிங்காரவேலு, B. A., B. L.
(துணை ஆணையாளர், அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சை)

தஞ்சையில் ஸ்ரீ பெருவுடையாருக்கு, நிலையானதும் குலையாததுமான ஆலயத்தை எழுப்பிய கோமகனை முதலாம் இராச ராச சோழ மன்னனுக்கு, 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30, 31, நவம்பர் 1, ஆக 3 தினங்கள் சதயப் பெருவிழாவெடுத்தும், பெருவுடையாருக்கு ஒரு மகாபிஷேகம் செய்வித்தும் திருவிழா நடைபெற்றது நாடறிந்த செய்தியாகும்.

இச்சதய விழாவினை பெருமளவில் கொண்டாடவேண்டும் என்கிற எண்ணம் எனது இதயத்தில் எழுந்தது. அதை நான் வெளியிட்டதும், இவ்விழாவைச் சிறப்புற நடத்தி வைக்க தமிழக மகாசந்நிதானங்களும், பொதுமக்களும், முன்வந்து மனமுவந்து அமோக ஆதரவு கொடுத்தார்கள். ஆகவே மக்கள் ஆதரவின் தூண்டுதலால், அப்போது தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு சி. ஜி. ரெங்கபாஷ்யம் I. A. S. அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவினர் விழாவை மிக நல்ல முறையில் நடாத்த விழாவிற்குப் பொதுமக்களிடம் இருந்து உதவித் தொகையாக ரூபாய் 17,767 - 97 கிடைக்கப் பெற்றது- இது தவிர பெருவுடையார் பெருமுழுக்கிற்காக சுமார் ரூபாய். 20,000/ பெருமானமுள்ள பொருள்களும் வந்துசேர்ந்தன. இவ்விழா விற்கு தமிழ்நாட்டின் மடாலயங்களின் குறிப்பாக, திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடம் இவர்களின் அருள், பொருள், உதவி சொல்லில் அடங்கா. விழா நாள் 30-10-68 காலை தஞ்சை பெரிய கோவிலிலிருந்து மூன்று யானைகளின் பேரில் திருமுறை ஓலைச்சுவடிகள் வைத்து 48 ஓதுவார்கள் தேவாரங்கள் முழங்க நகர் வலம் வந்தன. திருப்பனந்தாள் காசிமடம், அதிபர் அவர்கள் முன்னிலையில் 48 ஓதுவார்களைக் கொண்டு திருமுறைப்பாராயணம், துவக்கி வைத்து, அந்த ஓதுவார்களுக்கு 48 சோடி வேஷ்டிகள் சன்மானம் வழங்கப்பட்டன. தமிழக அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் உயர்திரு A. ராதாகிருஷ்ணன் M. A. B. L. அவர்கள் தலைமையில் விழா ஆரம்பிக்கப் பட்டது. மாலை திருவாவடுதுறை ஆதீனம் திருவருள் திரு குரு மகாசந்நிதானம் தமது ஆஸ்தான நாதஸ்வர வித்வான்களது நாதம் முழங்க கோவிலுக்குவிஜயம்செய்து சுவாமி அம்மன் மற்றும் சுற்றுப்புற பரிவார தேவதைகளுக்கு விலையுயர்ந்த வஸ்திரம் சாத்தியும், புஷ்பங்களால் அலங்கரித்தும், வழிபாடு செய்வித்து, பிறகு இவ்விழாவிற்கென தென் பிரகாரத்தில் அமைக்கப்பெற்றிருந்த அருண்மொழி அரங்கில் லக்ஷக்கணக்கான மக்கள் முன்பாக அருளுரை வழங்கினர்கள். அதன் பின் பலபெரும் புலவர்களின் சமய சொற்பொழிவுகள் நடைபெற்றன.

31—10—68 ராசராசன் பிறந்த தின வைபவம் ஸ்ரீ பெருவுடையாருக்கும் தேவியாருக்கும் ஸ்ரீ நந்தி எம்பெருமானுக்கும் ஸ்ரீ விநாயகப்பெருமானுக்கும் ஸ்ரீ சுப்பிரமணிய கடவுளுக்கும் ஸ்ரீ சண்டிகேஸ்வரருக்கும்; காலை 9 மணிமுதல் மாலை 3 மணி வரை எங்கும் கண்டிராத மகாபிஷேகம் நடைபெற்றது. 108 கலசங்கள் வைத்து வேதபாராயணம் வைதீக முறைப்படி செய்து தங்கக்குடத்தில் ருத்ராபிஷேகமும் செய்யப்பட்டது.

ஷ மகாபிஷேகத்துக்குப் பொருள்கள் கொடுத்து உதவிய பெருமக்களின் எண்ணிக்கை சொல்ல இயலாது. முக்கியமாக இந்தப் பெருமுழுக்கில் பங்கு கொண்ட ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ தருமை ஆதீனம் ஆகிய இந்த இரு மகா சந்நிதானங்களின் பெரும் உதவி என்றும் மறக்க முடியாது. திருச்சி மாவட்டம் உறையூர் பெரும் வணிகர் சைவத் திரு மு. ஆ. அருணாசல முதலியார் அவர்கள் இம்மகா அபிஷேக விழாவில் பெரும்பங்கு கொண்டு நடத்திவைத்தாரென்றால் அதுமிகையாகாது முதலியார் அவர்கள் தஞ்சை பெரியகோயிலிலுள்ள 232- பரிவார தேவதைகளுக்கும் வஸ்திரங்கள் சாத்தி சுவாமி அம்மனுக்கு தனியாக விலையுயர்ந்த ஆடைகள் தனித் தனியாக தயார்செய்து அணிவித்ததும் திருச்சியிலிருந்து அபிஷேகப் பொருள்கள், சொல்லில் அடங்காத அளவு வருவித்து புஷ்பம் சாத்தி அலங்கரித்ததும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மாலை 4 மணி முதல் ராசராசன்விழா. இவ்விழாவிற்காக மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் உயர்திரு சா. கணேசன் M L A., திரு P. G. கருத்திருமன் M L A., திரு K. M. பாலசுப்பிரமணியம், திரு T. M. நாராயண சாமிபிள்ளை, திரு K. A. P. விஸ்வநாதன், ஔவை சு. துரைசாமிபிள்ளை, திரு வெள்ளை வாரணர், புதைபொருளாராய்ச்சி திரு T. N. ராமச்சந்திரன், K. R. சௌந்தரராசன், திருச்சி A. I. G. டைஸ், தஞ்சைமாவட்ட நீதிபதி ஜனாப் கமாலுதீன் இவர்களின்சொற்பொழிவுகளும், கடைசியில் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரையும் நிகழ்ந்தன. அதன்பின் பெரிய வெள்ளி விருஷப வாகனத்தில் அலங்கரிக்கப்பட்ட விமானத்தில் ஸ்ரீ சண்டிகேஸ்வர சுவாமி அம்மன் நகர்உலா எழுந்தருளியது. மேலும், உலாவின்முன் சிலம்பு ஆட்டம், கத்திச் சண்டை, பொய்க்கால் குதிரை, மேளம், பியாண்டு இவைகள் விளங்க ஊர்வலம் வெகு சிறப்பாக அமைந்திருந்தது.

மூன்றாவது நாளான 1—11—68 மாலை 5-மணி அளவில் பட்டி மண்டபம் துவங்கப்பட்டது.

ராசராசன் விஞ்சிய புகழுக்குக் காரணம் 'கலைவாணியே' 'சமயப்பணியே' என்கிற தலைப்பில் பேச்சு நிகழ்ந்தது. உயர்திரு. கி. வா. ஜெகன்னாதன் நடுவராக இருந்தார். மேற்படி பட்டி மண்டபத்தில் புலவர் திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, புலவர். நடராசன், புலவர். மு. கணபதி, புலவர். P. சத்தியசிவன், புலவர் சா. பாலசுந்தரம், புலவர் காத்தய்யன், புலவர் ராசகோபாலன் முதலானோர் கலந்து கொண்டார்கள்.

இவ்வாறாக விழாபூர்த்தி அடைந்தது. விழாவிற்கு தஞ்சை திரு G. முருகையன் அவர்கள் நல்லமுறையில் பந்தல் வகையரா போட்டுக் கொடுத்தார். தஞ்சை முருகன் ரேடியோஸ் உரிமையர், திரு முருகைய்யா பிள்ளை பெரிய விமானத்திற்கு மின்விளக்கு அலங்காரம் செய்தும், விழாப்பந்தலுக்கு மின்விளக்குகள் ஒலிபெருக்கி முதலானவைகள் அமைத்தும் உதவினார்.

இவ்விழாவின் நிகழ்ச்சிகளை திருச்சி ஆல் இந்தியா ரேடியோ நிலையத்தினர்கள் ஒலிப்பதிவுசெய்து ஒலிபரப்பினார்கள். தமிழ் நாடு அரசு செய்திச்சுருள் எடுத்தார்கள். 31–10–68 அன்றுச் 'சோழநாடு சோறுடைத்து' என்ற பழமொழிக்கு ஈடாக தஞ்சை நகர் நாற்புறமும் ஏழைகளுக்கு பெரும் அளவில் அன்னம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் விழாவுக்கு சிலதினங்களுக்கு முன்பு கற்பகிரகத்தைப் பழுதுபார்த்து, புதுசாரம் கட்டி பெருவுடையாருக்கு அஷ்டபந்தன மருந்து சாத்தியது மிகவும் பாராட்டப்பட்டது.



திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அவர்களும்
துணை ஆணையர் T. N. சிங்காரவேலு அவர்களும் (1378-ம் பசலி சதயவிழா)

LIBRARY 2 OCT 1969

சென்ற ஆண்டு சதயவிழாப் பந்தல் முகப்பும்,
பெரியகோயில் தென்புறக் கோபுரத் தோற்றமும்.

இராசராசன் - சமாதானத்தலைவன்

CONNEMARA PUBLIC LIBRARY
20 OCT 1969
MADRAS

செல்வி. சோ. பாகீரதி, M. A., M. Litt.

(முதல்வர், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, திருகுற்றாலம்)

வற்றாத நீர்வளமும் குன்றாத நிலவளமும் பெற்றுத் திகழ்ந்த சோழநாட்டினை நல்ல தமிழ்மூதாட்டி 'தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே மண்ணாவதும் சோழமண்டலமே' என்று போற்றிப் புகழ்ந்தார். சோற்றுவளம் பொய்க்காத சோழநாட்டில் சிந்தனைச் செழிப்பும் சிந்தையின் நலமும் கலந்து உறவாடியதில் வியப்பில்லை. வீரமும், தீரமும், அறிவும், ஆற்றலும், செம்மையும்,சிறப்பும்கொண்ட நல்லரசர்பலரைச் சங்ககாலம் தொட்டே சோழநாடு தமிழகத்திற்குத் தந்து மகிழ்ந்தது. தமிழக வரலாற்றிலே பீடும், பெருமையும், பொலிவும், வளமும் இணைந்த நல்வாழ்வை மலர்வித்து பாரதநாடு மட்டுமேயன்றிப் பார்முழுதும் போற்றிடும் வகையில் மணங்கமழும் நல்லாட்சியை நல்கிய பெருமையும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடையிலே அரும்பிய பிற்காலச் சோழப் பேரரசையே சென்று சார்ந்தது.

சோழப் பேரரசாகிய அழகிய மாளிகையை எழுப்புவதற்கு கி. பி. 846-ல் கோப்பரகேசரிவர்மன் விசயாலயச்சோழன் அடிக்கல் நாட்டினான். அவனுக்குப் பின் அவன் வழிவந்த சோழ மன்னர்கள் அம்மாளிகைக்குரிய அடித்தளத்தை அமைத்தனர். கி. பி. 985-ஆம் ஆண்டில் அரியணையேறிய முதலாம் இராசராசசோழனே தம் முன்னோர் எழுப்பிய அடித்தளத்தை உறுதிப்படுத்தினான். அதன்மேல் எழிலும் ஏற்றமும், திண்மையும் திறனும், அமைதியும் இன்பமும் இணைந்த பேரரசாம் மாளிகையை எழுப்பினான். அந்தப் பேரரசின் பேராற்றலையும் பெருஞ்சிறப்பினையும் தன்னகத்தேகொண்டு கலை மலிந்த உள்ளம் தமிழ் உள்ளமே — அறம் போற்றும் இனம் தமிழ் இனமே என்பதை என்றுமே தரணிக்கு எடுத்துக் காட்டுமாப்போல் செம்மாந்து நிற்கின்றது தஞ்சைப் பெரியகோயில்.

தென்னாட்டின் நெற்களஞ்சியமாய்த் திகழ்ந்திடும் தஞ்சையை இராசராசன் தான் எழுப்பிய அரும்பெரும் கற்றளியினால் தமிழரின் அறிவின் சின்னமாயும் ஆற்றலின் சிகரமாயும் மாற்றியதோடு தமிழ்ப் பண்பாட்டின் கருவூலமாயும் காட்சி தரும்படிச் செய்துவிட்டான். தஞ்சை என்றதுமே நம் நெஞ்சமெல்லாம் புகழ் விஞ்சி நிற்கும்படிச் செய்த பெருமை மன்னர்மன்னன் - போர்த்திறம் பெற்றோன் - சமாதானப் பிரியன் - சிவபாத சேகரன் - தமிழ் உள்ளமெல்லாம் நிறைந்தோன் - ஆகிய இராச இராசனையே சாரும்.

களம் பல கண்டு வெற்றிவாகை சூடிய இராசஇராசனைச் சமாதானத் தலைவனெனக் கூறலும் ஒல்லுமோ? அமெரிக்க ஐக்கியக் குடியரசின் முதல் ஜனாதிபதியாகத் திகழ்ந்த ஜார்ஜ் வாஷிங்டன் எண்ணற்ற போர்கள் புரிந்தான். வெற்றியுங்கண்டான். அவன் இறந்து பட்டதும் அவனது புகழ் கூற வந்தோர்.

"He was first in was, first in place and first in the hearts of his Country-men" (Encyclopaedia Britannica, Vol. 23 of 1967 - Page 244) என்று கூறி இரங்கினர். 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து

மறைந்த வாஷிங்டனைக் குறித்துக் கூறிய இதே சொற்கள் பத்தாம் நூற்றுண்டிலே வாழ்ந்த இராசராசனுக்கும் பொருந்துவன வாகும். ஆம்! அமரிலே முதல் நின்றுன். சோழ ஆட்சி நிலவியவிடமெல்லாம் அமைதி வாழ்வை அமைப்பதிலும் தலைநின்றுன். இது மட்டுமா! தனது நாட்டு மக்களின் இதயத்திலும் முதலிடத்தைப் பெற்றுன்.

இராச இராசனின் இணையற்ற கலை உள்ளமும், குடிமக்களின் உள்ளத்தை உள்ளபடி உணரும் தன்மையும், நுண்ணறிவும், அனைத்திற்கும் மேலாய் அவனுடைய இதயத்திலே நிரம்பிக் கிடந்த இறைபக்தியும் அவனது அரசியல் வாழ்வினைச் சீராக்கி நேராக்கவும் செம்மைப்படுத்திச் செழிப்பாக்கவும் வழிகோலின.

முதலாம் இராசராசன் பெரும்போர் வீரன். இராச தந்திரியுமாவன். தன் ஆட்சிக் காலத்தில் தமிழகம் முழுவதையும் ஒரே அரசியல் அமைப்பில் இணைத்து, இணையற்றதும் திறமைமிக்கதுமான ஆட்சியை நிலைநாட்ட விழைந்தான். இதன் பொருட்டு இவன்புரிந்த போர்கள் எண்ணில. இவன் தொடுத்த போர்களையும் பெற்ற வெற்றிகளையும் இவனது கல்வெட்டுக்களில் மெய்க் கீர்த்தியாக முதலில் பொறிக்கச் செய்தான். "திருமகள் போல" என்று தொடங்கும் இவனது மெய்க்கீர்த்தி இவன் தன் ஆட்சிக் காலத்தில் பெற்ற அனைத்து வெற்றிகளையும் தொடர்ச்சியாகவும் அழகாகவும் எடுத்து உரைக்கின்றது.

சேரநாட்டின்மீது படையெடுத்துச் சென்று சேரனுக்குரிய கடற்கரைப் பட்டினமாகிய காந்தளூர்ச்சாலையில் அவனுடைய கப்பற் படைகளை அழித்தான். சேரனுடைய நகரமாகிய உதகையைக் கொளுத்தினன். காந்தளூர்ச் சாலையில் வெற்றிகண்டது "காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய கோ இராச கேசரி வர்மன்" என்று தன்னைக் குறிப்பிட்டான். தன்னுல் அனுப்பப்பட்ட தூதன் ஒருவனை அவமதித்துக் கைதியாக்கிச் சிறையில் அடைத்தான் சேரன் என்றதைக் கேட்டதும், இராசராசன் தன் தூதனைச் சிறை மீட்கவும் தன் மானத்தைக்காக்கவும் வேண்டியே சேர நாட்டின்மீது போர் தொடுத்தான். சேரனுக்குதவிய பாண்டியனையும் இடையிலே வென்று "பாண்டிய குலாசனி" என்ற பட்டத்தையும் பெற்றுன். இரண்டாம் முறையும் சேரநாட்டின்மீது படையெடுத்துக் கொல்லத்தையும் கொடுங்கோளூரையும் வென்று "கீர்த்தி பராக்கிரமன்" ஆனுன். பின்னர் குடமலை நாட்டையும் அதனருகில் உள்ள கங்கபாடியையும் நுளும்பபாடியையும் வென்றுன். மைசூர் மாவட்டத்தைத் தன்னகத்தேகொண்ட தடிகைபாடியையுந் தனதாக்கினுன்.

பாண்டியனுக்கும் சேரனுக்கும் உறுதுணையாய் நின்ற ஈழமன்னன் ஐந்தாம் மகிந்தன்மீது படையெடுத்தான். சோழர்படை ஈழத்தில் நுழையவே அதனை எதிர்க்கும் ஆற்றல் இன்றி ஐந்தாம் மகிந்தன் ஈழத்தின் தென்கிழக்கேயுள்ள ரோகணநாட்டில் ஓடி ஒளிந்தான். எனவே இராசராசன் படை முரட்டொழில் சிங்களர் ஈழ மண்டலத்தையும் வென்று அவன் புகழை எண்திசையும் பரப்பியது. ஈழநாட்டில் தான்வென்ற பகுதியைத் தன் சிறப்புப் பெயரைக்கொண்டே 'மும்முடிச் சோழமண்டலம்' என்று பெயரிட்டான். ஈழமண்டலத்தில் உள்ள சில ஊர்களைத் தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோவிலுக்கு நிவந்தமாகவும் விட்டான்.

மேலைச் சாளுக்கிய மன்னனையும் புறங் கண்டான். கிருஷ்ணு கோதாவரி ஆறுகளுக் கிடையேயுள்ள வேங்கி நாட்டையும் வென்றுன். தன் மகள் இரண்டாம் குந்தவையை விமலாதித்தனுக்குத் திருமணம் செய்வித்து அவனையே வேங்கிநாட்டின் மன்னனுகவும் ஆக்கினுன். பின் வேங்கிநாட்டினைத் தனி நாடாகவே மதித்து நடத்தினுன். இவ்வாறு வேங்கிநாட்டின் வெற்றி இராசராசனின் இராச தந்திரத்தால் மணவினை என்ற பந்தத்தினுல் பிணிக்கப்பட்டு சோழப் பேரரசிற்கு வலுவைத்தந்தது. பின்னர் கலிங்கத்தையும் தன் அடியில் கொணர்ந்தான். இறுதியாக

''முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்'' என்று அழைக்கப்பட்ட அரபிக்கடலில் அமைந்துள்ள மால் தீவுகளையும்வென்றான். இவ்வாறாகப் பல வெற்றிகளைத் தனது ஆட்சியில் 19 ஆண்டுகளில் கண்ட இராசராசன் ஒப்பற்ற வீரனும் தீரனுமாவான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இவன் தன் புகழ்பாடும் மெய்க்கீர்த்தி

'' திருமகள் போல பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச்சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகைபாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்கள ரீழ மண்டலமும்
இரட்டபாடி யேழரை யிலக்கமும்
முன்னீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும் [தன்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுள்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீ ராசராச தேவர்க்கு''

என்று தனது கல்வெட்டில் முற்பகுதியில் பொறித்து வைக்கும் புதுமையைப் புகுத்தி, தமிழகம் காலம்காலமாய் அவற்றைநினைத்து மகிழ வழி வகுத்தான்.

வெற்றியினால் இராசராசனின் இதயம் விம்மிதம் அடையவில்லை. அடுதலும் தொலைதலும் புதுவதன்று; உலகத்தியற்கை என்ற உண்மையை உணர்ந்தான். மாபெரும் சாம்ராஜ்யங்கள் இருந்த இடம் தெரியாமல் மண்ணோடு மண்ணாக மறைந்துவிட்ட தன்மையை அறிந்தான். கணக்கற்ற போரிலே வெற்றிகண்ட எண்ணற்ற மன்னர் பெயர், வரலாற்று ஏட்டிலே அல்லாமல் மக்கள் மனத்திலே இடம்பெற முடியாது மறைந்து பட்ட அவல நிலையைத் தெளிந்தான். தான் மாண்டு மறையினும் - தான்பெற்ற வெற்றி மறப்பினும் தனது பெயர் தமிழ் மண்ணை விட்டு மறைவதை அவன் என்றும் விரும்பவில்லை. தன் பெயர் என்றென்றும் நின்று புகழ் பரப்பவேண்டும் என்று விழைந்தான். அவ்வேட்கையின் விளைவே தஞ்சையில் வானளாவி நிற்கும் ''இராசராசேச்சுரம்'' என்னும் மாடக்கோயில் ஆகும். அரும் பெரும் வெற்றிகளைக் கண்டு சோழ சாம்ராஜ்யத்தின் பரப்பினை விரிவுபடுத்திய இராசராசன், தான் தங்கி வாழ அழகிய ஆடம்பரமான அரண்மனையைக் கட்டக் கருதவில்லை! தன் பெயர் தாங்கிய மணம்வீசும் மலர்ப்பூங்காவும் சமைக்கவில்லை. தான் அல்லும் பகலும் வணங்கிடும் ஆண்டவனுக்குத் தனது நாட்டுமக்கள் தொழுதேத்தும் இறைவனுக்குத் தன் தலைநகராகிய தஞ்சாவூரிலே மாட்சிமிகு மாடக்கோயில் ஒன்று எடுத்தான். வெற்றிபெற்ற நாடுகளிலிருந்து தான் கொண்டு வந்த பொற்குவியலையும், பொருள் திரளையும் அக்கோயில் கட்டும் திருப்பணிக்கே செலவிட்டான்.

இராசராசனின் 19-ஆம் ஆட்சி ஆண்டில் தொடங்கி, 23-ஆம் ஆட்சி ஆண்டில் முடிவுபெற்ற இந்த மாபெரும் கோயில் தமிழ் இனத்தின் அழகுணர்ச்சிக்கும் அறிவாற்றலுக்கும் இணையற்ற ஓர் எடுத்துக்காட்டாகும். சோழர்களில் கலைச் சிறப்பத்திற்கு அழியாத சின்னம் தஞ்சை இராசராசேச்சுரமாகும். 82 அடி நீளமும் அகலமுமுள்ள சதுர அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள 200 அடி உயரமுள்ள விமானம் இப்பெருங்கோயிலின் அமைப்பிற்கே அழகையும் பெருமையையும் தருகிறது. 13 மாடிகளைக்கொண்டது இவ்விமானம். ஒவ்வொரு மாடியிலும் கலை எழில் தவழுகின்ற சிற்பங்கள் நிறைந்துள்ளன. இக்கோயிலின் விமானத்தையும் இராஜேந்திரனால் கங்கை கொண்ட சோழபுரத்தில் எழுப்பப்பட்டிருக்கும் விமானத்தையும் ஒப்பிட்டுப் பார்த்த பெர்ஸி பிரௌன் என்னும் கலை வரலாற்று அறிஞர் '' இவ்விமானங்கள் ஒவ்வொன்றும் அதை நிறுவியவர்களின் கலை உணர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது...'' என்றார். ''இரண்டுமே கலைவழிபாட்டில் காணப்படும் தெய்வீக அம்சத்துக்குச் சான்றுகளாக விளங்குகின்றன'' என்று கூறியுள்ளார்.

இராச இராசன் தானே எடுப்பித்த கோயில் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டி ''பாண்டிய குலாசனி

வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர் நாம் எடுப்பித்த திருக்கற்றளி இராசராசேச்சுரம்'' என்று தன் கல்வெட்டில் என்றும் அழியாமல் பொறித்து வைத்தான். கோவில் எழுப்பியதுடனமையாது கோவில் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறவும் நாள் வழிபாடும், விழாக்களும் சிறப்புடன் நடைபெறுதற்கும் தேவையான நிலங்களை நிவந்தமாக அளித்தான். அவன் கோயிலுக்கு அளித்தவையாகக் கல்வெட்டுக்கள் கூறிடும் செய்திகளைக் காணுந்தோறும் காணுந்தோறும் நமது இதயத்தில் இன்பம் பொங்குகிறது. 41559 கழஞ்சு எடையுள்ள பொற்கலங்கள்–50650 கழஞ்சு எடையுள்ள வெள்ளிக் கலங்கள் – அணிகலன்களோ 10200 காசு மதிப்புடையவை – இவையே அன்றி '1,16000 கலம் நெல்லும் 1100 காசும் வருவாயுள்ள கிராமங்கள் – ஆகியவற்றைத் தஞ்சைப் பெருங்கோவிலுக்கு அளித்தான் (Malaceay Commemortion—Volume — Page 324) அக்காலம் பொருள் வளர; அதனை அளிக்க முன்வந்த மன்னன் தன் உளவளம் – மன்னனின் செயல்கண்டு மகிழ்ந்த மக்களின் பண்பாட்டு நலம் ஆகியவற்றை என்னென்று ஏத்துவது! பத்தாம் நூற்ருண்டில் பைந்தமிழ்நாடு கண்டவளம், இன்று கனவாய் கற்பனையாய்க் காட்சியளிக்கிறதே என்று எண்ணும்போது கண்கலங்குகிறது. சோழன்கண்ட பொற்காலம் மீண்டும் வருவது எக்காலம் என்று நெஞ்சம் ஏங்குகிறது.

மன்னன் மட்டுமேயன்றி அவனுடைய உறவினர்களும், அரசியல் அதிகாரிகளும், போர் வீரர்களும் மற்றும் பொதுமக்களும் கோயிலுக்கு நிலங்களையும் நந்தா விளக்கு, எரிப்பதற்குரிய நெய்தரும் சாவா மூவாப் பேராடுகளையும், அணிகலன்களையும், பொற்பூக்களையும் அளித்தனர்.

''நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜேஸ்வரமுடையாருக்கு நாம் குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும் நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும் ஸ்ரீ விமானத்தில் கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிந்தருள வெட்டின'' (S. I. I. Vol. II Page 2) என்று வரும் இராச இராசன் கல்வெட்டு மன்னன் எவ்வழி; மக்கள் அவ்வழி என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது.

அகிலமே வியக்கும் வண்ணம் வான் நோக்கி நிற்கும் தஞ்சைப் பெருங்கோயில் கட்டுவதற்கேற்ற அமைதியான ஆட்சியையும் பொருள் வளத்தையும் படைத்திருந்தான் இராசராசன் எனில் அது மிகையாகாது. அமைதி தவழும் சமுதாயத்தில் தான் அறம் வளரமுடியும்; அழகுக் கலைகளாகிய சிற்பமும் ஓவியமும் சிறக்கமுடியும்; கண்ணினையும் கருத்தினையும் ஒரே நிலையில் நிறுத்தி, உள்ளத்தைத் தூய்மையாக்கும் நடனமும் நாடகமும் தழைக்க முடியும். கற்பனை வளமிக்க இலக்கியங்கள் அத்தகு சமுதாயத்தில்தான் தோன்றமுடியும். கலைஞரும், கவிஞரும், இசைவல்லாரும், நடனமாதரும், சிற்பியும், சிந்தனையாளரும், பக்தரும், பண்புடையோரும் நிறைந்த ஓர் ஒப்பற்ற சமுதாயத்தை வரலாற்று அறிஞர் பலரும் பொற்காலம்எனப்போற்றிடும்நற்காலத்தை உருவாக்கிய இராசராசனைச் சமாதானத்தலைவன் - சீர்திருத்தச் செம்மல் எனஏத்துவதில் தவறும் உண்டோ?

இராசராசனின் காலத்தில் மக்களின் ஆக்கும் சக்தி வீணுக்கப்படாமல் அது ஆண்டவன் உறையும் அழகுக் கோயிலை உருவாக்கப் பயன்படுத்தப்பட்டது. தனி மனிதனின் உள்ளத்து எழுந்த வெள்ளத்தனைய உணர்ச்சிப் பெருக்கு பக்திச்சுவை மலிந்த இசையாகவும், தெய்வீகத் தன்மை வெளிப்படும் சிற்பமாகவும் ஓவியமாகவும் உருப்பெற்றது. மக்களின் கலை உள்ளம் அறச்செயலுக்குப் பொருள்தர முன் வந்தது டன் அழகுக்கலைகளைப் பேணிக்காக்கவும் முந்தியது. தனி மனிதனின் உளத் தூய்மையும் இறைபக்தியும் அவன் வாழ்ந்த சமுதாயத்தையே உயர்வடையச் செய்தன.

அமைதியை நிலைநாட்டி அழகுக் கலைகளை வளர்த்த காவலன், நல்லாட்சி நாட்டிலே நிலைபெற அரசியல் சீர்திருத்தங்களையும்

PUBLIC LIBRARY
2 0 OCT 1969



பெரியகோயில் முன்தோற்றம் (1378–ம் பசலி சதயவிழா)



ஓதுவார்களும், கோபுர தென்திசை தோற்றமும்
(1378-ம் பசலி சதயவிழா)

மேற்கொண்டான். சோழமண்டலத்திற்கு உட்பட்ட நிலப்பகுதிமுழுவதையும் அளந்து அவற்றின் வளம்நோக்கி வகைப்படுத்தி, நில வரியைச் சீராக்கிய சிறப்பு இராசராசனுக்கே உரியதாகும். திறமையும் திண்மையும் மிக்க நல்லாட்சி நடைபெறச் சோழமண்டலத்தி லுள்ள ஒவ்வொரு மண்டலத்தையும் பல வளநாடுகளாகப் பிரித்தான்.

“ சோழமண்டலத்துச் சத்திரிய சிகா மணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரி ” என்னும் கல்வெட்டுப் பகுதி அக்காலத்திய நாட்டின் பகுப்புமுறை யைத் தெள்ளிதின் விளக்கும்.

பொருள்வளம் கண்ட நலமிகு ஆட்சி யும் குடிமக்களின் இன்ப வாழ்விற்கு வழி காட்டும் வகையில் அழகு மிக்க கலைகளைப் போற்றிப் பாதுகாத்த பேராற்றலும், அனைத் திற்கும் மேலாய்த் தனது தலைநகரிலேயே பெருங்கோயில் எழுப்பி, அவ்வாண்டவன் ஆலயத்திலேயே அரசியல் செய்திகளையும் பொறித்து, அவற்றை உண்மைக்கும் அன் புக்கும் போற்றுதற்கும் புகழ்தற்கும் உரியன வாக்கிய பெருமையும் இராசராசனைச் சமா தானத்தின் தலைவனாகவும் நலமிகு வாழ் விற்கு வழிவகுத்த ஈடு இணையற்ற மக்கள் தலைவனாகவும் ஆக்கிவிட்டன.

ஐப்பசிச் சதயநாளிலே தோன்றிப் பசிப் பிணி அகற்றிக் கலைவளங்காத்துப் பண் பாட்டினை நாட்டிலே நிலைக்கச்செய்த சிவ பாதசேகரன் – இராசராசனுடைய பேரும் புகழும் நானிலம் உள்ளளவும் நற்றமிழர் வாழுமளவும் வாழ்க!

ஸ்ரீ சந்தானராமசுவாமி திருக்கோயில்

நீடாமங்கலம்

மன்னார்குடி வட்டம் **தஞ்சாவூர் மாவட்டம்**

இத்திருக்கோயில் தஞ்சை – நாகூர் புகைவண்டி மார்க்கத்தில் தஞ்சைக்கு கிழக்கே 19 கல் தொலைவில் உள்ளது. இது தஞ்சையை ஆண்ட புகழ்மலிந்த மராட்டிய மன்னர் ராஜஸ்ரீ பிரதாபசிம்ம மகாராஜா அவர்களால் 1761-ம் ஆண்டு கட்டப்பட்டது. இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமாளின் திருநாமம் சந்தான ராமன். ராஜஸ்ரீ பிரதாபசிம்ம மகாராஜா அவர்களுக்கும் பட்டமகிஷி யமுனாம்பாள் பாய் சாகெபு அவர்களுக்கும் நீண்டகாலமாக மக்கட்பேறில்லாக் குறையை நீக்கிய படியால், பெருமாளுக்கு இச்சிறப்புப் பெயர் வந்தது. இதனாலேயே இன்றும் மக்கட்பேறு இல்லாதவர்கள் ஆசார நியமத்துடன் ஸ்ரீ சந்தானகிருஷ்ணன் விக்கிரகத்தை எடுத்துக்கொண்டால் குறை நீங்கி மக்கட்பேறு பெறுகின்றனர்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான திரு. முத்துசாமி தீட்சிதர் அவர்கள் ஸ்ரீ சந்தான இராமசாமியைப்பற்றி வடமொழியில் ஒரு கீர்த்தனை இயற்றியுள்ளார்.

அறங்காவலர்கள்: *நிர்வாக அதிகாரி*

திரு. ந. சோமசுந்தரம் M. L. A., (குழுத்தலைவர்) **திரு. கோ. சஞ்சீவி**
திரு. சே. சந்தானராம அய்யர்
திரு. ஆ. சுப்பிரமணியன்

குடி தழுவிய கோல்

(கோவை. இளஞ்சேரன்)

மன்னவன் உயிர்; மன்னுயிர்கள் உடல். இக்கருத்தைப்புறநானூறு,

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

— என்று பாடியது.

'மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் [கண்டாய்
நல்லுயிர் ஞாலந் தன்னுள் நாமவேள் நம்பி'

—என்று சிந்தாமணி

பின்னணி இசைத்தது. பிற நூல்களும் தாளங்கொட்டின.

கல்வியிற்பெரிய கம்பர் இக் கருத்தை அறிந்தவர். ஆயினும், தமது இராமாவ தாரத்தில் தயரதனை,

"உயிரெலாம் உறைவதோர்
உடம்பும் ஆயினன்"

...என்றார்.

மன்னுயிர்களை உயிராகவும், மன்னவனை உடலாகவும் குறித்து ஒரு மாற்றுக்கருத்தை இணைத்தார்.

இம்மாற்றம் புதுமைப் போக்கில் கூற வேண்டும் என்னும் இலக்கிய உத்தியால் நேர்ந்ததா; வேறு அடிப்படை கொண்டதா என்று நோட்டமிடுவதால் ஓர் உண்மை புலப்படும்.

வடநாட்டின் பகுதியாம் கோசல நாட்டின் பெருமை [பேசிய கம்பர் தம் தமிழகத்தை உள்ளத்தில் நிறுத்தியே பேசினார்:

"காவிரி நாடன்ன கழனி நாடு"

...என்று குறித்தார்.

கோசல நாட்டை. இதுபோன்று தமிழக நினைவை வாய்ப்பேற்படும்போது வெளிப் படுத்துதல் கம்பர் தம்இயல்பு. தாம்வாழ்ந்த நூற்றாண்டுத் தமிழக மன்னர்தம் ஆட்சி முறை அவர்தம் உள்ளத்தில் ஊறிநின்றது. அதனினும் குறிப்பாகச் சோழ மன்னர்தம் ஆட்சிமுறை ஊன்றி நின்றது. அதனினுஞ் சிறப்பாகப் பெருமன்னன் இராசராசனது அரசியல் நெறி ஒளிவிட்டு நின்றது. அவ் வொளிக் கதிரைப் பளிச்சிட்டுக் காட்டுவது போல் மன்னனை உடலாகக் கூறினர். இக் கருத்தையும் தம் நூலில் அரசியல் படலத் தில் குறித்திருப்பது நோக்கத் தக்கது. இக் கருத்து இயைபுடையதே எனக்காணலாம்.

திருவள்ளுவருக்கு முற்பட்ட காலம் முதல் (கி. மு. முதல்) கி. பி. இடைக்கால எல்லை வரை உயிராகக் குறிக்கப்பட்ட மன்னவன் பின்னர் உடலாக மாறுதற்கு அரசியல் நெறியில் ஏதேனும் ஒரு திருப்பு முனை நேர்ந்திருக்க வேண்டும்.

திருவள்ளுவப் பெருந்தகை மக்கள்தம் வாழ்க்கையின் ஒரு திருப்பு முனையாக முப்பால் நூலை வழங்கினர். சோழப் பெரு மன்னன் இராசராசன் அரசியல் நெறியின் திருப்பு முனையை ஏற்படுத்தியவன்.

இராசராசன் ஆட்சி

இராசராசன் திருவள்ளுவர் ஆண்டு 1016 - கி.பி. 985ல் அரசுக்கட்டிலேறினன். 29 ஆண்டுகள் ஆண்டான். ஏறத்தாழ 16 ஆண்டுகள் போர்ச் சூழலேயிருந்தது. படை வன்மையாலும், போராற்றலாலும், தேர்ந்த அரசியல் அறிவாலும் 8 நாடுகளை வென்று அடிப்படுத்தினன். சோழப் பேரரசை நிலை நாட்டினன். இடையிடையே ஆட்சி முறை யிலும் கவனம் கொண்டான். நலமான அரசியல் நெறியின் களம், வளமான பொருளியலன்றோ! திருவள்ளுவப் பெருந் தகை அரசனுக்குரிய பொருள் வருவாயை,

" உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்."

என்று குறித்தனர்.

இராசராசன் பெரும் வருவாயாம் உறு பொருளை ஈட்டுதற்குச் செம்மையும் பரவலு மான ஏற்பாடுசெய்ய முனைந்தான். அதற்கு நாட்டை அளந்து பகுத்தமைப்பது இன்றி யமையாததாயிற்று.

நாட்டு அளவையும் பகுப்பும்

தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட நாட்டை 9 மாநிலங்களாகப் பிரித்தமைத்தான். ஒவ் வொன்றும் ஒவ்வொரு மண்டலமாகக் குறிக் கப்பட்டது. அவனது இயற்பெயராலும், சிறப்புப் பெயர்களாலும் அவ்வம் மண்ட லங்கள் பெயர் பெற்றன.

ஒவ்வொரு மண்டலத்தையும் புதுத்திட் டத்தின்படி, ஆட்சிக்கு எளிதாகப் பகுத்த மைக்க எண்ணி அதற்கு நாடுமுழுவதையும் அளக்கத் திட்டமிட்டான். அதற்கு உரிய அதிகாரியாகச் சேனுபதி குரவன் இராச ராச மாராயனை அமைத்து நில அளவை நிறைவேற்றினன். இப்பணியை முடித்ததும் அவ்வதிகாரி உலகளந்த இராசராச மாரா யன் எனச் சிறப்பிக்கப்பட்டான். அளந்த கோல் "உலகளந்த கோல்" எனப்பட்டது. இக்கோல் 16 சாண் அளவுடையது. இந் நில அளவுப்பணித்திட்டம் இராசராசனின் அரசியல் நெறித் திருப்புமுனையின் கால் கோள் எனலாம்.

இதற்குமுன், மண்டலத்தின் உட்பிரி வாக நாடு என்பதே இருந்தது. அஃதா வது, தற்போதுள்ள மாநிலம் - கூற்றம் (தாலுக்கா) என்பது போன்ற அமைப்பில் இருந்தது. மாவட்டம் என்பதுபோன்ற ஓர் அமைப்பில்லை. இது குறை என உணர்ந்து வளநாடு (மாவட்டம்) என்னும் பகுப்பை ஏற்படுத்தினன். வளநாட்டின் உட்பிரிவாக நாடு அல்லது கூற்றம் அல்லது கோட்டம் என அவ்வவ்வற்றினது பரப்பின் பெருமை சிறுமைகளுக்கு ஏற்பப் பெயர் பெற்றன. அவற்றுள் அமைந்த பெரிய நகரம் 'தனியூர்' எனப்பட்டது. சிற்றூர் "ஊர்" எனப் பட்டது.

இப்புத்தமைப்புப் பணி இராசராசனின் அரசியல் நெறித் திருப்பு முனையின் அடித் தளம் எனலாம்.

இவ்வகையில் நாட்டுப் பகுப்பு, மண்ட லம் - வளநாடு - நாடு (கூற்றம், கோட்டம்) தனியூர் (ஊர்)என அமைந்தது. ஓர்ஊரைக் குறிக்கவேண்டுமாயின் மண்டலந்தொடங்கி இராசராச சோழ மண்டலத்து நித்த விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூர் எனக் குறிக்கப்பட்டது. ஆவணம், கல்வெட்டு, பதிவுகளில் இவ்வாறே குறிக் கப்படல்வேண்டும்.

ஆட்சியின் அடித்தளம்

நில அளவு, நாட்டுப்பிரிவு, அமைப் பின்மேல் ஆட்சிமுறை வகுத்தமைக்கப் பட்டது. இராசராச சோழனின் அரசியல் அமைப்பை அடிமட்ட அமைப்பிலிருந்து நோக்குவதே முறையாகும்.

நிலவளத்தால் நலங்கனிந்த சோழ நாட்டில் சிற்றூர்கள் பல்கிப் பரந்து கிடந் தன. ஒவ்வொரு மண்டலத்திலும் பெரும் பகுதி சிற்றூர்ப் பரப்புக்களே. எனவே, சிற்றூர் ஆட்சி அமைப்பே பெரும் பகுதி — மிகப் பெரும்பகுதி நாட்டாட்சி ஆகி விடும். ஊராட்சியின் செம்மையே நாட்டாட் சியின் நன்மையாகும். இராசராசனின் ஆட்சி அரசியல் நெறி இவ்வாறே திகழ்ந் தது. இந்த ஊர் ஆட்சியானது நூற்றுக்கு நூறு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக் கட்சார்பாளர்கள் பொறுப்பேற்று நடத்திய மக்கள் ஆட்சியே.

இராசராசனின் ஆட்சிக்கு முன்னரும் ஊராட்சி இருந்ததெனினும் அதனை நிலைக் கேற்ப மாற்றியும் கூட்டியும் போக்கியும் செம்மையாக்கி முழு மக்களாட்சி ஆக்கிய பெருமை இராசராசனையே சாரும்.

பின்குறிக்கப்படும் ஊராட்சி முறைகளை காணுங்கால் தற்கால ஆட்சி அமைப்புகளை யும் ஒத்திட்டுக் கண்டுசொல்லின் இன்றைய மக்களாட்சி அமைப்புக்கு இராசராசனின் ஊராட்சி அமைப்பு எத்துணை அடிப்படை ஆனது என்பது விளங்கும். இராசராசன் ஆட்சி அரசியலில் ஏற்படுத்திய திருப்பு முனையின் திறனும் புலப்படும்.

முன்குறிக்கப்பட்ட தனியூராயினும் ஊரா யினும் அதனதன் ஆளுகைப் பொறுப்பை அவ்வப்பகுதி மக்களே மேற்கொண்டனர்.

அப்பொறுப்பு ''ஊர்'' என்னும் பெயரில் அமைந்த ஆளுகைப் பேரவையைச் சார்ந்தது. இப்பேரவையில் பருவமுற்ற அவ்வூரார் யாவரும் உறுப்பினராவர். இவர்களினின்றும் ஆளுகைக் குழுவினர் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்தல் பொது மன்றில் நிகழும். அரசர் ஆணை பெற்றஅரசுஅலுவலர்தேர்தல்மேற்பார்வை அதிகாரியாக அமைவார். (Election commissioner) தேர்தல் நோக்கில் ஊர் குடும்பு களாகப்(ward)பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பிலிருந்தும் ஆளுகைகுழுவிற்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தேர்வுக் குறியோரது தகுதியும் தகுதியின்மையும் குறிக்கப்படிருந்தன.

அவ்வவர் குடும்புப்பகுதியில் வாழ்தல், 35 அகவைநிறைவு, கால்வேலி நிலமுடைமை, வீட்டு மனையுடைமை, கல்வியறிவுடைமை, நாணயம் நேர்மை குன்றாமை, முன் மூன்று ஆண்டுகள் குழுவில் அமையாமை ஆகியன தகுதிகளாம்.

தீவினைக் குற்றம் புரிந்தோர், சிற்றினஞ் சார்ந்தோர், வீண் வம்பினர், கையூட்டுப் பெற்றோர், குற்றத்தண்டனையுற்றோர் முதலியோர் தகுதியற்றோராவர்.

தேர்தல், மன்றில் அவ்வூர்ப் பெரியவர் நம்பியாய் அமைந்தார். தேர்தல் 'குடவோலை' முறையில் நிகழ்ந்தது. ஒவ்வொரு குடும்பிலும் தகுதிவாய்ந்தோர் பெயர்களைத் தனித்தனி ஓலையில் எழுதினர். அவற்றைத் தொகுத்துக் கட்டாக்கினர். எக்குடும்பினது என்பதைக் கட்டில் குறித்தனர். இவ்வாறே பல குடும்பின் கட்டுக்களை மன்றின் மையத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒரு குடத்தினில் இட்டனர். பொழுது வேறுபாடறியாத சிறுவன் ஒருவனை ஒரு குடும்புக் கட்டை எடுக்கச்செய்து அதனை அவிழ்த்து மற்றொரு குடத்தில் இட்டனர். சிறுவனைக்கொண்டு அதினின்றும் ஓர் ஓலையை எடுக்கச்செய்து அதிலுள்ள பெயரை நம்பி படிப்பார். பின் கரணத்தான் என்ற ஊர்க்கணக்கன் அறிவிப்பான். தேர்தல் அதிகாரி மேற்பார்வையிடுவார்.

இவ்வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் அமைந்த குழுவே ஆளுங்குழுவாய் அமையும், இக்குழு ''ஆளுங்கணம்'' எனப்பட்டது. சில்லிடங்களில் தகுதி கருதி ''மீயாளுங்கணம்'' எனப்பட்டது. குழுவினர் ''ஆளுங்கணத்தார்'' எனப்பட்டனர்.

இவ்வாளுங்கணம் ஒவ்வொரு நாளின் ஊராட்சி அலுவல்களையும் கவனித்தது. ஊராட்சியின் எல்லாவகைப்பணிகளும் இக்குழுவின் பொறுப்பினவே. வரியியற்றல், வரியீட்டல், தொகுத்தல், பொதுப் பராமரிப்பு, அரசர்க்குரிய இறைப்பகுதியைச் செலுத்தல், வழக்குகளை உசாவி நிறைவேற்றல், அறங்காவல் பணியாற்றல், ஒப்புரவுப் பொதுப்பணி ஆற்றல் முதலியவற்றினை மேற்கொள்வது, நிலப்பதிவேடு, வரிப்பதிவேடு, ஆவணம் ஆகியவற்றின் பொறுப் பேற்றுக் கண்காணித்தது.

இவ்வாறு பல முனைகளாக அமைந்த பணிகளை ஆற்ற ஆளுங்கணத்தார் பல துறைக் குழுவினராகப் (இலாக்கா) பகுத்தமைக்கப்பட்டனர். ஒவ்வொரு துறையும் ''வாரியம்''எனப்பட்டது. வாரி என்பதற்கு வருவாய் என்பது பொருள். வருவாயை ஆளுங்குழு வாரியம் எனப்பட்டது. சில துறைகட்கு இச்சொல் இடுகுறியாய் வழங்கப்பட்டது.

வாரியங்கள் எனப் பலதுறைகளுக்கு ஆளுங்கணம் பொறுப்பேற்று ஆளுகை புரிந்தது. ஓர் ஆளுங்கணத்தாரின் பதவிக் காலம் ஓராண்டு. அவர்க்கு எவ்வகை ஊதியமும் இல்லை.

ஆளுங்கணத்தின் செயலாளன் போல் ஆளுங்கணத்தின் பணிமகனை - கணக்கனாக ''கரணத்தான்'' என்பவனைக் கணத்தாரே அமைத்தனர்.

கரணத்தான் ஆளும் கணத்தாரிடும் பணிகளைச் செய்தான். முடிவுகளை நிறைவேற்றினான். கணக்குகளை எழுதிப் பேணினான். பதிவுகளை உருவாக்கி ஆவணக்களரியில் (Record Room) பேணினான். ஆண்டிற்கொருமுறை கணக்குகளை ஒப்படைக்க வேண்டும். அவனுக்கு ஆண்டு ஊதியம் ஏழு கழஞ்சுபொன், இரண்டு புத்தாடை, நாளூதியம் நாழிநெல். (இக்காலத்துக் கர்ணம் என்னும் பதவிபோன்றது.)

இவ்வாளுங் கணத்தோடு பார்ப்பனர் வாழும் பகுதியில் அவர்க்கென 'அவை' என ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. வாணிகர், தொழிலர்க்கென 'நகர்' எனும் பெயரில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுக்கள் 'ஊர்' எனப்பட்ட பேரவைக் குழுவின் - ஆளுங் கணத்தின் துணைக் குழுக்களாகப் பணி யாற்றின.

இவ்வகையில் ஊராட்சி முறையில் செம்மையான மக்களாட்சி நெறியைப் பக்குவமாக அமைத்து அரசியலில் ஒரு பெரும் திருப்புமுனையைஏற்படுத்தினன் இராசராசப் பெருமன்னன். இத்திருப்பு முனை அரசியல் நெறியில் அவன் எழுப்பிய புகழ்த்தூண் எனலாம்.

மற்றொரு குறிப்பிடத்தக்க குறிப்பு ஒன்றுண்டு. ஆளுங்கணத்தார் கூடுதற்குத் தனி மாளிகை கட்டப்பட்டது. இயலாத ஊர்களில் கோயில் மண்டபங்களிலும் பொது மன்றங்களாம் ஆலமரத்தடி இடங்களிலும் கூடினர். அவ்வப்போது அரசன் இராசராசன் ஆளுங்கணக் கூட்டங்களில் வந்தமைந்து நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டான். எவ்வகையிலும் தன் தலையீடு இல்லாமல் பார்வையிடுவதாலேயே ஆளுகைச் செம்மையை ஏற்படுத்தியமை அரசியல் "திருப்புமுனையின் வெற்றிக் கொடி" எனலாம்.

ஆட்சியின் மேன்மட்டம்

ஊராட்சி அமைப்புக்குமேல் அமைந்த ஆட்சி அலுவல் அமைப்புகளை மூன்றாகக் குறிக்கலாம். அவை ஆட்சி அலுவற்செயலக அமைப்பு, ஆட்சி அலுவல் பெருமக்கள் அமைப்பு, அமைச்சர் குழு எனப் படிப்படியாக உயர்ந்து அமைந்திருந்தன.

அலுவற்செயலகம்

(COLLETORATE)

அரசியல் பணிகளை நடைமுறைப் படுத்தல், காரியமாற்றல் முதலியவற்றைப் புரிய "கருமிகள்" என்பாரும், ஏவற்பணிகளைப் புரியும் பணிமக்களும் அலுவற் செயலக அமைப்பினர். கருமிகளில் பெருந்தரம் (U. D. C.) சிறுதரம் (L. D. C.) எனும் பிரிவினர் இருந்தனர். இஃது இக்காலத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் போன்றது.

அலுவற் பெருமக்கள்

மேற்காட்டப்பட்டதற்கு மேல் நாட்டதிகாரி (ChiefSecretary)கண்காணி Superintendents வரியிலார், வரிக்கூறு செய்வார், படைத்தலைவர், விடையதிகாரி, பட்டோலைப்பெருமாள், திருவாய்க்கேள்வி, திருமந்திர ஓலை, திருமந்திரஓலை நாயகம் எனும் தலைமை அலுவலர்கள் இருந்தனர். இப்பதவிகளிற் பல இக்காலத்துச் சிலசில பணிமாற்றங்களுடன் உள்ளன. இவ்வமைப்பை இன்று வழங்கும் தலைமைச் செயலகம் (Secretriate) என்று குறிக்கலாம்.

அமைச்சர் குழு

இந்த அமைப்புக்குமேல் தலையான அமைப்பாக அமைச்சர் குழு இருந்தது. அவர்கள் "உடன்கூட்டத்து அதிகாரிகள்" எனப்பட்டனர். இவர்கள் அரசருடன் நேரடித் தொடர்புகொண்டு பணியாற்றியோர். அமைச்சர், தலைமைப் படைத்தலைவர் சான்றோர் முதலியவர் இக்குழுவிலமைந்து அரசனுழை இருந்து சூழ்ச்சிகள் கூறியும், அரசர் ஆணைகளைப் பரவலாக்கியும் ஆளுகையை நிறைவாக்கினர்.

மன்னன் உடலானான்.

நாட்டை ஆண்டவன் இராசராசனே. ஆயினும் பரவலான ஆட்சி மக்கள்கையிலே இருந்தது. தலைக்கயிறு இராசராசன்கையில் இருந்தது. ஆயினும் ஆட்சித் தலைக்கயிற்றினைச் சுண்டி ஆட்சியைச் செலுத்தும் உரிமை மக்கள்பால் அதினும் சிற்றூர் மக்கள்பால் இருந்தது. இப்படியொரு திருப்புமுனையால் இராசராசன் காலத்தில்தான் ஆட்சிநெறி செம்மையுற்றது. இத்திருப்புமுனைதான் கம்பர் உள்ளத்திலே நின்று "உயிரெலாம் உறைவதோர் உடம்பு" என எழுத வைத்தது. உயிராயிருந்த மன்னனை உடம்பு ஆக்கியது.

இராசராசன் அரசியல் நெறியில் வெளி நாட்டுத்தூதுவர், சந்து செய்வோர், அறங் காவலை நிலைநாட்டுவோர் அமைந்திருந் தனர். மேலும்குறிக்கத்தக்க அமைப்புக்களும் செம்மையாக இருந்தன.

எல்லாவகை நடைமுறையிலும் மக்களது தொடர்பு இடம்பெற்றமை இராசராசன் அரசியலில் வியந்து குறிக்கத் தக்கது. குடிமக்களது எண்ணந்தழுவியே அவனது முடியாட்சி இருந்தது. அவன்தான் கோ லோச்சினன். தன் அதிகாரத்தழுவல்கொண் டன்று; குடிமக்களைத் தழுவியே கோலோச் சினன். அதனல் மாநிலமெல்லாம் அவனடி தழுவி நின்றது. வேற்று நிலமும் அடிதழுவி நின்றது. திருவள்ளுவப் பெருந்தகையின் பொய்யாமொழி பொய்க்காதன்றே!

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

எனுங்குறட்கருத்து எழுத்திற் கெழுத்து இராசராசன் அரசியலில் பொருந்தி வருகிற தன்றே. இப்பெருமையால்தான் அடிதழீஇ நின்ற வேற்று மாநிலத்தும்,

"சதயநாள்விழா உதியர் மண்டலம்(சேரநாடு)
தன்னில்வைத்தவன்"

என்று கலிங்கத்துப்பரணி ஆசிரியரால் குறிக்கப்பட்டான். பிறந்தநாட் பெருமங் கலம் நிகழும் இந்நாளில் இராசராசப் பெருந்தகையினது ஆற்றல் எண்ணி உவக் கலாம். எழுஞாயிறு வென்று ஆளும் இந் நாளில் "உதய பானு வொத்து உதகை வென்றவன்" என்ற அடிகளையும் எண்ணி உவக்கலாம்.

ஸ்ரீ அபயவரதேசுவரசுவாமி திருக்கோயில்

அதிராம்பட்டினம்

பட்டுக்கோட்டை வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில், காரைக்குடி மாயூரம் புகைவண்டி மார்க்கத்தில் உள்ள அதிராம்பட்டினத்தில் உள்ளது. புகைவண்டி நிலையம் உள்ளது தஞ்சை, மன்னார் குடி, புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலிருந்து அதிராம் பட்டினத்திற்கு பேருந்து வண்டி வசதிகள் இருக்கின்றது. இவ்வூர் அதிவீரராம பாண்டியன் என்னும் பாண்டிய மன்னனல் தோற்றுவிக்கப்பட்டது.

இத்தலம் மருதமும் நெய்தலும் சேர்ந்த பகுதியால் அமைந்துள்ளது. இத் தலப்பெருமானுக்கு அபயவரதேசுவரர் எனும் திருப்பெயர் வழங்குகிறது. தன்னை வந்தடைந்தவருக்கு வேண்டும் வரங்கள் கொடுத்துக்காக்கும் பெருமான் என்பது பொருள். அம்மனுக்கு சுந்தரநாயகி என்பது திருநாமம். அழகுடையவள் என்பது இதன் பொருள்.

இங்கு பங்குனி மாதத்தில் நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழா மிகவும் சிறப்புடைய திருவிழாவாகும்.

அறங்காவலர்கள்:

திரு. V. சரவணன் B.A., B.L., (தலைவர்)

திரு. C. மறவன்பிள்ளை — திரு. C. N. தங்கையாத்தேவர்

நிர்வாக அதிகாரி

திரு. K. வேலுசாமி B.A.,

கருவூர்த்தேவர்

என். ஆர். முருகவேள்

வரமார் கருவூர்த்தேவரெனு
மௌனசிவயோகியர் வேதச்
சிரமாரிசைப்பா பலமொழிந்து
சிவத்தானங்கள் பலவணங்கிக்
கரமார் நெல்லியெனச்சித்தி
காட்டிவதிய அவர்க்குமுத்திப்
பரமானந்தந் தருங்கருவூர்ப்
பசுபதீசப் பெருமானே.

சைவ சமய நூல்கள் இருவகைப்படும். ஒன்று சாத்திர (அறிவு)நூல்கள்; மற்றது தோத்திர (அன்பு)நூல்கள். சாத்திர நூல்கள் பதினன்கு. தோத்திர நூல்களை 12 திருமுறைகளாக வகுத்திருக்கின்றனர். இவைகளில் ஏறக்குறைய 18,000 திருப்பாடல்கள் உள்ளன. ஒன்பதாம் திருமுறை 9 ஆசிரியர்களால் பாடப்பெற்றது; 29பதிகங்களையுடையது; 365 பாடல்களைக் கொண்டவை. ஆனல் இப்போது கிடைத்துள்ளவை 301 திருப்பாடல்களே. இவைகளைத் திருவிசைப்பா,திருப்பல்லாண்டு என்றுகூறுவர். இவைகளில் பெரும்பகுதியான 103 பாடல்களைப் பத்துத் திருப்பதிகங்களில் திருவிசைப்பாஆக அருளியவர் கருவூர்த்தேவர் என்பவர். இவருடைய வரலாற்றைக் கருவூர்த் தலபுராணத்தில் 'கருவூர்த்தேவர் கதிபெறு சருக்கம்',கொங்கு மண்டல சதகம் திருவாவடுதுறைப் புராணம்,நெல்லைத் தல புராணம் முதலியவைகளில் காணலாம். இவருடைய திருவிசைப்பாவில் வரும் சில குறிப்புக்களை அகச்சான்ருகக் கொண்டும் ஒருவாறு உய்த்துணரலாம்.

கருவூர்த்தேவர், கருவூரில் அவதரித்தார் என்பது இவர் பெயரினின்றே அறியக் கிடக்கின்றது. ஆனல் இவர் இயற்பெயர் தெரியவில்லை. கருவூர்த் தலபுராணத்தில் இவருடைய வரலாறு பின்வருமாறு காணப்படுகிறது :— கருவூர்த்தேவர் கருவூரிலே மறையவர் குலத்தில் அவதரித்தார். வேத சிவாகமங்களை நன்கு கற்றுணர்ந்தார்; பல சமய உண்மைகளைச் செவ்விதின் ஆராய்ந்தறிந்து வைதிக சைவம் தழைத்தோங்கத் திருவிசைப்பாவைப் பாடியருளினர். இவர் பெருமையறியாத சில அந்தணர்கள் இவர் மதுவூன் அருந்தும் வாம மார்க்கத்தவர் என்று இகழ்ந்தார்கள். தம் திறமையை அவர்களுக்கு அறிவிக்க வேண்டி, அகாலத்தில் மழைபெய்யச் செய்தும், கோயில்கதவு தாள் திறக்கச் செய்தும், ஆறு பெருகச் செய்தும் பல அற்புதங்களைக் காட்டினர். காசி, காளத்தி, காஞ்சி, திருவண்ணமலை, மதுரை, குருகூர், திருச்செந்தூர், கன்னியாகுமரி,சுசீந்திரம்,திருநெல்வேலி, திருப்புடைமருதூர், திருக்குற்ருலம், தஞ்சை, திருவானைக்கா, திருவரங்கம் முதலிய பல சிவ வைணவத் தலங்களையும் சென்று வழிபட்டார். திருநெல்வேலிக்கு இவர் சென்றபோது இவர் பெருமையை யாவரும் அறியும் பொருட்டு இறைவன் காட்சி கொடுக்கத்தாமதித்ததாகவும்,இவர் ஊரைப்பாழாக்கியதாகவும், பின்னர் ஊரார் வேண்டு கோளுக்கிணங்கி ஊரைச் செழிக்கச் செய்தார். தஞ்சைப் பெரியகோயிலில் இராஜ ராஜ சோழன் சிவலிங்கப் பிரதிட்டை செய்ய முயன்றபோது மருந்திளகிப் பந்தனமாகவில்லை. அரசன் கருவூர்த்தேவரிடம் குறையைத் தெரிவிக்க, இவர் தஞ்சை சென்று பெருமானை வழிபட்டுச் சிவலிங்கப் பிரதிட்டை செய்தார். அப்பந்தனம் பசும் பொன் உருக்கியமைத்ததுபோல் இருக்கக்

162468

கண்டு யாவரும் வியந்தனர். கருவூர்த் தேவரின் குலத்தினரான அந்தணர் சிலர் அரசனிடம் இவர் மதுவூனருந்தி வாம பூசை செய்கிறார் என்று கூறினார்கள். அரசன் அவ்விரவிலே சென்று பரிசோதனை செய்ய அவ்வாறில்லாமை கண்டு அவரை வணங்கிப் பிழை பொறுக்க வேண்டினான். தேவர், அரசனை அவ்வந்தணர்கள் வீடுகளைப் பரிசோதிக்கச் சொல்ல மது மாமிசம் நிறைந்திருக்கக் கண்டான்; அவர்களை நாடு கடந்துபோக ஆணையிட்டான். கருவூர்த்தேவருக்கு இடர் செய்ய எண்ணிய அவர்கள் அமராவதி ஆற்றங்கரையில் காத்திருந்தார்கள். அதையறிந்த தேவர் அவர்களிடம் அகப்படாமல் திருவானிலைக் கோயிலை அடைந்தார். பிராமணர்கள் பின் தொடர்ந்தார்கள். கருவூர்த்தேவர், பசுபதீசுரரைத் தழுவிக்கொள்ள இறைவன் தம்முள்ளே இரண்டறக் கலந்து கொண்டருளினார்.

கருவூர்த்தேவர் பல அற்புதங்கள் நிகழ்த்தியதற்கு கருவூர்த் தலபுராணத்தைத் தவிர வேறு சான்றுகளில்லை. அவரியற்றிய திருவிசைப்பாவிலும் அகச் சான்றுகளில்லை. பதினெண் சித்தர்களில் கருவூரார் என்ற ஒரு சித்தர் காணப்படுகிறார். சித்தர்களே மந்திரம், வைத்தியம், காயசித்தி முதலிய செய்திருக்கின்றனர். கருவூர்ச் சித்தர் பாடல்களுக்கும், கருவூர்த்தேவர் திருவிசைப்பா பாடல்களுக்கும் சொல், பொருள், நடை இவைகளின் முறையில் அதிகபேதம் காணப்படுகிறது. இவர்கள் இருவரும் காலத்தினாலும் வேறுபட்டவர்களாக இருத்தல் வேண்டும். பெயர் ஒற்றுமைகொண்டு கருவூர்த் தலபுராண ஆசிரியர் இருவர் வரலாற்றுச் செய்திகளை ஒருவருடையதாக எழுதிவிட்டாரென்று கொள்ளவேண்டும்.

திருவிசைப்பாவிலுள்ள அகச் சான்று கொண்டு கருவூர்த்தேவர் வரலாற்றை ஒருவாறு அறியலாம். இவர் ஒவ்வொரு பதிகத்தின் திருக்கடைக் காப்பிலே 'கருவூரன்' 'கருவூரனேன்' என்று தம் பெயரைக் கூறியிருக்கிறார். அவர் மறையவர் குலத்தினர் என்பதை, ஆரணமொழிந்த பவளவாய் சுரந்த அமுதமூறிய தமிழ்மாலை', 'செழுமறை தெரியுந்திகழ் கருவூரனேன்' என்ற அவருடைய கூற்றுக்களால் தெரிகின்றது. "தீந்தமிழ்மாலை'' என்று அவர் பல பாடல்களில் கூறுவதிலிருந்து இவருடைய தமிழ் இனிமையுடையது என்பதும் பெறப்படுகிறது. பிச்சையேற்று வாழ்ந்தார் என்பது 'அங்கையோடேந்தித் திரிகருவூரன்' என்ற குறிப்பால் அறியக் கிடக்கின்றது.

அவருடைய கோயில் கருவூர் திருவானிலைக் கோயில் தெற்குப் பிரகாரத்தில் இருக்கிறது. தஞ்சை இராஜராஜேசுவரம் பெரியகோயிலின் மேற்குப் பிரகாரத்தில் அவருடைய சந்நிதி யொன்றிருக்கின்றது. வியாழக்கிழமை தோறும் மக்கள் அங்கே பிரபலமாக வழிபாடாற்றுகின்றனர்.

அவர், கோயில் (சிதம்பரம்), திருக்களந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராஜராஜேச்சரம், திருவிடைமருதூர் முதலிய பத்துத் தலங்களுக்கு 103 பாடல்கள் கொண்ட பத்துப் பதிகங்களை அருளியுள்ளார். தலபுராணத்தில் அவர் வழிபட்டதாகச் சொல்லப்படும் வேறுதலங்களைப்பற்றிய பாடல்கள் காணவில்லை. தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் இவைகளை இராஜராஜசோழனும், இராஜேந்திரசோழனும் கட்டியபின்னரே கருவூர்த்தேவர் அப்பதிகளைப் பாடியிருத்தல் வேண்டும்.

கோயில்களில் பஞ்ச புராணம் பாடும்போது ஒன்பதாம் திருமுறையிலுள்ள திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 301 பாடல்களுக்கு இரண்டு பாடல்களும், மற்ற திருமுறைகளிலுள்ள சுமார் 17000 பாடல்களுக்கு மூன்று பாடல்கள் மாத்திரமே பாடப்பெறுகிறபடியால் திருவிசைப்பாவின் பெருமை புலனாகின்றது. திருவிசைப்பா என்றால் இறைவனுடைய திருப்புகழைச் சொல்லும் பாடல்கள். கருவூர்த்தேவரின் பாடல்கள் செம்பாகமான நடையில் ஆற்றொழுக்காகச் செல்கிறது; இனிய ஓசை பயப்பது; அரிய சைவசித்தாந்தக் கருத்துக்களுடன் மிளிர்கிறது. எடுத்துக் காட்டாக ஒருபாடல்:—



மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்களும்
திரு. ஏ. இராதாகிருஷ்ணன் அவர்களும் (1378-ம் பசலி சதயவிழா)



மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்களும்
அறங்காவலர் அவர்களும் (1378-ம் பசலி சதயவிழா)

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றுயிரங் கூறிட்டு
அத்திலங் கொருகூ றுண்கண்வைத் தவருக்
கமருல களிக்குநின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே.

அவருக்கு இறைவன் குருவாகவந்து அத்த மத்தக சையோக தீக்கை செய்து உபதேசித் தான் என்பது 'கைத்தல மடியேன் சென்னி மேல்வைத்த' என்னும் கூற்றால் உணரவைக் கிறார்.

'ஆவண வீதிப்பூவணம்', 'இஞ்சிசூழ் தஞ்சை','தண்ணிலா விரிதரு வெண்ணிலா' 'உஞ்சகர் நெஞ்சகத்தொளிப்பர்' என்பவை களில் எதுகைத்தொடை அழகைக் காண லாம். மொழுப்பு, கசும்பும், சகடை, தெண்டு, துகுக்கும் முதலிய அருஞ்சொல்லாட்சிகளும் அவருடைய பாடல்களில் வருகின்றன. மாறு பட்ட கருத்துக்களைச் சுவைபெற அமைக்கும் பான்மையை 'போர்த்தம் பெருமை சிறுமை புக்கொடுங்கும்', 'சிறியேனுக் கினியது காட்டிப் பெரிதருள் புரிந்து' என்னும் கூற்றுக்களால் அறியலாம்.

தூது, நெஞ்சொடு புலத்தல், தோழிக் குரைத்தல், தோழியோடிரங்கல், நற்றாயிரங் கல் முதலிய அகப் பொருள்துறைகள் செறிந்த பாடல்களை மிக அழகுபடப் பாடி யுள்ளார். 'மங்கையோடிருந்தே யோகு செய்வானை' என்று முரண் அணியில் சிவ பெருமான் அருட்டிறத்தினைக் கூறியிருப்பது நினைந்து இன்புறற்பாலது. சூரியன், சந்திரன், உயிர், ஐந்து பூதங்கள் ஆகிய எட்டும் தமது உருவாக அட்டமூர்த்தங் கொண்டு சிவன் திகழ்கிறார் என்பதை,

அம்பரா! அனலா! அனிலமே! புவிநீ
அம்புவே! இந்துவே! இரவி
உம்பரா லொன்று மறிவொணு வணுவா
யொழிவற நிறைந்தவொண் சுடரே!

என்று திருமுகத்தலைப் பாசுரத்தில் கூறு கிறார். முன்னோர் மொழிந்த பொருளைப் பொன்னேபோல் போற்றி அவருடைய பாடல்களில் கையாண்டிருக்குமுறை பெரி தும் போற்றத்தக்கது. திருக்குறள், தேவா ரம், திருவாசகம் இவைகளிலுள்ள கருத்துக் களை ஆங்காங்கே காணலாம். தேவாரத்திற் குப் போலவே திருவிசைப்பாவுக்குப் பண் அமைதி வகுக்கப் பெற்றிருக்கிறது. அவரு டைய பத்துப் பதிகங்களிலே இரண்டு புற நீர்மைப் பண்ணிலும், ஒன்று காந்தாரப் பண்ணிலும், மற்ற ஏழும் பஞ்சமப் பண்ணி லும் அமைந்திருக்கின்றன. 'முந்து கருவூரர் பத்தினிரண்டு புறநீர்மை மொழிந்திடு காந்தாரமொன்று ...... மற்றெவையும் பஞ் சமமே' என்ற பாடலால் இதை அறிகிறோம். திருவிசைப்பா ஓதும் பயனை, 'வல்லோர் இருள் கிழித்தெழுந்த சிந்தையராவர்', 'சீல மாய்ப்பாடு மடியவரெல்லாம் சிவபதம் குறி யினின்றார்க'ளாவர் என்று அவரே கூறி யுள்ளார்.

என்னையுன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலாம் உருகநீ யெளிவந்
துன்னையென் பால்வைத் தெங்குமெஞ் ஞான்
ஒழிவற நிறைந்தவொண் சுடரே [றும்
முன்னையென் பாசம் முழுவதும் அகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனும்ஆர் அமுதுங்
கனியுமாய் இனியையா யினையே.

— கருவூர்த்தேவர், திருவிசைப்பா.

இராசராசன் தனிச்சிறப்பு

என். எஸ். தாத்தாச்சாரியார்,
(தஞ்சை.)

அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கு அவர் மாமையில் அலேவேனே!
விஞ்சுளு மாவுனது அடிசேர
விம்பம தாயருள் அருளாயோ?
நஞ்சமு தாவுணும் அருளார்தம்
நன்கும ராவுமை அருள்பாலா
தஞ்சென வாமடி யவர்வாழத்
தஞ்சையில் மேவிய பெருமாளே!
(திருப்புகழ்)

முன்னுரை

வரும் 21-10-69 செவ்வாயன்று ஐப்பசி சதய நாளில் தஞ்சையை ஆண்டு,மன்னியசீர் பேராலயத்தை எடுப்பித்த மன்னர் மன்னர் இராசராசன் பிறந்த நாள் வருகின்றது. அன்று தஞ்சையில் வையம்கண்ட சதயப் பெருவிழாவும் நடக்கவிருக்கிறது. அதனே ஒட்டி இன்று அம்மன்னன் தனிச்சிறப்பினே முற்படச் சிறிது உணர்ந்து மகிழ்வேன்.

தமிழகத்தே கரிகால்சோழன் காலமாகிய கி. பி. முதல் நூற்றுண்டிலிருந்து கி. பி. நான்காம் நூற்றுண்டுவரையில் சங்ககாலச் சோழர்களின் ஆட்சி சிறப்புடன் நடைபெற்றது. தொண்டை நாட்டை முதல் முதலில் காடு எடுத்து, நாடுகளே உண்டாக்கிய சிறப்பு கரிகாலனுக்கு உரியது என்பர். கோவலன் மகளாகிய மணிமேகலே காலத்தும் தொண்டைநாடு சோழர் ஆட்சியில் இருந்தது. இச்சங்ககாலத்துச் சோழர்களுடைய அரசாட்சி மிகச் சிறப்பாக அமைந்திருந்ததைப்பற்றிய செய்திகளேச் சங்கநூல்கள் வாயிலாக அறிந்து வருகிறேம்.

இடைக்காலச் சோழர்

இடைக்காலச் சோழர்கள் கி. பி. நான்காம் நூற்றுண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றுண்டுவரை சற்றுத் தளர்ச்சி அடைந்து செல்வாக்கு இழந்திருந்தனர். அவர்களுள் ஒருவர் மங்கையர்க்கரசியின் தந்தையாவர். இவரைப்பற்றிய பேச்சு, பெரியபுராணத்தில் வருகிறது. கி. பி. 875-ல் இடைக்காலச் சோழப் பெருநாட்டை வளமுறச் செய்து உயிர்ப்பித்த மன்னரே ஆதித்தசோழனது தந்தையான விசயாலயன் என்பவராவார். இவ்விடைக்காலச் சோழர்கள் என்னிலேயிலும் ஆழ்ந்த சைவசமயப் பற்றுள்ளவர்களாகவே இருந்துவந்தனர். இவர்கள் சமய குரவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர் காலங்களில் அந்த அடியார்களேப் போற்றி வேண்டிய உதவிகளும் செய்துள்ளார்கள். கோயில் திருப்பணிகளில் மிகவும் ஈடுபட்டு, ஆங்காங்கு செய்துள்ளார்கள். முன்பு கூறப்பட்ட ஆதித்தசோழன் என்பார், சிறந்த சிவபக்தராகவும், மாபெரும் வீரராகவும் இருந்து, பல சிவாலயங்களேப் (காவிரியின் இருமருங்கிலும் உள்ளவை) பழுது பார்த்தார். இவரது தவப் புதல்வராகிய முதல் பராந்தகன் (கி. பி. 907 முதல் 953) சிவ பக்தியில் சிறந்தவராய்த் தில்லேச் சிற்றம்பல முடையார் திருக்கோயிலில் பொன் வேய்ந்தார். இவரது காலத்தில் சோழநாடு ஈழம் மட்டும் பரவி இருந்தது. இவருக்குப் பின் வந்த மன்னர் மன்னராகிய இராசராசன் இடைக்காலச் சோழர் வரிசையில் ஆதித்த சோழனுக்கு நிகராய் விளங்கிய உத்தமர்.

இராசராசன்

இராசராசன் தஞ்சையைத் தலேநகராய்க் கொண்டு ஆட்சிபுரிந்தவர். இவர் தந்தை இரண்டாம் பராந்தகன் என்ற சுந்தர சோழன். தாய் வானவன்மாதேவி என்பவள். இவர் ஐப்பசிச் சதயநன்னுளில் தோன்றியவர். இதனேச் "சதய நாள்விழா உதியர்

மண்டலம் தன்னில் வைத்தவன்'' என்று சயங்கொண்டார் கூறியுள்ளார். இவரது தமையன் ஆதித்த கரிகாலன் என்பவர். இவருக்குக் குந்தவைப் பிராட்டியார் என்ற தமக்கையும் இருந்தாள். இவருக்குப் பல மனைவிமார்கள் இருந்தும் பட்டத்தரசியாகக் குறிப்பிடத்தக்க ''உலோகமாதேவி'' என்பவரும் வானவன்மாதேவி என்பாரும் சிறப்புடையவர்கள். இவரது மகனே மார்கழித் திருவாதிரை நன்னாளில்தோன்றிய முதல் இராசேந்திரனாவான். இராசராசருக்குச் சந்திரமல்லி என்ற மாதேவடிகளும், குந்தவை என்பவளும் இரு மகளாவார்கள். இந்தக் குந்தவை என்ற மகளைத்தான் இராசராசன் வேங்கி நாட்டு மன்னரான சக்திவர்மன் தம்பியான விமலாதித்தனுக்குத் திருமணம் செய்வித்தார். இராசராசன் பாட்டனாருக்குக் கண்டராதித்தர் எனப் பெயராகும். அவருடைய மனைவியார் செம்பியன்மாதேவி என்பவர். இவ்வம்மையார் தம் கணவரைப்போலவே அளவற்ற சிவபக்தியுடையவர். இவ்வம்மையார் பெயராலே இன்னும் நாகப்பட்டினம் அருகே செம்பியன்மாதேவி என்ற ஒரு சிற்றூர் உள்ளது. இம்மூதாட்டியாரின் பராமரிப்பிலேயே இராசராசன் தமது இளம் வயதைக் கழித்தார். தமது தந்தையான சுந்தரசோழன் இறந்ததும் அரசபதவியை விரும்பிநின்ற தன் பெரியபாட்டன் புதல்வனையும், தனக்குச் சிற்றப்பனுகவும் இருந்த மதுராந்தகன் என்ற உத்தமச் சோழனுக்கு கி. பி. 970-ல் தமக்குவாய்த்த அரசுரிமையை ஈந்த பெருவள்ளல் ஆவார். அப்பொழுது இராசராசன் இளவரசராகவே இருந்து கொண்டு நாட்டைத்திறம்பட அரசாண்டார்.

போர்ச் செயல்கள்

1. பாண்டியன் அமர புசங்கனையும் அவனுக்கு உதவிபுரிந்த சேரமானையும் வென்று சோழநாட்டைக் காத்தார்.

2. வேங்கைநாட்டு மன்னன் சக்திவர்மனை வென்று மறுபடியும் அவனுக்கே அப்பதவியை ஈந்தான். இக்காலத்தில் சோழநாடு கோதாவரி ஆறுவரை பரவியிருந்தது.

3. மைசூர் இராச்சியத்தில் உள்ள கங்கைபாடி என்ற நிலப்பகுதியை வசப்படுத்தினர்.

4. கொங்குநாட்டை வென்றான்.

5. குடகுநாட்டு மன்னன் ''மீனிசா'' என்பவரனது போர்த்திறமையைப்பாராட்டி அவனுக்கு ''சத்திரிய சிகாமணி, கொங்காள்வான்'' என்ற பட்டம் தந்தார்.

6. சேரநாட்டின் பகுதிகளான கொல்லம், கொடுங்கோளூர் போன்ற ஊர்களையும் தன்வசப்படுத்தினர்.

7. ஈழத்தில் வாழ்ந்த '' மஹிந்தன் '' என்னும் சிங்கள மன்னனைவென்று, வட இலங்கையைக் கைப்பற்றினர். ''மும்முடி சோழமண்டலம்'' என்று அந்த இடத்திற்குப் பெயராயிற்று. அவ்வமயம் தமிழ்நாட்டின் கட்டிடக்கலைத் திறமைக்குச் சான்றாகப் 'பொலந்தருவர்' என்ற நகரில் சிவாலயம் ஒன்றைக் கட்டினர்.

இராசராசன் பெரிய கடற்படை வைத்திருந்தார். காந்தளூர்ச் சாலையில் சேரனது படைக்கலத்தை அறுத்தார். மால்டிவ் தீவுகளைக் கைப்பற்றினர். முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் கொண்டான் என்று இவரைக் கல்வெட்டு கூறுகிறது. அதனால் இவருக்கு ''ஜெயம் கொண்டான்'' என்ற சிறப்புப்பெயரும் ஏற்பட்டது. தொண்டை மண்டலத்தை 'ஜயம் கொண்ட சோழமண்டலம்' என அழைக்க இவரே காரணம். திருச்சி மாவட்டத்தில் இதே பெயரினல் 'ஜெயம் கொண்டசோழபுரம்' என ஊரும் உள்ளது.

சமயப்பற்று

இவர் ஆழ்ந்த சிவபக்தர். ஆனாலும் பல வைணவ ஆலயங்களைப் பாதுகாத்தார் என்றும், மைசூரில் பல வைணவ ஆலயங்களை எடுப்பித்தார் எனவும் அறிகிறோம். நாகப்பட்டினத்தில் உள்ள 'சூடாமணி விஹாரம்' என்ற பௌத்தர் கோயிலுக்கு இவர் 'ஆனைமங்கலம்' என்ற சிற்றூரை மானியமாகத் தந்தார். இவரது நாட்டில் பல சமணப்பள்ளிகள் இருந்தன. இவர் தமக்கையான குந்தவையும் சமய சமரசப்பற்றுள்ளவள் ஆவள். இவருடைய இயற்பெயர் ''அருண்மொழிவர்மன்'' என்பது. இவரது பட்டப்பெயர்களாவன:- மும்முடிச் சோழன், ஜெயங்கொண்டசோழன், அருள்

மொழித்தேவன், சோழேந்திரசிம்மன், க்ஷத்திரிய சிகாமணி, ஜனநாதன், நிகரிலா சோழன், சோழமார்த்தாண்டன், இராசாச்ரயன், இராசமார்த்தாண்டன், பாண்டிய குலாசனி, கேரளாந்தகன், சிங்களாந்தகன், சிவபாதசேகரன் என்பன. இவர் தேவார திருப்பதிகங்களைப் பாடக் கேட்டு, இன்புற்று, அவைகளைத் தொகுத்து, முறைப் படுத்த விரும்பினர். திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியை அழைத்துக்கொண்டு சிதம்பரத்தில் மூவர் திருமேனிகளுக்கு விழா நடத்தி அறைக்கதவைத் திறக்கவைத்து, நம்பியின் மூலம் திருமுறைகளை வகுக்கச் செய்தார். அதனுல் இவருக்குத் ''திருமுறை கண்டார்'' என்ற பெயரும் ஏற்பட்டது.

தஞ்சைப் பெரியகோயில்

இவர் எடுப்பித்ததே தஞ்சைப் பெரிய கோயிலாகும். தமிழகத்தில் அன்று ஏற்பட்ட மாபெரும் கோயில் இதுவேயாகும். இக்கோயிலில் இருபிரிவுகள் உண்டு. முதற் கோபுர வாயில் 90 அடி உயரம் உடைய 'கேரளாந்தகன்' என்ற பெயர் தாங்கியது. இரண்டாம் வாயில் இராசராசன் வாயில் எனப்படுகிறது. இதனைக் கடந்தபின்பெரிய முற்றம் உள்ளது. இறைவன் சந்நிதிக்கு எதிரில் பெரிய முற்றத்தின் மேடையில் ஒரே கல்லில் செதுக்கப்பட்டதும், திருச்சி பெரம்பலூரில் உள்ள பச்சைமலையில் இருந்து கொண்டு வரப்பட்டதுமான நந்தி எம்பெருமான் சிலை உள்ளது. இங்குதான் கீழ்த்தலத்தில் தஞ்சைப்புகழ்பெற்ற குறவஞ்சிக் கூத்து மேடை உள்ளது. பெருவுடையார் என்பது சுவாமியின் திருநாமம். ப்ருஹதீசுவரர் எனவும் இவரை அழைப்பதுண்டு. அம்மன் திருப்பெயர் பெரியநாயகி என்பது. பெருவுடையார் லிங்கவடிவில் காட்சிதருகிருர். இக்கோவிலின் விண்ணளாவிய கருவரை விமானம் 96 அடிகள் கொண்ட அடித்தளத்தில் அமைக்கப்பெற்று, மேன்மேலும் குறுகிய அமைப்பில் 14 அடுக்குகள் கொண்டதாய் பரந்து காண்பதாகும். விமானத்தின்மேல் தளத்தில் அமைக்கப்பட்ட பிரமரந்திரக்கல் 25½ அடிகள் சதுரமும் 80 டன் எடையும் கொண்டதாய் அழகி என்ற தோட்டியால் தரப்பட்ட கல்லாகும். தூபியான செப்புக் குடம், பொன் வேயப்பட்டதாய் பன்னிரண்டரை அடி உயரமும், 3083 பலம் எடையும் உள்ளது. இந்த விமானத்துக்குத் 'தக்ஷிண மேரு' எனப் பெயராகும். இவை தவிரச் சிற்பச்சிறப்பும் சரித்திரச் சிறப்பும்கொண்ட சுற்ருலயங்கள் பல உள்ளன. அவைகளில் கோயிலின் வடமேற்கு மூலையில் உள்ள சுப்பிரமணியர் ஆலயம் பிற்காலத்ததாய் நகாசு வேலைப்பாடு அமைந்த மிகமிக அழகான கோயிலாகும். பொற் கொல்லர்கள் நகைகளில் நகாசுவேலை செய்வதற்கொப்ப இக்கோவில் புறச்சுவற்றில் காணும் நகாசு வேலைகள் பார்க்கப்பார்க்க மனித உள்ளத்தை இறும்பூதடையச் செய்யும். பெருவுடையார் கருவறைச் சுற்றில் சுமார் 930 ஆண்டுகளாக மறைபட்டிருந்த, ஒன்றின்மேல் ஒன்ருய்ப் படர்ந்திருக்கும் சோழர், நாயக்கர் காலச் சுவற்ருேவியங்கள் தென்படுகின்றன. இந்தப் பகுதி மாடக்கோயில் இலக்கணம் கொண்டதென்பர். இத்தலத்து தலவிருட்சம் வன்னிமரமாகும். தீர்த்தங்கள் சிவகங்கை, தேரைத்தீர்த்தம் என்ற கிணறு ஆக இரண்டாகும். சிவகங்கைநீர் திருமிச் சோழன் கிருமியை நீக்கிற்று என்றும் பகர்வர். இக்கோயில் பூசைகள் சைவ ஆகமங்களில் ஒன்ருன மகுடாகமப்படி நாள் தோறும் நடந்துவருகின்றன. இராசராசன் பெருவுடையார் திருவடிவத்தை 64 வீட்டு வேளாண் செட்டிமார்களுடன் நருமதை நதிக்கரையிலிருந்து கொண்டு வந்தார். கருவூர்த்தேவரை வரவழைத்து அஷ்டபந்தனமும் செய்தார். இப்பெருமான் கருவூர்த் தேவரின் திருவிசைப்பாப்பாடல் பெற்றவர். இராசராசன் இக்கோவிலில் அன்ருடம் திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய 48 பிடாரர்களை அமர்த்தினர். கவின் கலைகளைக் கோயிலில் வளர்க்கும் நோக்கத்துடன் 400 பெண்மணிகளையும் வரவழைத்தார். மன்னரின் பெயராலேயே இந்தக் கோவிலுக்கு ''இராசராசேச்சுரம்'' என்ற திருப்பெயரும் ஏற்பட்டது. கருவறைப் புறச்சுவற்றில் காணும் ஓவியங்களில் சுந்தரர் வெள்ளை யானையின்மீது அமர்ந்து கயிலை செல்லும் காட்சியைக் காட்டும் ஓவியமும், அவ்வண்ணமே சேரமான் பெருமான் நாயனர் குதிரையின்மீது அமர்ந்து கயிலை செல்லும் காட்சியைக் காட்டும் ஓவியமும் குறிப்பிடத்தக்கன. பிடாரர் • ஓதுவார்.



ஸ்ரீ பெருவுடையார் (1378–ம் பசலி சதயவிழா)



பெருவுடையார் புறப்பாடு (1378-ம் பசலி சதயவிழா)

முடிவுரை

இராசராசன் இடைக்காலச் சோழமன்னர்களில் முன்வைத்து எண்ணத்தக்கவர். பெருவீரம், படைவண்மை, அரசியல் அறிவு, சமயப்பற்று, திருமுறை ஈடுபாடு, சமரச மனப்பான்மை என்ற அரும் பண்புகள் கொண்ட இராசராசன் ஒரு போற்றத்தக்க அரசஇருடியாவார். சிவபக்தியில் நாயன்மார்களை ஒக்கத் திகழ்ந்தவர். இவரது கிட்டத்தட்ட 30 ஆண்டு அரசாட்சியில் (கி. பி. 955 முதல் 1014 வரை) அரசியல் முறை, கட்டிடக்கலை, இசைக்கலை, நடனக்கலை, நாடகக்கலை, சமயம், இலக்கியம் முதலியவை பெருமளவில் வளர்ச்சியுற்றன. சமய ஈடுபாட்டிலும், சமய சமரச நோக்கிலும் இவருக்கு இவரே இணையாவார் எனலாம்.

இத்தகைய மாபெரும் பெருமானுக்கு அவர் அரசு ஓச்சிய தஞ்சைநகரிலே, பெருவுடையார்திருக்கோயிலில் திருவிழா நடத்திச் சிறப்படைவது சாலவும் பொருத்தமாகும். இவரது பிறந்த நன்னாளாகிய ஐப்பசி சதய நாளில் (21-10-69) செவ்வாயன்று, சதய விழாவையும், பெருவுடையாருக்கு மகா அபிஷேகத்தையும் சிறப்புற நடத்தவும், அந்த உத்தமப் பெருந்தகைக்கு ஒரு வண்ணச் சிலை எழுப்பவும் முயற்சித்து வருவது மிக போற்றத்தக்க பெரும்பணியாகும். தவத்திரு குன்றக்குடி அடிகளார் M. L. C. அவர்கள் சீரியதலைமையில் அமைந்த ஒரு பெருமக்கள் குழுவின்சார்பில் தஞ்சை அறநிலையப் பாதுகாப்பிலாக்காத் துணை ஆணையர் உயர்திரு. T. N. சிங்காரவேலன் அவர்கள், தஞ்சை அரண்மனைத் தேவத்தான மேலாளர் உயர் திரு இரா. அரங்கசாமி அவர்கள், இவர்களின் பெருமுயற்சியில் இந்தப் பெருவிழா எல்லாம்வல்ல பெருவுடையாரின் திருவருளால் இனிதுநடப்பதைக்காணக்குழுமி வருவோம். விழுமி இறைவனை வணங்குவோம்.

ஸ்ரீ மாகாளநாதசுவாமி திருக்கோயில்

கோயில் திருமாகாளம்

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இது கோயில் திருமாகாளம் என வழங்கப்படுகிறது. காவிரித் தென்கரை தலங்களில் 55-ஆவது திருத்தலம். அம்பன், அம்பாசுரன் என்ற இரு அரக்கர்களைக்கொன்ற பாவம்நீங்க காளி பூசித்துப் பேறுபெற்றதால் இப்பெயர்வந்தது.

நன்னிலம் வட்டம் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து 2 கல் தொலைவிலுள்ளது. பேருந்து வசதியுண்டு.

அம்பருக்கும், அம்பர் மாகாளத்திற்கும் இடையில் சோமாசிமாறநாயனர் யாகம்செய்த இடம் இன்றுமுள்ளது. பிரதி ஆண்டு வைகாசி ஆயிலியத்தில் இங்கு யாக உற்சவம் நடைபெறுகிறது. திருஞானசம்பந்தர் இறைவனை மூன்று திருப்பதிகங்களால் பாடியுள்ளார்.

இறைவனின் திருப்பெயர் :- காளகண்டேசுவரர், மாகாளநாதர், இறைவியின் திருப்பெயர் பட்சநாயகி, தீர்த்தம்: மாகாளதீர்த்தம், இங்குக் கல்வெட்டுகள் மூலம் இக்கோயிலில் இருக்கும் திருச்சுற்று மாளிகையும் இங்கு உமாமகேசுவரிக்குத் தனிக்கோயிலும் எடுப்பித்தவன் விக்கிரம சோழமன்னன் என்ற செய்தி தெரியவருகிறது.

திரு. **சுவாமி வேங்கடாசலம்** (நிர்வாக அதிகாரி)

அறங்காவலர்கள்:

திரு. M. K. சீனிவாச அய்யர் (குழுத்தலைவர்)

திரு. N. ராமனுதன், திரு. V. S. அருணுசலம்.

மெய்க்கீர்த்தி

கி. கோதண்டபாணி M. A., B. O. L.,
புட்பம் கல்லூரி, பூண்டி.

மாபெரும் மன்னனுய்ச்சோழப்பேரரசில் விளங்கிய முதலாம் இராசராசன் கி. பி. 985 முதல் 1014 வரை இம்மண்டலத்தை எழிலுற அரசோச்சித் தன்னுட்சியின் நிலையான சின்னமாகவும், வரலாற்றுக் கருவூலமாகவும் ஆக்கி அமைத்தவைகளே அவனது ஆட்சிக்காலக் கல்வெட்டுக்களாகும். இவ்வாறு மாமன்னர்கள் நிலைபேறுடையனவாக அமைத்த வரலாற்றுப் பெட்டகங்களாகிய இக்கல்வெட்டுக்கள் சில மரபினைப்பின்பற்றி எழுந்துள்ளன. மெய்க்கீர்த்தி இலக்கணம் அனைத்தும் அடக்கி இக் கல்வெட்டுக்களை ஆக்கியளித்துள்ளனர் அக்காலமன்னர்கள். முதற்கண் ஸ்வஸ்திஸ்ரீ என மங்கலச் சொல்லில் துவங்கி நிலமகளும் திருமகளும் அவனை அணைந்து நிற்க அவன் பெற்ற வெற்றிகள் அனைத்தையும் விளக்கி அதன் பின்னர் அவன் ஆட்சியாண்டில் இன்ன நாள் இன்ன அறம், இன்னமானியம் இதற்காக அளிக்கப்பட்டது; இதற்கு இன்னின்ன ஊர் சான்று என இக்கால ஆவண ஓலை போல எழுதப்பட்டுவந்த முறையை நாம் கல்வெட்டுக்களில் நன்கு உணரலாம்.

சிதைந்து சின்னுபின்ன முற்ற சோழர் ஆட்சிக்குப் புத்துயிரூட்ட இராசராசன் தன் வாழ்நாள் முழுதும் போராடவேண்டிய நிலை ஏற்பட்டது. இப்போராட்ட வெற்றியினையே மெய்க்கீர்த்தி மிகுத்துக்கூறுகிறது. இது இராசராசன் கல்வெட்டாலறியலாம். பாண்டிய மன்னன், கேரளமன்னன், ஈழ மன்னன் ஆகிய மூவரும் ஒருங்கிணைந்து இராசராசன்மீது தாக்குதல் செய்தனர். இரு மாபெரும் போர்களினல் பாண்டியனை வென்று கேரளநாட்டினைத் தன்வசப்படுத்தினுன். காந்தளூர்ச் சாலை கலமறுத்த செய்தியும் விழிஞப்போரும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த போர்களாகும். கடற்படையின் உதவியால் ஈழநாட்டின் வடபகுதியை வென்று கைப்பற்றித் தன் உரிமைப்பகுதியாக்கி 'பொலனறுவை' என்ற நகரைத் தலைநகராக ஆக்கினுன். கன்னடப் பகுதியான கங்கபாடி, தடிகைபாடி, நுளம்பப்பாடி ஆகிய நகரங்களும் சோழராட்சியில் சேர்க்கப்பட்டன. வேங்கிநாட்டை அரசோச்சிய சாளுக்கிய மரபினர் இராசராசனுக்கு அடிபணிந்து அடங்கி ஒடுங்கி வாழ்ந்தனர். வேங்கிநாட்டில் அவ்வமயம் ஒரு கலகம் நடந்தது. வேங்கிநாட்டின் மன்னனை 'தனர்ணவனைக் கொன்றுவிட்டுத் தெலுங்குச்சோழச் சிற்றரசன் பீமன் வேங்கியைக் கைப்பற்றி இருபத்தேழு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். தனர்ணவனின் மக்கள் இருவருக்கும் உதவியளிப்பதாக இராசராசன் உறுதிமொழி அளித்தான். அதனை நிறைவேற்றும்பொருட்டுப் பீமனைப் போரில் வென்று கைது செய்து, தனர்ணவனின் மூத்த மகன் சக்திவர்மனை வேங்கை மன்னனுக முடிசூட்டினுன். பிறகு மேலைச்சாளுக்கியருடன் அமர் தொடங்கினுன். இராசராசன் மகன் இராசேந்திரன் சாளுக்கியர் நாட்டிற் புகுந்து அதன் தலைநகரமான 'மானிவகேதத்தை' அழித்துக் கொள்ளிப் பாக்கை, வனவாசி முதலிய கோட்டைகளையும் கைப்பற்றினுன். மேற்குக் கடலில் வெகு தொலைவில் அமைந்த மாலத்தீவுகளையும் சோழ அரசுடன் இணைத்துக்கொண்டான்.

மேலும் கடற்படையின் உதவிகொண்டே தென்னிந்தியாவின் வாணிகம், சிறப்பாகச் சோழநாட்டு வாணிகம் கீழைநாடுகளில் சிறப்பாகவும்இலாபகரமாகவும் வளர்ந்தது,

ஸ்ரீ விஜய நாடாகிய மலேயா, சுமத்திரா, மேற்கு ஜாவா முதலிய பகுதிகள் அடங்கிய இந்நாட்டினுடன் அமைதி உடன்படிக்கையும் வாணிக ஒப்பந்தமும் ஏற்படுத்திக் கொண்டான். அந்நாட்டின் மன்னன் மாற விஜயோத்துங்கவர்மன் நாகப்பட்டினத்தில் அமைத்த 'சூடாமணி விகாரம்' என்ற புத்த மதப் பள்ளிக்கு இராசராசன் பல கிராமங்களை மானியமாக அளித்துள்ளான். பல நாடுகளை வென்று அங்குக் கிடைத்தபெறற்கரிய பொருளைக் கொண்டே தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தை நிறுவினன். அவன் அமைத்த காரணத்தாலேயே இக்கோவில் 'இராசராசேச்சுரம்' என்றபெயரையும் பெற்றது. இராசராசன் நிறுவிய இக்கோவில் இன்றுவரை ஈடும் எடுப்பும் இல்லதாய் ஒப்பும், மிக்கும் உரைக்க முடியாத நிலையில் ஒளிர்கின்றது. இராசராசனல் இக்கோவிலுக்கு அளிக்கப்பட்ட பொன்னும், மணியும், அணியும் விலைமதிக்க முடியா அளவினதாகும். இக்கோயிலில் தேவாரம் பாடுதற்கும், வேதம் ஓதுதற்கும் சிறந்த ஏற்பாடுகள் செய்துள்ளான். மேலும் நாவரசர் மீதில் கொண்ட எல்லையற்ற பற்றின் அறிகுறியாக அப்பூதியடிகள் தன் அறச்சாலை, மக்கள், அளவை, கருவி அனைத்திற்கும் அந்நாவுக்கரசர் பெயரினையே வைத்திருந்தது போலவே இராசராசனும் தன் உள்ளம் உவந்த பெயராகிய ஆடல் வல்லான் என்ற பெயரினை அளவு கோலாகிய மரக்காலுக்கும் இட்டு வழங்கினன் எனக் கல்வெட்டு அறிவிக்கின்றது. 'ஆடவல்லான் என்னும் மரக்காலால் நிசதம் முக்குறுணி நெல்லாக உடையார் உள்ளூர் பண்டாரத்தே பெறவும்' என்ற வரி இராசராசன் கல்வெட்டில் காணப்படும் செய்தியாகும். மேலும் இந்தப் பெருவுடையார் கோவிற்கு இப்பெரு மன்னனின் தமக்கையார் குந்தவையும் அவன் அரசியரும் மிகுதியான நிலக்கொடை அளித்துள்ளனர் எனத் தெரிகிறது.

வரலாறு காணுத ஒரு சோழப்பேரரசினை நிறுவிய பெருமை இராசராசனைச்சாரும். அவன் காலத்து அரசியல் சிறப்பும் கிராம ஆட்சி நாட்டாட்சியும் கிராமம், நாட்டுப் பிரிவுகளும் ஆட்சி முறைகளும் மிக உயர்ந்த முறையில் அமைக்கப்பட்டிருந்தது. ஆகையாற்றுன் உலகப்பெருமன்னர்கள் வரிசையில் நமது பெருவுடையார் ஆலயத்தை நிறுவிய இராசராசனைப் போற்றுகின்ருேம். சரிதமும் போற்றுகின்ற நிலையைக்காண்கிருேம்.

இனி இராசராசனின் கல்வெட்டுக்களில் மெய்க்கீர்த்தியாக அவன் போர் வெற்றியைக் குறிக்கும் சாசன அடிகளைக் காண்பாம்.

"ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி, வேங்கைநாடும் கங்கபாடியும் நுளம்பப்பாடியும், தடிகைபாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும், எண்டிசை நிகழ ஈழமண்டலமும் திண்டிறல் வென்றித்தண்டாற் கொண்டு தன்னெழில் வளரூழியுள் எல்லா யாண்டும் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீகோவிராஜகேசரி வர்மர்க்கு யாண்டு எட்டாவது"

எனத்தொடங்கும் கல்வெட்டுக்கள் அவன் புகழ்கூறும் செய்திகளாக அவன் போர் வெற்றியைக் குறிப்பிட்டுள்ளதையறியலாம் இம்மன்னனின் இந்த ஆட்சி யாண்டு இன்ன அறம் செய்யப்பட்டது எனப் பின்னர்க் கூறப்படும்.

இனி இராசேந்திரனின் கல்வெட்டுக்களைக் காணலாம்.

"ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னிவளர இருநில மடந்தையும் போர்ச்சயப் பாவையும் சீர்த்தநிச் செல்வியும் தன் பெருந்தேவியராக்கி இன்புற நெடிதியல் ஊழியுள் இடைதுறை நாடும் துடர்வன வேலிப் படர்வனவாசியும் சுள்ளிச் சூழ்மதில் கொள்ளிப் பாக்கையும் நண்ணற் கருமுரண் மன்னைக் கடக்கமும் பொருதடரி ஈழத்தரைசர் முடியும் ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியு முன்னவர் பக்கவித் தென்னவர் வைத்த சுந்தர முடியும் இந்திரனுரமும் தெண்டிரை ஈழ மண்டல முழுவது மெறிபடைக் கேரளர் முறைமையிற் சூடும் குலதனமாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர் மாலையம் சங்கதிர் வேலைத் தொல்

பெருங்காவற் பல்பழந்தீவும் செருவிச் சிறவி இருபத்தொருகால் அரைசுகளை கட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதியிருத்திய செம்பொற் றிருத்தகுமுடியும் மாப்பெருந் தண்டாற் கொண்ட கோப்பர கேஸரி வர்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு எட்டாவது''

எனத் தொடங்கி முடிகிற நிலையைக் காண்கின்றோம். மங்கல முண்டாகுக எனப் பொருள்தரும் ஸ்வஸ்திஸ்ரீயில் துவங்கி திருமகளும், நிலமகளும், புகழ்மகளும், வெற்றி மகளும் உரிமைமகளிராய் விளங்க, அவன் பெற்றசீரும், சிறப்பும், ஊரும் பேரும், நாடும், பொருளும் வென்றியும் விருதும் விளங்கக்கூறுவது மெய்க்கீர்த்தியாகும்.

ஆகலின், மெய்க்கீர்த்தி பெற்ற பெருமன்னர்களில் தலையாயவர்கள் இராசராசனும் அவன் ஆற்றல்சால் தனயன் இராசேந்திரன் ஆகிய இருவருமாம் என உணரக்கிடக்கிறது.

ஸ்ரீ கல்யாண ரெங்கநாதசுவாமி திருக்கோவில்

திருநகரி

சீர்காழி வட்டம் **தஞ்சை மாவட்டம்**

மிகத் தொன்மையான இக்கோயில், சீர்காழியிலிருந்து பெருந்தோட்டம் செல்லும் வழியிலுள்ளது. ஸ்ரீ உடையவர் காலத்திற்கு முற்பட்டது. திருமங்கை ஆழ்வாரால் பாடல்பெற்றது.

கார்த்திகை மாதத்தில் ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் அவதாரத் திருவிழாவும், தைமாத அமாவாசையில் மங்களாசாசனம், 12 கருடசேர்வைத் திருவிழாவும், பங்குனி மாதத்தில் ஸ்ரீ பெருமாள் பிரம்மோற்சவமும் இங்கு நடைபெறும் திருவிழாக்களில் இன்றியமையாதனவாகும்.

திருமங்கை மன்னனுக்கு ஸ்ரீ பெருமாள் திருமந்திர உபதேசம் செய்த தலம் இவ்வூரின் அருகில் உள்ளது.

அறங்காவலர்கள் :

திரு. S. கோவிந்தசாமிப்பிள்ளை (தலைவர்)

திரு. Dr. R. சாரங்கபாணி M. B., B. S.

திரு. T. ராமலிங்கம் பிள்ளை.

நிர்வாக அதிகாரி

திரு. A. தனபாலன் B. A.,

பேரரசன்

(புலவர் R. கணேசன்)

சோழ நாட்டின் வளர்ச்சிக்கு முதற் காரணமாக இருந்தது சோழர் குடியில் தோன்றிய அரசர்களின் ஆற்றலேயாம். அத்தகைய ஆற்றலமைந்த சோழமன்னர்களுள் முதல் இராசராச சோழன் தலைசிறந்தவன் ஆவான். இவ்வேந்தன் இரண்டாம் பராந்தக சோழனுக்கு அவன் பட்டத்தரசியாகிய வானவன்மாதேவிபாற் பிறந்த அரும்பெறற் புதல்வன் ஆவன். இவன் பிறந்தபொழுது ஆதிசேடன் மனைவியராகிய நாகர்குலமகளிர், தம் கணவற்கு இனிசிலப்பொறை குறைந்து விடும் என்னும் உவகை மிகுதியால் நடித்தனர் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. அன்றியும் அச்செப்பேடுகள் இவன் கைகளில் சங்கு, சக்கரக் குறிகள் அமைந்திருந்தன என்று புகழ்கின்றன. அவற்றையெல்லாம் கூர்ந்துநோக்குங்கால், இவன் பேரரசனுதற்குரிய உத்தம இலக்கணங்கள் அமைந்த உடலமைப்பு உடையவனாய் இளமையில் திகழ்ந்திருத்தல் வேண்டும் என்பது இனிது புலனாகின்றது.

இவனுடைய தந்தை இரண்டாவது பராந்தகனான சுந்தர சோழன் இறந்தபிறகு சுந்தர சோழன் உடன்பிறந்தோனான மதுராந்தக உத்தமசோழனே அரசுசெலுத்தினான். இவன் பட்டத்திற்கு வருங்காலை சோழநாட்டில் இவனை வேண்டாது பல குடிகள் இராசராசனையே வேண்டி, உள்நாட்டுக் கலகம் விளைவிக்க முயன்றனர். அஃதறிந்த இராசராசன் அரசினைவிரும்பாது குடிகளையடக்கி உத்தம சோழனுக்கே பட்டங்கட்டுவித்தான். சோழநாட்டு அரசியல் நன்மையைக் குறித்துச்செய்த இராசராசன் செயல் பாராட்டத்தக்கது. சின்னஞ்சிறு வயதிலிருந்தே குடிகள் இவனிடத்தில் மிக்க அன்புகொண்டிருந்தனர். வயதுக்கு மேம்பட்ட அறிவும், வல்லமையும்பெற்று இருந்ததினால் இவனுடைய பெருமை நாடு எங்கும் பரவிற்று. உத்தம சோழன் அரசு செலுத்துகையில் இவன் இளங்கோவென விளங்கி வந்தான். பின்னாளில் உத்தம சோழனும் இராசராசனின் பெருந்தன்மையைப் பாராட்டித் தன் சந்ததியார்க்கு அரசு கொடுக்காமல் இராசராசனுக்கே முடி சூட்டி மண்ணுலகை விட்டு விண்ணுலகு எய்தினான்.

இராசராசன் இளம் பருவத்தே பல வகைப் படைப்பயிற்சியும் பெற்றுவந்தமையால் அக்காலத்தில் இவனையொத்த வீரர்கள் தமிழகத்திலும் வெளி நாடுகளிலுமில்லை. இராசராசன் அரியணையெய்திய பன்னிரண்டாம் ஆண்டுமுதல் பதினான்காம் ஆண்டு வரைகங்கபாடி, வேங்கிநாடு, நுளம்பப்பாடி, தடிகைபாடி, குடமலைநாடு, பன்றிநாடு முதலிய நாடுகளின்மீது படையெடுத்து வெற்றி பெற்றான்.

நம் இராசராசன் போன்ற அறிவுந் திருவும்பெற்ற அருந்திறலரசர் தமிழகத்திலதிகமிருந்திலர் என்பது வெள்ளிடைமலை போல வரலாற்று ஆய்வினால் விளக்கமாகும். பழைய தமிழ் வேந்தர்களுள்ளே சோழன் கரிகால் பெருவளத்தானும், சேரன் செங்குட்டுவனுந் தவிர வேறெவரும் அவனுக்கிணை கூறத்தக்கவரல்லர். அவனது உத்தம குணங்களுக்குள்ளே இராசராசனது தெய்வ பக்தியைத் தலையில் வைத்துப் பாராட்டுதல் தகும். இராசராசனுடைய

இயற்கைக் குணங்கள் பலவற்றுள்ளே அவனது வீரத்தன்மையே மேம்பட்டு விளங்கியிருந்ததென்பது சிறிதும் மிகையாகாது. பகைவர்களை அடக்குவதும் நாட்டைப் பெருகச்செய்வதுமே அவன் மேற்கொண்டிருந்த பெருஞ் செயலாக இருந்தன. அவனது பெரும்புகழ் தமிழகத்தில் மட்டுமின்றி எண்திசையும் பரவியிருந்தது. அவன் அறிஞர் பலரையடுத்தும், அவர்களுடன் அளவளாவியும் அறியவேண்டுவனவற்றை நன்கு அறிந்தவன். சிவனடியார்களிடமும், ஓதுவார்களிடமும் அவன் வைத்திருந்த மதிப்பும் அன்பும் வியப்பிற்குரியவை. அவனது செங்கோற் பெருமையும் மதிக்கத் தக்கதே. அவன் தன்னுட்டுக் குடிகளைப் பெரிதும் போற்றி ஆட்சிபுரிவதில் பெருநோக்குடையவன். குடிகளும் அங்ஙனமே அவன்பாற் பேரன்பு பூண்டிருந்தனர். 'செங்கோல் வளையுமாயின் அரசர் உயிர்வாழார்' என்னும் முன்னேருரைத்த மொழியினுண்மையை யறிந்து இராசராசன் தென்னுடாண்டான். அரசன் தண்ட யாத்திரை புறப்படுமுன்னர்த் தன் படைத்தலைவர்க்கும் சேனைகட்கும் பெருவிருந்து செய்து அவர்களை மகிழவைப்பது வழக்கமாம்.

இராசராசன் சேர நாட்டு மன்னனையும் பாண்டியநாட்டு மன்னனையும் போரில் வென்று அந்நாடுகளைச் சோழநாட்டுடன் சேர்த்து ஆட்சி புரிந்ததனுல், இவனுக்கு 'இராசகேசரி வர்மன் மும்முடிச் சோழன்' எனப்பெயருண்டாயிற்று. குறுநில மன்னர் பலரையும் சிற்றரசர் சிலரையும் வென்று பலநாட்டு மன்னர்கள் கப்பங்கட்டக் காத்திருந்தமையால் திருவிற்சிறந்த இராசராசனை 'இராசாஸ்ரயன்' என உலகம் கூறுவதாயிற்று. இப்பட்டம் அவனது ஆட்சியில் இருபதாம் ஆண்டில் அளிக்கப்பட்ட தென்பதை 'திருவல்லம் சிலா சாசனம்' குறிக்கும். வேலும் வாளுங் கொண்ட வடிவினை உடைய இராசராசன் உயர்ந்த வெண்கொற்றக் குடை நிலைபெறக் கடலெல்லைக் கண் நிலத்தைப் பரப்பி எண்டிசையிலும் வெற்றிக் கொடியை நாட்டினன் அவனது ஆண்மைக்குக் குடிகள் மகிழ்ந்து 'ஜெயங்கொண்டசோழன்' என்ற புகழ்ப்பட்டமுங் கொடுத்தனர். சோழநாட்டிலும், சோழநாட்டைச் சுற்றிலும் உள்ள மற்ற நாட்டிலும் திருப்பணி அறச்செயல்கள்செய்தும் சிவபக்தி மேலிட்டு விளங்கினமையால், இராசராசனுக்குச்சிவனடியார்களும் மற்றத் திருக்கூட்டத்தார்களும் 'சிவபாதசேகரன்' என்னும் புனித நாமத்தை ஈந்தனர். இவனுக்கு அருள்மொழிவர்மன் கோராசகேசரி வர்மன் தென்னவன் பராக்கிரமன், கீர்த்தி பராக்கிரம சோழன், க்ஷத்திரிய சிகாமணி, கேரளாந்தகன், சிவபாத இருதயன் என வேறுபலப் புகழ்நாமங்களும் உண்டு.

இராசராசன் தஞ்சையில் பிரகதீஸ்வர சுவாமிக்குப் பெரியகோயிலைக் கட்டினன். இக்கோயிலுக்கு இராசராசேசுவரர் கோவில் என்ற பெயருமுண்டு. தென்னிந்தியாவில் இப்பொழுதுள்ள மிகவும் பழமையான கட்டிடங்களுள் இது மிகவும் விநோதமானது. புராதனத் தோற்றங்களைப் பார்க்க வரும் தற்காலத்தவர்களுக்கு இது சிறந்த காட்சியாக உள்ளது. வட ஆற்காடு மாவட்டத்தில் மேலபாடி என்னும் ஊரில் ஒரு கோயிலையும் இராசராசன் கட்டுவித்தான். அக் கோயிலுக்குச் சோழேசுவரர் ஆலயம் என்று பெயர். இராசராசன் பிறமதங்களில் வெறுப்புக் காட்டுதலின்றித் தன்காலத்து வழங்கிய எல்லாச் சமயங்களிலும் அன்புவைத்து ஆதரித்து வந்தான். அவன் ஆட்சிக்காலத்தில் சைவரும், லிங்காயத்தவரும், வைணவரும், சைனரும்கலந்து வாழ்ந்துவந்தனர். அவன் தன்வைதிகச் சார்புக்கேற்பப், பெரியோர்களைப் பெரிதும் ஆதரித்து, அவர்கள்கூறும் உறுதிமொழிப் படியே ஒழுகிவந்தவன் என்பதை அவனுடைய சிலாசாசனங்களே விளக்கும். சிவன்கோயிலுக்குக் கொடுத்தபடியே மற்ற வைணவ, புத்த, சைன கோயில்களுக்கும் மானியங்களும், பொன்னும், மணியும் அவன் கொடுத்தான். தவிர, நாகப்பட்டினம் தாலுக்காவிலுள்ள ஆனைமங்கலம் என்னும் கிராமத்தையே மானியமாக இராச

ராசன் கொடுத்ததாகவும் தெரிய வருகிறது. தஞ்சை இராசராசேசுவரர் கோவிலில் அநேக புத்த விக்கிரகங்களையும், சிலைகளையும், மண்டபத்தூண்களிலும், விமானங்களிலும் அமைக்கும்படிக்கட்டளையிட்டான். நாகப் பட்டினத்தில் ஒரு புத்தப்பள்ளியையும் தன் பெயரால் கட்டும்படி உத்தரவிட்டான்.

இராசராசனுடைய காலத்தில் கல்வி மேம்பட்டிருந்தது. கல்விக் கழகங்களும் பல இடங்களில் ஏற்படுத்தப்பட் டிருந்தன. சங்க நூல்களைப் போல நூல்கள் இவன் காலத்திலில்லாமற் போன போதிலும் சங்கப் புலவர்களைப் போலப் புலவர் பெருமான் கள் பலர் இவன்காலத்தில் இல்லாமற்போன போதிலும், சங்க நூல்களையும், சங்கப் புல வர்களையும் வெகு சிறப்பாகக் கொண்டா டினர். திருவிசைப்பா இயற்றிய கண்ட ராதித்திய தேவரும், அப்பர், சுந்தரர், சம்பந்தர் அருளியதேவாரங்களும் மாணிக்க வாசகர் திருவாசகமும். திருமுறைகளாக வகுத்துப்பண்படுத்தி இயற்றிய நம்பியாண் டார் நம்பிகளும் இராசராசன் காலத்தில் இருந்தனர். வைணவ சமயாச்சாரியார்களில் ஒருவரான யமுனசாரிய ரென்னும் ஆள வந்தார் இராசராசன் காலத்தவர். இராச ராசன் தேவிமார்களும் சுற்றமும் நல்ல தெய்வபக்தி வாய்ந்தவர்களெனத் தெரிய வருகிறது. இராசராசனுக்கு மனைவிமார் அறுவரென விளங்கும். லோகமகாதேவி, பிரீதிமாதேவியார். பஞ்சவன் மகாதேவி, அபிமானவல்லி, சோழமகாதேவி என்ற பெயர்களே தெரியவரும். இவரில் லோகமகா தேவியே பட்டத்திற்குரிய அரசியாவாள். இத்தேவி அரசியல் ஞானத்திலும் சிறந்தவ ரெனக்கூறப்படுகின்றது. இத்தேவி அறிவு, திரு, அழகு, அமைதி முதலியஉயர்குணங்க ளெல்லாம் ஒருங்கு வாய்ந்து இருந்ததோடு, தன் நாயகனுக்கு உற்ற சமயங்களில் உறுதி கூறும் ஆற்றலுடையவராயும் விளங்கினர். இவனது புதல்வன் இராசேந்திரன். இவன் காலத்திலேயே யுவராசனாக இருந்தான். இராசராசன் பகைவர் நாட்டு மகளிரைச் சிறைகொண்டு அவர்களுடைய கற்பும், மானமும் சிதைவுறாமல் பாதுகாத்து வந்த னன். இவன் காலைப்பொழுதில் எதையும் அருந்தாது சிவபூசை முடித்துச் சிவனடி யார்களுக்கு அறுசுவை உண்டிகளைப் படைத்துப் பிறகு உண்பது வழக்கம். பூசையின்றி ஒருநாளும் இரான். இவனு டைய கோப்பெருந்தேவியும் மற்ற மனைவி களும் பெண்டிர் பலருக்குப் பலவிதமான தானங்களையும் செய்துவந்தனர். இவன் இல்லற வாழ்க்கையை இனிது நடாத்திய பேரரசன் என்ற பெரும் புகழ்பெற்று வந் தான். சோழ மன்னர்களுக்குக் கருவூர், உறையூர், நாகப்பட்டினம், தஞ்சை, திருவாரூர், காஞ்சிமுதலியவை தலைநகராகக் கூறப்பட்டிருப்பினும் இராசராசன் நெடுங் காலம் தஞ்சை நகரிலே அரசுபுரிந்து வந் தான். சோழநாடு இராசராசனால் ஆறு மண்டலங்களாய்ப் பிரிக்கப்பட்டு இருந்தது.

1. தொண்டை மண்டலம்: இது தென்பெண்ணைக்கும் வடபெண்ணைக்கும் இடையே உள்ளது.

2. சோழ மண்டலம்: தஞ்சையும் திருச்சிராப்பள்ளியுமே யாகும்.

3. இராசராச மண்டலம்: மதுரை யும் திருவிதாங்கூருமாகும்.

4. அதிராசராச மண்டலம்: சேல மும் கோயமுத்தூருமாகும்.

5. கங்கைகொண்ட சோழமண்டலம்: மைசூரும் பெங்களூருமாகும்.

6. நிகரிலி சோழமண்டலம்: இது மைசூரின் கீழ்ப்பாகம். வேங்கிநாடு வகுக் கப்படாமல் தனியே இருந்தது. தவிர, மும் முடிச்சோழ மண்டலமெனவு முண்டு. இது ஈழம் எனப்படும். இம்மண்டலங்களில் தனித்தனியே அரசு நடத்தும் தலைவரும் உண்டு. இராசராசனின் அரச வம்சத்தைச் சேர்ந்தவர்களாலும், அல்லது சிறந்த வீரஞ் செறிந்த போர்வீரர்களாலும் அம்மண்ட லங்கள் பரிபாலிக்கப்பட்டுவந்தன. குடிகள் அரசனைப்போற்றி 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என இருந்தனர். குடிகள்வேளாண் மையையும் வாணிகத்தையும் செவ்வனே நடாத்திப் பண வருவாயினைப் பெருக்கி வந் தனர். மலைவளங்களும், கடல் வளங்களும்,

நிலவளங்களும் கொழித்தன. ஆணைவழி நிற்றல், மாண்வினை தொடங்கல் கைக்கடனுற்றல் குற்றம்மனத்தின்மை சுற்றம்போற்றல், நீங்காத முயற்சி, மன்னிறை தருதல், ஒற்றுமை கோடல், ஒழுக்கம், விருந்து புரந்தரலாகிய பத்துவகைத் தொழில்களையும் உழுதுண்போராகிய வேளாளர் செய்து வந்தனர். கிராமங்களிலும் தனியூர்களிலும் குடிகள் அரசனாலும் அரசனுடைய பரிசனங்களாலும் பயமின்றி வாழ்ந்தனர். கொலையும், களவும், பொய்யும். வஞ்சனையும் குடிகளிடத்தில் இல்லை. மாதர்கள் மறைந்து வாழ்தல் (கோஷா) என்னும் வழக்கம் இன்றிக் கற்பிற் சிறந்து உரிமையுடன் வாழ்ந்துவந்தனர். பெண்கள் கிள்ளைவளர்த்தல், அம்மானை ஆடல், குரவைக்கூத்து, பரணிக்கூத்து முதலியவைகளைப் பொழுது போக்காகக்கொண்டு மகிழ்ந்திருந்தனர்.

இராசராசன் ஆட்சியில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளுள் சோழநாடு முழுவதையும் அளந்தமை ஒன்றாகும். ஓர் அரசன் தன்னாட்சிக்குட்பட்ட நாடுகள் எல்லாவற்றையும் அளந்து நிலங்களின் பரப்பை உள்ளவாறு உணர்ந்தாலன்றி நில வரியை ஒழுங்குபடுத்திக் குடிகளிடமிருந்து வாங்குவது இயலாததாகும். ஆதலால் இவன் தன் ஆட்சியில் பதினாறும் ஆண்டாகிய கி. பி. 1001 - ல் சோழநாடு முழுவதையும் அளக்குமாறு ஆணையிட்டான். அவ்வேலையும், குரவன் உலகளந்தானாகிய இராசராச மாராயன் தலைமையில்தொடங்கி இரண்டு ஆண்டுகளில் நிறைவேறியது. அவ்வதிகாரி நாடுமுழுவதையும் அளந்தகாரணம் பற்றி 'உலகளந்தான்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றனன். நிலம் அளந்த கோல் பதினாறுசாண் நீளமுடையது. அதனை உலகளந்த கோல் என்று அக்காலத்து வழங்கி வந்தனர். தமிழகத்தில் கிராம சமுதாயம் காலங்கண்ட வழக்கமாக வந்தபோதிலும் இராசராசன் காலத்தில் அச்சமுதாயம் மிக்க சிறப்புற்று விளங்கின. இக்கிராமச் சமுதாயங்கள் தனித்தனியே குடியரசு கொண்டதாக விளங்கினவென மேனாட்டுவரலாற்றுக்காரர்களே கூறுவர். இக்கிராமச் சமுதாயத்தார்களின் சபைக்கு 'மகாசபை' என்று பெயர். இக்கிராம சபைகளுக்குத் தேர்தல்கள் பல உண்டு. இத்தேர்தலை செம்மையாக நடத்துவதற்குக் கிராமங்கள் பலபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்தின் பிரிவிற்கும் 'குடும்பு' என்று பெயர். முதன்முதல் தேர்தல்களுக்குரித்தானவர்களின் பெயர்களை ஓலையில் எழுதி அந்தந்தப் பிரிவுகளுக்கும் அனுப்புவர். பிறகு பெயர்கள் எழுதின ஓலைகளைப் பெரிய பானைகளிற் போட்டுப் பொறுக்கி எடுப்பது வழக்கம். இக்கிராமச் சபைகளுக்கு ஆண்களும், பெண்களும் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவர். அவன் ஆண்ட காலத்தில் நீதி முறைசெய்யும் சபைக்கு ஒரு பெண் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் காஞ்சிபுரத்திற்குப் பன்னிரண்டு கல் தொலைவில் உள்ள உத்தரமேரூநல்லூரில் அகப்பட்ட சிலாசாசனமொன்று கூறுகின்றது. அப்பெண்ணுக்கு "பெருங்கர நாயகி" அல்லது "தேவர்கள் அம்மை" எனப்பெயர் என்றும் அச்சாசனம் கூறும்.

வண்டுகள் தேன் உண்ணும் பூவை வருத்தாது விடுதல்போல, செங்கோன் முறைமை கோடாத மன்னர்தம் அடிநிழற்கீழ் வாழும்குடிகளை வருத்தாது ஆறில் ஒரு கடமை கொள்ளல் வேண்டு மென்பதை அறிந்தே இராசராசன் ஆறிலொரு கடமையைக் குடிகளிடமிருந்து பெற்றான். வரிவசூலிப்பவருக்கு 'வரிக்கூறு செய்வார்' என்பர். இங்ஙனம் இராசராசன், தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு வாணிகத் துறையை வளம் படுத்திக் கடாரம் முதற் கொல்லம்வரை செங்கோலோச்சி தமிழ் நாட்டை உழவு, வாணிகம், தொழில் முதலியவைகளில் நாகரிகப் படுத்தி உலகாண்டான் எனக்கூறலாம். இவ்வாறு முடியுடை மன்னர்க்கொரு முடியாய் விளங்கித் தமிழகத்தை மேம்படச் செய்த பேரரசன் இராசராச சோழனைப் பற்றி யாம் - அறிந்தவற்றை ஒருவாறு சேர்த்துக்கூறினேம், தமிழன்பர்கள் குணநாடிக் கொள்வார்களாக.

சோழர்காலத்துச் சைவசமயம்

தேவார இசைமணி, R. சங்கரநாராயணன்,

திருமருகல்.

முன்னுரை - சங்ககாலத்துச் சைவம்:-

பிற்காலச் சோழர் அல்லது சோழப் பேரரசர் எனப்பட்டவர் ஏறத்தாழ 10-ஆம் நூற்றுண்டிலிருந்து 13-ஆம் நூற்றுண்டு வரை சிறப்புற்றிருந்த சோழராவர். அவர் கட்கு முன்னர் ஏறக்குறைய கி. பி. 300 முதல் 900 வரை தமிழகத்தில் பேரரசராக இருந்தவர் பல்லவர் என்பர். அவர்கட்கு முற்பட்டதே சங்ககாலம் என்பது. சங்க காலம் என்பது தமிழக வரலாற்றில் பொற் காலம் என்னலாம். சேர, சோழ, பாண்டிய அரசர் தம்மாட்சிபெற்று விளங்கினர்; தம் தாய்மொழியாகிய தமிழைத் தம் உயிரெனக் கருதி வளர்த்தனர்; இயல், இசை, கூத் தெனும் முத்தமிழையும் அவற்றில் வல்லா ரையும் போற்றிப் புகழ்ந்தனர்; தத்தம் சமயத்தில் அழுத்தமான பற்றுடன் இருந் தனர். ஆயினும் பிறசமயங்கள் நாட்டில் பரவ இடந்தந்தனர்; சமயச்சொற்போர்கள் நிகழ இடம்தந்து சிறந்த சமயத்தில் சேரப் பொதுமக்கட்கு உரிமையளித்தனர். எனி னும் சங்ககாலத்தில் தமிழ்நாட்டுச் சமயங்க ளாக விளங்கியவை சைவ வைணவங்கள் என்று துணிந்து கூறலாம். அவற்றுள்ளும் சைவசமயமே முதற் படியில் இருந்தது என்பது,

'' நுதல் விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துப் பூத மீருக ''

என்று, பௌத்தசமய ஆசிரியராகிய சாத் தனர் கூற்றுக்கொண்டும், கோயில்களைக் குறிக்குமிடத்துச் சமணராகிய இளங்கோ வடிகள்,

'' பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும் ''

என்று கோயில்வரிசையில் முதற்கண் சிவ பெருமான் திருக்கோயிலைக் கூறியிருத்தல் கொண்டும் நன்குணரலாம். சைவப்புலவர் ஒருவர் கூற்றைச் சான்ருகக் கொள்வதினும் புறச்சமயத்தவரும்பெருங்காப்பிய ஆசிரியரு மாகிய மேற்சொன்ன இருவர் கூற்றுக்களே சங்ககாலத்துச் சைவச் சிறப்புக்குச் சிறந்த சான்ருகும்.

பல்லவர் காலத்துச் சைவம்:

பல்லவர்முதற்கண் பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களில் மிக்க ஈடுபாடு கொண் டிருந்தனர்; ஆயினும் கி. பி. 7-ஆம் நூற் ருண்டு முதல் சைவத்தை வளர்ப்பதிற் சிறந்துவிளங்கினர். அப்பர் காலத்தவனை முதலாம் மகேந்திரவர்மன், ''சிவனை நினை யாதவர் ஆறுமுறை நரகத்திற்குச் செல்வா ராக!'' எனக் கல்வெட்டிற் பொறித்துச் சிவலிங்க வடிவில் அமைந்த மணிமுடி தரித்து நாடாண்ட முதலாம் பரமேஸ்வர வர்மன், அவன் திருமைந்தனும் பெரிய கற்றளியாகிய கயிலாசநாதர்கோயிலை எடுப் பித்தவனுமான இராசசிங்கன், திருவதிகைக் கோயிலுக்குச் சிறப்புச் செய்த இரண்டாம் பரமேசுவரன், மூன்ரும் நந்திவர்மனை கழற்சிங்கன் என்பவர் நாயன்மார்கள் காலத்துச்சைவ சமயத்தை வளர்க்கப் பேரு தவி புரிந்தவராவர். இப்பல்லவர் காலத்து விளங்கிய நாயன்மார்கள் தொண்டை நாட் டிலும், சோழநாட்டிலும் சைவசமயத்தை நன்கு வளர்த்தார்கள்; பிறசமயத்தவரைப் பலவகை வாதங்களில் வென்ருர்கள். பல் லவர் காலச் சைவசமய நிலையை அவர்கள் காலத்துப் பட்டயங்கள், கல்வெட்டுக்கள், திருமுறை, இலக்கியம் முதலியன கொண்டு நன்குணரலாம். பல்லவர்கள் காலத்துக் கோயில்கள் செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகத் தகடுகள் இவற்றைக் கொண்டு

அமைத்தவையே யாகும். அவை நாளடைவில் அழிந்துவிடும் என்று அஞ்சிப் பல்லவர்கள் அழியா நிலையில் மலைகளைக் குடைந்தும் ஒற்றைக் கற்களை மாற்றியும் கற்பாறைகளை உடைத்து ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கியும் மூவகைக் கோயில்களை அமைக்கத் தொடங்கினர். அவர்கள் காலத்தில் கோயில் ஆட்சி இருந்தது; கோயில்களில் ஓவியம், சிற்பம், நடனம், நாடகம், இசை முதலிய நாகரிகக் கலைகள் வளர்ச்சிபெற்றன. தேவரடியார் இருந்தனர்.

சோழர் காலத்துச் சைவசமயம்:

முதல் திருப்பணி பல்லவரை ஒடுக்கிச் சோழப் பெருநாட்டை அமைத்து ஆளத் தொடங்கிய முதற் பேரரசன் ஆதித்த சோழன் என்பவன். அவன் பாடல்பெற்ற கோயில்கள் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்னும் நன்னேக்கம் கொண்டு அவற்றைக் கற்கோயில்களாக மாற்றத் தொடங்கினுன். அவனுக்குப் பின்வந்த அரசர்களும், செம்பியன்மாதேவியார் போன்ற அரசமாதேவியரும், அரசாங்க உயர் அலுவலாளரும் ஆதித்தன் தொடங்கி விட்ட திருப்பணியைக் காலக்கணக்கில் செய்து முடித்தனர்.

இரண்டாம் திருப்பணி சோழர்கள் வழிவழிச் சைவர் ஆதலின் கற்கோயில்களாக மாற்றிய பழைய கோயில்களில் பல்லவர் காலத்தில் இருந்த ஆட்சிமுறை முதலிய அனைத்தையும் விரிவாக்கினர்; கோயில்கட்குக் குறைவின்றி நிலங்களையும் ஆடைகளையும் அணிகளையும் வழங்கினர்; கோயில் தொடர்பான எல்லாவகைச்செலவுகளுக்கும் மானியங்களையும் மிகுதியாகக் கொடுத்து உதவினர்.

மூன்ரும் திருப்பணி: பாடல் பெற்ற கோயில்கள் கற்றளிகளாகவே மாறின; அவற்றின் நடைமுறைகட்குத் தேவையான நிலவருவாய் அளிக்கப்பட்டது. அடுத்துச் செய்யவேண்டுவது சமயப்பெரியார் செய்த தமிழ்த்தொண்டினைப் பாராட்டலேயன்ரே? அதற்காக அவர்கள் பெயர்களும், அவர்தம் நூல்களின் பெயர்களும் பல கிராமங்களுக்கு இடப்பட்டன. அவற்றுள் திருத்தொண்டத்தொகை நல்லூர் என்பதுஒன்று. சமய குரவராகிய நாயன்மார் உருவச் சிலைகள், கோயில்களில் எழுந்தருளச் செய்யப்பெற்றன. அவற்றுக்குப் பூசைகள், திருவிழாக்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. அத்தகைய விழாக்களுள் சிறுத்தொண்டநம்பி விழாவொன்று. கண்ணப்பர்கமுகந்தோப்பு என்ருற் போல நாயன்மார் பெயர்கள் தோப்புகட்கும் இடப்பட்டன எனின், அக்கால மக்களது சைவ சமயப் பற்றினை என்னென்பது! சோழர் கால மக்கள் நாயன்மார் பெயர்களைத் தம் மக்கட்கு இட்டுவழங்கினர். ஊதுகாளங்கள் முதலியவற்றின் மீது நயன்மார் பற்றிய சிறப்பு நிகழ்ச்சிகள் சில பொறிக்கப்பட்டு இருந்தன. அவற்றினுள் ஒன்று, ''பித்தனென்று பாடச்சொன்ஞன்'' என்று ஒரு ஊதுகாளத்தின்மீது பொறிக்கப்பட்டிருந்ததாகும்.

திருமுறைகள்: இராசராச சோழற்கு முன்னரே பல கோயில்களில் திருப்பதிகங்கள் ஓதப்பெற்றன. இராசராசன் நம்பிகளைக்கொண்டு திருமுறைகளை ஒழுங்குசெய்வித்த பின்னர்த் திருப்பதிகங்கள் கோயில்கள்தோறும் ஓதப்பெற்றுவந்தன என்பதை எண்ணிறந்த கோயிற் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. பல பெரிய கோயில்களில் திருமுறை மண்டபங்கள் இருந்தன. திருமுறைகளைப் பாதுகாத்து வந்தவர் ''தமிழ் விரகர்'' எனப்பட்டார். அவருக்கு நிலம் மானியமாக விடப்பட்டது. திருமுறைகள் செப்பேடுகளிலும் எழுதப்பெற்றன; இரண்டொரு கோயில் சுவர்களிலும் பொறிக்கப்பட்டன. திருமுறைகள் பிராமணர், தேவரடியார். குருடர் முதலிய அனைவராலும் திருக்கோயில்களில் ஓதப்பெற்றன. திருத்தவத்துறை எனப்பட்ட (இன்றைய) லால்குடிக் கோயிலில் பிராமணர் திருமுறை ஓதினர்; திருவொற்றியூர்த் திருத்தலத்தில் பதினறு தேவரடியார் திருப்பதிகம் விண்ணப்பம் செய்தருளினர்; திருவாமாத்தூர்க் கோயிலில் குருடர் இருந்து திருமுறை ஓதினர் என்று அவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக் கூறுகிறது. இவை அனைத்திற்கும் மேலாகத் திருமுறைகள் கோயில் தோறும் விண்ணப்பம் செய்யப் படுதலைக் கண்காணிக்கவும், அவற்றைப் பாதுகாக்

கவும் தேவார நாயகம் என்ற அரசாங்க உயர் அலுவலாளர் ஒருவர் இருந்தனர் என்பது இராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றினல் தெரிகிறது.

புதிய கற்றளிகள்: பல்லவரைப் பின் பற்றி ஆதித்த சோழன் சிறிய கற்றளிகளைத் தோற்றுவித்தான். ஆயின் காஞ்சி கயிலாச நாதர் கோயிலையும், மாமல்லபுரத்துக் கடற் கரைக் கோயிலையும் பின்பற்றி இராசராச சோழன் மிகப்பெரிய அளவில் அரும்பாடு பட்டுத் தஞ்சை இராசராசேச்சுரத்தைக் கட்டுவித்தான். அவனைப் பின்பற்றி அவன் செல்வ மைந்தனை இராசேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தில் கங்கை கொண்ட சோளேசுவரம் கட்டுவித்தான்; இரண்டாம் இராசராசன் இராசராசபுரத்து (தாராசுரத்து)க் கோயிலை மிக்க அற்புதமாக அமைத்தான்; மூன்ரும் குலோத்துங்கன் திருபுவனம் சிவன்கோயிலைத் தோற்றுவித் தான். இப்புதிய கற்கோயில்கள் சோழர் காலத்துக் கட்டிடக்கலை நுட்பங்களை உலகு அறியச் செய்வன; தமிழர் நாகரிகத்திற்கு மணிமகுடமாக இலங்குவன; அக்காலச் சைவம் நாட்டில் பெற்றிருந்த ஒப்புயர்வற்ற தன்மையை நன்குவிளக்குவன. இக்கோயில் களுக்குச் சோழ மன்னர்கள் அளித்த நிலங் களும் பிறவும் மிகப்பல. இவ்விவரங்களை இக்கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களே கூறுகின்றன.

நாயன்மார் திருவுருவங்கள்: சோழர் காலத்துப் பழைய - புதிய கோயில்களில் தோன்றிய சிற்பங்கள் மிகஉயர்ந்த வேலைப் பாடு கொண்டவை. அச்சிற்பங்களில் பல, நாயன்மார்களையும் அவர்தம் வரலாற்று நிகழ்ச்சிகளையும் உணர்த்துபவை. திருக் கடம்பூர் இளங்கோயில் கருவறைப் புறச் சுவர்களில் இருந்த மாடங்களில் நாயன்மார் திருவுருவங்கள் தனித்தனியே எழுந்தருள் விக்கப்பட்டன. அவற்றினடியில் அவ்வந் நாயன்மார் திருப்பெயர் பொறிக்கப்பட்டு இருந்தது. கடம்பூர் பெரிய கோயில் கரு வறைப்புறச்சுவர்களில் நாயன்மார் வரலாறு களில் சிறப்பாகக் குறிக்கத்தக்க நிகழ்ச்சிகள் பொறிக்கப்பட்டு உள்ளன். இத்தகைய நிகழ்ச்சிகளை எல்லாப் பழைய கோயில் களிலும் காணலாம். கங்கை கொண்ட சோழபுரத்தில் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்கதாகிய சண்டீசப்பதம் உணர்த் துகின்ற சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. பெரியபுராணத்திற்கு முன்னரே சில பெரிய கோயில்களில் அறுபத்துமூவர் உருவச் சிலைகள் வைக்கப்பெற்று வழிபாடு செய்யப் பெற்றுவந்தன. பெரிய புராணத்திற்குப் பிறகு எல்லாக்கோயில்களிலும் உருவச்சிலை கள் வைக்கப்பெற்றன. இராசராசபுரத்து கருவறைப் புறச்சுவர்களில் அறுபத்து மூவர் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சிற்பங்கள் தோன்றி இன்றளவும் காட்சி யளிக்கின்றன. கோயில்களில் நாயன்மார் செப்புப்படிமங்கள் எழுந்தருளுவிக்கப்பெற் றன. அவற்றினடியில் அவரவர் பெயர் அல்லது சிறப்பு அடைமொழியுடன் கூடிய பெயர் பொறிக்கப்பட்டது. ''தத்தா, நமரே காண்'' என்ற மிலாடு உடையார் படிமம் என்பது அவற்றில் ஒன்ருகும். இத்தகைய செப்புத் திருப்படிமங்கள் திருவிழாக்காலங் களில் இறைவன் திருமேனிக்கு முன்னர் உலாவில் தேர்களில் வைத்துக்கொண்டு செல்லப்பட்டன என்பது சோழர் காலத்துத் தில்லையுலா என்னும் நூலிலிருந்து தெள்ளி தின் அறியலாம்.

மாளிகை மண்டபங்கள் சைவப் புரா ணங்கள் திருக்கோயில்களில் பாடி விரிக்கப் பட்டன. அவற்றுக்குரிய மாளிகைகள்மண் டபங்கள் என்பன கோயில்களில் இருந்தன. திருநீடூர்க்கோயிலில் புராணநூல் விரிக்கும் புரிசை மாளிகை இருந்தது. சிவதருமோத் தரம் கோயில் மண்டபங்களில் படித்து விளக்கப்பட்டன. உடைய நம்பி திருப் புராணம் (திருத்தொண்டர் புராணம்) ஒற்றியூர்க் கோயிலில் மகிழடி சேவையின் போது படிக்கப்பட்டது. கன்னிவன புரா ணம், பூம்புலியூர் நாடகம் முதலிய நூல்கள் அக்காலத்துத் தோன்றி, மக்கட்குச் சைவப் பற்றை யூட்டின.

ஓவியங்கள்: நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகள் கோயில் சுவர்கள்மீது ஓவியங் களாகத் தீட்டப்பெற்றிருந்தன. சான்ருகத் தஞ்சைப் பெரிய கோயில் கருவறைப்புறச் சுவர் ஓவியங்களைக் காணலாம். அவை இராசராசன் காலத்தனவாகலாம். சுந்தரர் திருமணம், தடுத்தாட்கொள்ளல், சுந்தரர், சேரமான் கயிலைசெல்லல் என்னும் நிகழ்ச்சி

கள் மிகச் சிறந்த முறையில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. அவை சமய உணர்ச்சியை ஊட்டுவதுடன் சோழர்கால ஆடை, அணிகள், மயிர்முடிப்பு, இசைக் கருவிகள் முதலியவற்றை நமக்கு உணர்த்தலேயன்றிச் சோழர்கால ஓவியக் கலைச் சிறப்பையும் உலகறியச் செய்வனவாகும்.

முடிவுரை

தமிழர் கட்டிடக்கலையில் உலகிற் சிறந்தவர்; சிற்ப - ஓவியக் கலைகளில் பண்பட்டவர். உயர்ந்த பண்பாட்டினர் என்று இன்று மேனாட்டார் பாராட்டுதற்கு அடிப்படையாக இருப்பவை சோழப் பேரரசர் அமைத்த திருக்கோயில்களே ஆகும். இங்ஙனம் தம் சமயத்தை வளர்த்ததோடு அன்றித் தம் வழித் தோன்றலாகிய நமக்கும் இன்றளவும் பெருமை அளிக்கப் பேருதவி செய்த அப்பெருமக்கட்கு நமது உளமார்ந்த நன்றி என்றும் உரியதன்றோ? வாழ்க! சோழப்பெருமன்னர்கள் !!

ஸ்ரீ விருத்தபுரீஸ்வரசுவாமி திருக்கோயில்

அறந்தாங்கி வட்டம் **திருப்புனவாயில்** தஞ்சை மாவட்டம்

சமயகுரவர்களில் இருவரான சம்பந்தர், சுந்தரர் ஆகியவர்களால் பாடல் பெற்ற இத்தலம், பாண்டிநாட்டிலே வழிபடுவோர்க்கு நலனருளும் முறையாகத் தேவாரத் திருப்பதிகம் பெற்றுள்ள தலங்கள் பதினான்கினுள் இரண்டாவதாக விளங்குவது. பாடல்பெற்ற தலங்களில் உள்ள லிங்கங்களில் இங்குள்ள லிங்கமே பெரிதெனப் போற்றப்படுகிறது. இத்தலம் பாண்டியநாட்டின் உட்பிரிவாகிய மிழலை நாட்டின்கண் உள்ளது என தமிழ்ப் புராணங்கள் கூறுகின்றன.

நிர்வாக அதிகாரி :

திரு. S. மீனாட்சிசுந்தரம் B. Sc.,

அறங்காவலர்கள் :

திரு. K. ராமநாதன் சேர்வைக்காரர் (தலைவர்)
திரு. T. முத்துவேல் அம்பலக்காரர், திரு. S. ராமதாசு அய்யர்.

ஸ்ரீ பாரிஜாதவனேஸ்வரசுவாமி திருக்கோயில்

மன்னார்குடி வட்டம் **திருக்களர்** தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மன்னார்குடியிலிருந்து 13 கல் தொலைவில் உள்ளது. தொன்மையான இவ்வாலயத்தில் துருவாசமுனிவர், மாலாதாரகன் ஆகியோர் வந்து வழிபட்டதாக வரலாறு. நாவுக்கரசராலும், ஞானசம்பந்தராலும் பாடல் பெற்றது இத்தலம். இங்குச் சித்திரை மாதத்தில் 10 நாள் பிர்மோற்சவம் நடைபெறுகிறது. மார்கழி மாதத்தில் திருவாதிரை திருவிழாவும், வைகாசி மாதத்தில் விசாகத்திருவிழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

அறங்காவலர்கள் :

திரு. ம. கோவிந்தசாமித்தேவர் (தலைவர்)
திரு. தி. கல்யாணசுந்தரம் பிள்ளை, திரு. பி. இராமசாமித்தேவர்.

நிர்வாக அதிகாரி :

திரு. S. இராமநாதன்.

'அயல்நாட்டு வாணிபம்'

வித்துவான் அ. மா. பரிமணம் எம். ஏ., எம். லிட்.,
தமிழ்ப்பேராசிரியர்,
பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, பழனி.

கிறித்து பிறப்பதற்குப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே உயர்ந்த நாகரிகமும் பண்பாடும் கொண்டு விளங்கிய தமிழ்ச் சமுதாயத்தின்மாட்சியை, அவர்களிடையே நிலவிய வணிக நிலையை ஆய்வதன் வாயிலாக நன்குணரலாம். தங்கள் தேவையைப் பண்டமாற்று முறையில் (Barter Ssstem) நிறைவு செய்துகொண்ட அவர்கள், பின்னர் பொருட்களை விலைக்கு விற்றும் வாங்கியும் பயன்படுத்திய நிலையைக் காண்கின்றோம். "வேட்டுவன் மான்தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள் தயிர் கொடு வந்த தசும்பும் நிறைய...வெண்ணெல் முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்" என்றும், "பாண்மகள் இன் கெடிறு சொரிந்த அகன்பெரு வட்டி நிறைய, மனையோள் அரிகால் பெரும் பயறு நிறைக்கும்" என்றும், "மடமகள் வரால் சொரிந்த வட்டியுள் மனையோள், யாண்டு கழி வெண்ணெல் நிறைக்கும்" என்றும் வரும் இலக்கியப் பகுதிகள் பண்டமாற்று முறையினை விளக்கும். தமிழகத்திலும் தமிழகத்தை அடுத்துள்ள நாடுகளிலும் கடல்கடந்த பிற நாடுகளிலும் தமிழ் மக்கள் கொண்டிருந்த வணிகத்தொடர்பு விரிவானதும், மிகவும் பாராட்டுதற்குரிய தொன்மையானது மாகும்.

பண்டைத்தமிழர், கடல்கடந்து தம் நாட்டிற்கு வந்த மேற்கு நாட்டு மக்களை யவனர் என்ற சொல்லால் குறிப்பிட்டனர். பன்னூறாண்டுகட்குமுன்பு வணிகம் காரணமாகத் தொடர்புகொண்டு தமிழகம் போந்த மேற்குநாட்டு மக்களை 'யவனர்' எனத்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கிரேக்க நாட்டவர் தம்மை 'அயோனியர்' (Iaoner) என்று அழைத்தமையால், அதன் திரிபாக யவனர் என்று அந்நாட்டவரைத் தமிழ் மக்கள் அழைத்தனர். பின்னர் உரோமானியரோடும் பாபிலோனியரோடும் வணிகத் தொடர்பு பெருகிய நிலையில் அம்மேலைநாட்டார்களையும் யவனர் என்ற சொல்லாலேயே குறிப்பிட்டனர். இந்நிலையில் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் யவனர் என்னும் சொல் பொதுப்பட இம்மேல்நாட்டு மக்களைக் குறிப்பதாய் அவர்களோடு தமிழ் மக்கள் கொண்டிருந்த வணிகத் தொடர்பினை உணர்த்துவதாய் உள்ளது.

யவனர்கள் தங்கள் கப்பல்களில் பொன் முதலியவற்றோடு தமிழகம் போந்து மிளகு முதலியவற்றை ஏற்றிச் சென்றதனை,

> "பேரி யாற்று வெண்ணுரை கலங்க
> யவனர் தந்த வினைமாண் நன்கலம்
> பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"

என அகநானூறு காட்டுகின்றது. யவனர்கள் மரக்கலங்களில் கொணரும் உயர்வகை மதுக்கள் தமிழக அரண்மனைகளில் வழங்கப் பெற்றதை,

> "யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
> பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
> ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து"

எனவரும் புறநானூற்றாலும். யவனர்செய்த பாவை விளக்குகளும், ஓதிம விளக்குகளும் தமிழகத்தில் இடம் பெற்றிருந்த தன்மையினை,

> "யவனர் இயற்றிய வினைமாண் பாவை
> கையேந்து ஐயகல் நிறைய நெய்சொரிந்து"

எனவும்,

"யவனர் ஓதிம விளக்கு"

எனவும் வரும் பத்துப் பாட்டுத் தொடர்களாலும் அறியலாம்.

தமிழகத்துறைமுகங்களில் பிறநாட்டுக் கப்பல்கள் தம்நாட்டுப் பொருள்களைக் கொணர்ந்து இறக்கியபின் இங்கிருந்து பொருள்களை ஏற்றிச்செல்லும் காட்சி பழந் தமிழ்ப் பனுவல்களில் பலவாருகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

யவனர்களோடு நடைபெற்ற கடல் வணிகத்தைப் பற்றி பிளினி, தாலமி முதலியோர் எழுதிய வரலாற்றுக் குறிப்புகளும், பெரிபுளூஸ் முதலான பயணநூற் குறிப்புகளும் உணர்த்துகின்றன. தமிழகத்திலிருந்து தந்தம், மயில்தோகை, பட்டு, அகில். சந்தனம் முதலிய மணப்பொருள்கள், வைரம், மாணிக்கம் முதலிய இரத்தினங்கள், முத்துக்கள், மிளகு, மெல்லியஆடைகள் மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. தென்னகத்தின் முத்துக்களுக்கும் மிளகுக்கும் மேற்கு நாடுகளில் பெருமதிப்பு இருந்தது.

தமிழ் நாட்டிலிருந்து மேற்குநாடுகளுக்குச் சென்ற பொருள்கள், தம்மோடு தங்கள் தமிழ்ப் பெயர்களையும் கொண்டு சென்று அப்பிறநாட்டு மொழிகளில் நிலை பெறுமாறு செய்துள்ளன. குரங்கையும், மயில்களையும் குறிக்கும் எபிரேய மொழிச் சொற்கள் கபிம், துகிம் என்பனவாகும். இவை தமிழகத்திலிருந்து சென்ற பொருள்களாகும். இவற்றின் தமிழ்ப் பெயர்கள் கவி, தோகை என்பனவாகும். ஹிபம் என்னும் எபிரேயச் சொல், இங்கிருந்து சென்ற தந்தத்தினைக் குறிக்கும் இபம் என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபேயாகும். இந்நாட்டிலிருந்து கிரேக்க நாடுகளுக்குச் சென்ற பொருள்களின் தமிழ்ப் பெயர்களாகிய அரிசி, இஞ்சி, கறுவா, திப்பிலி என்பன முறையே ஓரிசா, இஞ்சிவேர், கர்பிலன், பிப்லி எனத் திரிந்து வழங்குகின்றன.

கிழக்குக் கடலைக் கடந்து சென்று தமிழ் மக்கள் கம்போடியா போன்ற கீழ்த்திசை நாடுகளிலும் வணிகத்தொடர்பு ஏற்படுத்தி இருந்ததாகவும், அங்குத் தமிழ் ஓர் அரசினைத் தோற்றுவித்ததாகவும் அறிகிறோம். கிறித்து பிறப்பதற்குப் பல்லாண்டுகட்கு முன்னரோயே சுமத்திரா, சாவா முதலிய கீழ்த்திசை நாடுகளுடன் தமிழ்மக்கள் கொண்டிருந்த வணிகத் தொடர்பினை மணிமேகலையாலும், பாலித்தீவில் இன்றும் காணக் கிடக்கும் பழக்க வழக்கங்கள், நாகரிகச் சின்னங்கள், வழிபாட்டு முறை ஆகியவற்ருலும் அறியலாம்.

நாகரிகமிக்க பண்டை உலகப் பெரு நாடுகளோடு வணிக உறவுகொள்வதற்கான பொருள்வளமும், திறனும், பண்பாடும் கொண்டு பழந் தமிழகம் விளங்கியது. இடைக்காலக் கல்வெட்டுக்கள் கூறும் அஞ்சுவண்ணம், மணிக்கிராமம் என்பன போன்ற குறிப்புக்களால் அக்காலத்திருந்து சிறந்து விளங்கிய வணிகக் குழுக்களைப்பற்றி அறியமுடிகிறது. "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப், பிறவும் தமபோற் செயின்" என்னும் வள்ளுவர் பேரறம் தோன்றுவதற்கான வணிகச் சூழ்நிலை சங்க காலத்தில் நிலவியது. இதனை,

"நடுவு நின்ற நன்னெஞ் சினேர்
வடு வஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்."

எனப் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. பழந்தமிழர் புரிந்த அயல்நாட்டு வணிகம் அவர்களின் செல்வ வளத்தையும், அலை கடல் மீது கொண்டிருந்த ஆதிக்கத்தையும் நாகரிக மேன்மையையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது.

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்

திருவிடைமருதூர்

கும்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்



இத்திருக்கோயில் மாயூரம் கும்பகோணம் பேருந்துசெல்லும் பாதையிலிருக்கிறது. சமயகுரவர் நால்வர்களாலும் பாடல்பெற்றது. உரோமசமுனிவர், பட்டினத்தார், பத்திரகிரியார், வரகுணபாண்டியன் ஆகியோர் வழிபட்ட சிறப்புடைய தலம். இறைவர் பெயர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி, இறைவியின் பெயர் ஸ்ரீ பிரகத்சுந்தரகுசாம்பிகை. சக்தி பீடத்தில் இதுவும் ஒன்று. மாயூரம் - திருச்சி புகைவண்டிப் பாதையில் தனி நிலைய மாகவே திகழ்ந்து வருகிறது. சித்த சுவாதீனம் இழந்தவர்கள் முறையாக வழிபட்டு நலம்பெறுதலை இன்றும் காணலாம். இத்தலத்தின் தனிச் சிறப்பு இது.

தைமாதம் பூசப் பெருவிழாவும், வைகாசிமாதம் வசந்தோற்சவமும் மிகச் சிறப்புடன் நடைபெறும். காவேரிக்கரையிலிருந்து இருவிழாக்களிலும் வெள்ளிரதம் புறப்பட்டு வீதிவலம் வருவது சிறந்த காட்சியாகும். திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல - ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சியின்கீழ் இக்கோயில் நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீ வீழிநாதசுவாமி திருக்கோயில்

திருவீழிமிழலை

நன்னிலம் வட்டம் தஞ்சை மாவட்டம்



இத்திருத்தலம் ஆடுதுறை பூந்தோட்டம் பெருவழியில் உள்ளது. பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து 6 கல் தொலைவிலுள்ளது. சமயக்குரவர்களில் இருவரான திருஞானசம்பந்தராலும், நாவுக்கரசராலும் பாடல்பெற்றது.

இங்கு வருடம் தோறும் சைத்ரோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. ஊரெங்கும் வீழிச்செடிகள் நிறைந்திருந்ததால் திருவீழிமிழலை எனப் பெயர் பெற்றது. திருமால் சிவனைப் பூசித்து ஒரு கண்ணை மலராக அர்ச்சித்து ஸ்ரீ சக்கரம் பெற்ற தலம் இது.

இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் அருள் ஆட்சியின் கீழ் உள்ளது.

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீ நீலகண்டேசுவரர் திருக்கோயில்

இலுப்பப்பட்டு

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - பந்தநல்லூர் சாலையில் மணல் மேட்டிலிருந்து 1 கல் தொலைவிலும், வைத்தீஸ்வரன்கோயிலில் இருந்து 6 கல் தொலைவிலும் உள்ளது. சுந்தரரால் பாடல் பெற்றது.

ஆண்டுதோறும் இங்கு சித்திராப்பௌர்ணமி திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. புராணங்களில் இத்தலம் திருமண்ணிப்படிக்கரை எனக் கூறப்பட்டுள்ளது. இத்தலத்தில் பஞ்ச பாண்டவர்கள் சிவபெருமானைப் பூசித்ததாக வரலாறு. நளன் விஷக்கடியால் மாறிய நிறம், மாறித் தன்னுருப்பெற்ற இடம். சிவபெருமான் கண்டத்தில், விஷமருந்திய கறையைக் காட்டியருளிய தலமாகும்.

இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ - ல - ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாட்சியின்கீழ் உள்ளது.

ஸ்ரீ ஆமருவிப்பெருமாள் திருக்கோயில்

தேரழுந்தூர்

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்



இத்திருக்கோயில் மாயூரம்-கும்பகோணம் புகைவண்டிப் பாதையில் தேரழுந்தூர் புகைவண்டி நிலையத்திற்கு தெற்கே 2 கல் தொலைவில் உள்ளது. மாயூரம் கும்பகோணம் ஆகிய இடங்களிலிருந்து இங்கு செல்ல பேருந்து வசதிகள் உண்டு.

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் பிறப்பிடமான இந்தத்தலம் திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது. இறைவன் பெயர் ஆமருவிப்பெருமாள். இறைவியின் பெயர் செங்கமலத்தாயார். கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரத்தில் இத்திருக் கோயிலும் ஒன்று. வைகாசிமாதம் நடைபெறும் பிரமோற்சவமும் புரட்டாசிமாதம் நடைபெறும் தேசிகர் உற்சவமும் சிறப்பு வாய்ந்தது.

நிர்வாக அதிகாரி

திரு. T. ஞானப்பிரகாசம்

அறங்காவலர்கள் :

திரு. N. ராகவன் (தலைவர்)

திரு. M. சிவகடாட்சம்

தருமை ஆதீனம்

ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

வைத்தீஸ்வரன்கோயில் சீகாழி வட்டம்



இது அங்காரக க்ஷேத்திரம். முருகப்பெருமான் செல்வமுத்துக்குமரனாக எழுந்தருளி கலியுக வரதனாய் விளங்கும் சிறப்புடையது. சுவாமியின் பெயர் ஸ்ரீ வைத்தியநாதர்; அம்பிகையின் பெயர் தையல்நாயகி; முருகன் பெயர் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரர்; தலவிருட்சம் வேம்பு; தீர்த்தம் சித்தாமிர்த தீர்த்தம்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் தேவரத் திருப்பதிகங்களையுடையது. குமரகுருபரர், சிவஞானமுனிவர், படிக்காசுப்புலவர் முதலியோரால் பாடிய இலக்கியங்களையும் பெற்றுள்ளது. மாயூரத்திலிருந்து சிதம்பரம் செல்லும் ரயில் மார்க்கத்தில் ஒரு நிலையமாக இது விளங்குகிறது. பஸ் வசதிகள் உள்ளன.

தருமை ஆதீனம்

ஸ்ரீ வீரட்டேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

குறுக்கை

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்



அஷ்ட வீரட்டத்தலங்களில் காமனை எரித்த திருத்தலம். சம்ஹார மூர்த்தி சந்நிதி சிறப்புடையது. இறைவன் பெயர் ஸ்ரீ வீரட்டேஸ்வரர்; அம்பிகை பெயர் ஸ்ரீ ஞானம்பிகை; விநாயகர் குறுங்கை விநாயகர். இதனால் ஊரும் இப்பெயர் பெற்றது. இத்தலத்தின் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள காமதகன இடம் இன்றும் திருநீற்றுப்பொடி போலவே விளங்குகிறது.

திருநாவுக்கரசர் பாடிய தேவாரத் திருப்பதிகம் உள்ளது. இத் தலம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களால் திருப்பணி செய்விக்கப் பெற்று 29–4–59-ல் மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீ ஆத்மநாதஸ்வாமி தேவஸ்தானம்

திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார்கோயில்



திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்) மாயூரம் - காரைக்குடி புகை வண்டிப்பாதையில், அறந்தாங்கி நிலையத்துக்கு 9 கல் தொலைவிலுள்ளது. பேருந்தூர்தி வசதிகள் உள்ளன. திருவாசகம் இதனைச் சிவபுரம் என்றும் குறிக்கும். சிவபெருமான் அருவமாகக் காட்சியளிக்கும் தலம் இது. இங்கே கொடிமரம் நந்தி பலிபீடம் இல்லை. பீடவடிவிலே சுவாமி "ஆன்மநாதர்", அம்பிகை "சிவயோக நாயகி"; எல்லாம் 'ஞானமயம்' மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அருள்செய்த இடம். உபதேசக்காட்சி சிறப்புடையது. தேர், திருவிழாக்கள் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்கேயாம். மண்டபங்கள் பல. சிற்பங்களெல்லாம் மிக அழகுடையன. தலவிருட்சம் குருந்தமரம். தீர்த்தம் தேவதீர்த்தம், அக்கினிதீர்த்தம் முதலிய பல. இக்கோயில் தனிச் சிறப்புடையது. இக்கோயிலைத் திருவாவடுதுறை ஆதீனம் 22-ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் பெருஞ் செலவிட்டுத் திருப்பணியைச் செவ்வே செய்விக்கின்றார்கள்.

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீ மயூரநாதசுவாமி திருக்கோயில்

மாயூரம் தஞ்சை மாவட்டம்



இத்திருக்கோயில் மாயூரம் புகைவண்டி நிலையத்திலிருந்து 2 கல் தொலைவிலுள்ளது. திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடல் பெற்றது. இறைவன் பெயர் மயூரநாதர்; இறைவியின் பெயர் அபயாம்பிகை. பார்வதி மயிலுருக்கொண்டு சிவனைப் பூசித்த இடம் இத்தலம். ஆண்டவனும் மயிலுருக்கொண்டு அருளிய இடம். இங்கு துலாஸ்நானம் செய்தல் மிகவும் விசேடமானது.

ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் வசந்தோற்சவமும் ஐப்பசி 30 நாட்களிலும் துலா உத்சவமும் நடைபெறுகிறது. இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாட்சியின்கீழ் உள்ளது.

தருமை ஆதீனம்

ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

திருக்கடவூர்

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

வில்வவனம், பிஞ்சிலவனம் முதலிய பெயர்களையுடையது. அமுதங் கடைந்த தேவர்கள் அமுதகலசத்தை வைத்துவிட்டு நீராடச் சென்றபோது அக்குடமே சிவலிங்கத் திருவுருவமாக ஆயிற்று என்பது தலவரலாறு. அஷ்ட வீரட்டத் தலங்களில் ஒன்று. மார்க்கண்டேயருக்காகப் பெருமான் காலனை உதைந்த தலம். சம்ஹாரமூர்த்தி சிறப்புடையவர். இவ்வரலாற்று நிகழ்ச்சி சித்திரை மாதம் பெருவிழாவில் ஆரும் திருநாளன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும். பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்விழா வைத் தரிசித்து இன்புறுவர். கார்த்திகைச் சோமவார தினங்களில் ஆயிரத் தெட்டுச் சங்காபிஷேகம் நடைபெறும். இத்தலத்திற்குரிய சிறப்பு விழாக் களில் இதுவும் ஒன்று. சுவாமி பெயர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர்; அம்பிகை பெயர் ஸ்ரீ அபிராமி; விசேஷமூர்த்தி ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடிய தேவாரத் திருப் பதிகங்களையுடைய தலம் இது. அபிராமி அம்மையை அபிராமிபட்டர் போற்றிப் பாடியருளிய அபிராமி அந்தாதி சிறப்பாகப் பாராயணம் செய்யப் பெறுகிறது.

மாயூரத்திலிருந்து தரங்கம்பாடி செல்லும் புகைவண்டி மார்க்கத்தில் ஒரு நிலையமாக விளங்கி வருகிறது. பேருந்து வசதியும் உள்ளன.

ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி, அம்பாள் ஆகிய மூர்த்திகளுக்குத் தங்கக் கவசங்கள் உள்ளன. ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி எழுந்தருளியுள்ள விமான மும், நிலைவாயிலும் கதவுகளும் வெள்ளியினால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இத்திருத்தலம் ஸ்ரீ - ல - ஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களால் பெரிய அளவில் திட்டமிட்டுத் திருப்பணிகள் பல செய்து சிறந்தமுறையில் 1957-ம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றது.

தருமை ஆதீனம்

ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானம், ஆச்சாள்புரம்.

சீகாழி வட்டம் தஞ்சை மாவட்டம்



திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் திருமணம் நடைபெற்ற தலம். நல்லூர்ப்பெருமணம் என்று திருமுறைகளில் போற்றப்படுகிறது. திருஞான சம்பந்தர் திருமணத்திற்கு வந்திருந்த எல்லோருக்கும் இறைவன் சிவ லோகம் வழங்கி அருளிய வரலாறு இத்தலத்திற்கு உரிய தனிச் சிறப்பு ஆகும். திருஞானசம்பந்தர் பாடியருளிய திருப்பதிகம் பெற்றது.

கொள்ளிடத்திலிருந்து மாகேந்திரப்பள்ளி போகும் பஸ் மார்க் கத்தில் உள்ளது. சுவாமி பெயர் சிவலோகத்தியாகேசர். அம்பிகை பெயர் திருவெண்ணீற்றுமையம்மை. சிறப்பு மூர்த்தி ஸ்ரீ கல்யாணசம்பந்தர்.

இத்திருத்தலம் ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களால் திருப்பணிகள் பல செய்விக்கப்பெற்று 29—4—64-ல் மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது.

தருமை ஆதீனம்

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

சீகாழி

தஞ்சை மாவட்டம்



பிரமபுரம், வேணுபுரம் முதலிய பன்னிரு திருப்பெயர்களை உடையது இத் திருத்தலம். திருஞானசம்பந்தப்பெருமான் திருவவதாரம் செய்தருளி, அம்பிகை அளித்த சிவஞானப்பாலை உண்டு, தெய்வத்தமிழ் பாடிய சிறப்புடையது. இந்த ஐதிகம் சித்திரை விழா இரண்டாம் நாளன்று நடைபெறும். திருமுலைப்பால் தரிசனம் செய்தோர் மறுமுலைப்பால் உண்ணார் என்ற நம்பிக்கையுண்டு. சுவாமி பெயர் பிரமபுரீஸ்வரர்; அம்பிகை பெயர் திருநிலைநாயகி; தீர்த்தம் பிரமதீர்த்தம். திருத்தோணிமலை இறைவன் பெயர் பெரியநாயகர், அம்பிகை பெயர் பெரியநாயகி.

சமயக்குரவர் நால்வராலும் பாடல்பெற்றது. மாயூரம் சிதம்பரம் செல்லும் புகைவண்டி பாதையில் ஒரு நிலையமாக இத்தலம் விளங்குகிறது. பஸ் வசதியுண்டு.

தருமை ஆதீனம்

ஸ்ரீ வதான்யேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

வள்ளலார்கோவில்

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்



திருநந்திதேவருக்கு இறைவன் தென்முகக்கடவுளாக எழுந்தருளியிருந்து ஞானோபதேசம் செய்தருளிய தலம். மாயூரத்திற்கு அருகில் காவிரித் துலாக் கட்டத்தின் வடபால் அமைந்து விளங்குவது இத்தலம்.

சுவாமியின் பெயர் : ஸ்ரீ வதான்யேஸ்வரர்; அம்பிகையின் பெயர் : ஞானம்பிகை; சிறப்புமூர்த்தி : ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி.

ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்கு ஒரு கோடி அர்ச்சனை திட்டமிட்டு நடத்திப் பூர்த்தியாகியது. குருவாரந்தோறும் தங்கக்கவசம் சார்த்தி ஸ்ரீ மேதா தக்ஷிணா மூர்த்திக்கு விசேஷ வழிபாடு நடைபெற்று வருகிறது. சுவாமி, அம்பாள், சுப்பிரமணியர், துர்க்கை, சனீஸ்வரன் ஆகிய மூர்த்திகளுக்கு வெள்ளிக் கவசங்கள் உள்ளன.

தருமை ஆதீனம்

ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி திருக்கோயில்

திருப்பனந்தாள்

குடந்தை வட்டம் தஞ்சை மாவட்டம்



அம்பிகை சிவபூசை செய்து ஞானோபதேசம் பெற்ற தலம். தாடகை என்ற இயக்கப்பெண் சிவபூசையின் போது அணிவிக்கவந்த மாலையை இறைவன் திருமுடி சாய்த்து ஏற்றுக் கொண்டான். அக்காலத்திலிருந்து சிவலிங்கம் சாய்ந்த நிலையில் இருந்தது. சோழ மன்னன் ஒருவன் அதனை நிமிர்த்தமுயன்று முடியாமல் போக அதனை அறிந்த குங்குலியக்கலயநாயனார் தன் அன்பினால் நிமிர்த்தி இங்கு வழிபட்டார். நாக கன்னிகை இத்தலத்து இறைவனை வழிபட்டு அருள்நலம் பெற்றாள். இக்கோயிலில் அமைந்திருக்கும் நாககன்னிகை தீர்த்தம் பல்வகைப் பிணிகளையும் தீர்க்கும் இயல்புடையது. பலருக்கும் குலதெய்வமாகக் கொள்ளப் பெறுவது.

சுவாமி: ஸ்ரீ அருணஜடேஸ்வரர்; அம்பிகை: பெரியநாயகி; விருட்சம்: பனை. ஞானசம்பந்தரால் பாடிய தேவாரத் திருப்பதிகங்களையுடையது. சுவாமி அம்பாளுக்கு வெள்ளிக் கவசங்கள் உள்ளன. கும்பகோணம் அணைக்கரை பஸ் மார்க்கத்தில் இத்திருத்தலம் உள்ளது. ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களால் இத்திருத்தலம் மிகச் சிறந்தமுறையில் திருப்பணிகள் பல செய்விக்கப்பெற்று மகாகும்பாபிஷேகம் 5-7-68-ல் நிகழ்த்தப்பெற்றது.

தருமை ஆதீனம்

குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி

தேவஸ்தானம்

மாயூரம் — தஞ்சை மாவட்டம்

ஸ்ரீ மாயூரநாதர் ஆலயத்திலுள்ள முருகப் பெருமான் திருக்கோயில் தருமை ஆதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்டது. இங்குள்ள முருகப் பெருமான் தனிச்சிறப்புடன் விளங்குகிறார். சூரசம் காரத்திற்கு முருகன் எழுந்தருளியபோது மாயூரம் வந்து ஸ்ரீ மாயூரநாதரை வழிபட்டுச் சென்றதாகக் கந்தபுராண வரலாறு கூறும். ஐப்பசி மாதம் கந்தசஷ்டிவிழா சிறப்புடைய திருவிழாவாக இத்தலத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. ஸ்ரீ சுப்பிரமணியர் ஸ்ரீ வள்ளி தெய்வானைக்குத் தங்கக்கவசங்கள் செய்விக்கப்பெற்றுள்ளன.

தருமை ஆதீனம்

ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

திருவையாறு

திருவையாறு வட்டம் தஞ்சை மாவட்டம்

தென்கயிலாயம் என்று வழங்கும் இத்தலம் அப்பர் அடிகளுக்கு இறைவன் கயிலைக்காட்சி வழங்கி அருளிய திருத்தலமாகும். திருநந்திதேவர் அவதரித்த சிறப்புடையது. சுசரிதன் என்னும் அந்தணச் சிறுவனை இறைவன் யமவாதனையினின்றும் தடுத்தாண்ட பெருமையுடையது. இங்கு நடைபெறும் சப்தஸ்தானத் திருவிழா பெரும் புகழ்கொண்ட சிறப்பு விழாவாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் காவிரி வழிவிட்ட தலம். ஆட்கொண்டார் சந்நிதி சிறப்புடையது.

தருமை ஆதீனம்

ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம்

திருக்குவளை

நாகை வட்டம் தஞ்சை மாவட்டம்



சுந்தரமூர்த்தி சுவாமிகள் குண்டையூர் கிழார் தந்த நெல் மலையைத் திருவாரூருக்கு எடுத்துச்செல்ல இறைவனிடம் ஆள்வேண்டிப் பாடிய திருத்தலம். சப்தவிடங்கத் தலங்களில் இது ஒன்று. தியாகேசரின் திருப்பெயர் அவனிவிடங்கத் தியாகர். நவக்கிரகத் தோஷங்கள் இத்தலத்து இறைவனை வழிபடுவோருக்கு இல்லை என்பது வரலாறு.

திருவாரூரிலிருந்து தலைஞாயிறு - எட்டுக்குடி செல்லும் பஸ் மார்க்கத்தில் இத்திருத்தலம் உள்ளது.

தருமை ஆதீனம்

ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

திருபுவனம் தஞ்சை மாவட்டம்

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள இத்திருத்தலம் திரிபுவன சோழனுகிய மூன்ருங் குலோத்துங்க சோழனுல் கட்டப்பெற்றது. திரிபுவனேச்சுரம் என்பது இக் கோயிலின் பெயர். இத்தலத்தின் விசேஷ மூர்த்தி ஸ்ரீ சரபர். இரணியனைக் கொன்ற நரசிம்மத்தின் இரத்தவெறியை அழிக்கப்பெருமான் சரபப்பறவை உருவம் கொண்டார் என்பது வரலாறு. சுவாமியின் பெயர்: ஸ்ரீ கம்பகரேஸ்வரர்; அம்பிகையின் பெயர்: அறம்வளர்த்த நாயகி; விசேஷ மூர்த்தி: சரபர்.

மாயூரத்திலிருந்து கும்பகோணம் செல்லும் பஸ் பாதையில் இத்தலம் உள்ளது. திருவிடைமருதூருக்கு மேற்கில் 1 கல் தொலைவிலும் கும்பகோணத்திலிருந்து கிழக்கில் 4 கல் தொலைவிலும் அமைந்தது.

இத்தலத் திருக்கோயிலில் மிகச்சிறப்பான முறையில் திருப்பணிகள் நிறைவேறி ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களால் 6–9–1963ல் மகாகும்பாபிஷேகம் நடந்தது.

ஸ்ரீமேகநாதசுவாமி திருக்கோயில்

திருமீயச்சூர்

நன்னிலம் வட்டம் **தஞ்சை மாவட்டம்**

இத்திருக்கோயில் மாயவரம் – திருவாரூர் புகைவண்டிப் பாதையில் உள்ள பேரளம் நிலையத்திலிருந்து முக்கால் கல் தொலைவில் உள்ளது. பேரளம் பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. திரு ஞானசம்பந்தரால் பாடல் பெற்றது.

தைமாதம் இங்கு நடைபெறும் ரதசப்தமி திருவிழா சிறப்புடையது.

அறங்காவலர்கள் : (பொருளாளர்) நிர்வாக அதிகாரி:

ஸ்ரீலஸ்ரீ அஜபாநடேஸ்வர பண்டாரசந்நிதி திரு. பி. இராமச்சந்திரன் B. Sc.

வேளாக்குரிச்சி ஆதீனகர்த்தர்

(பரம்பரை நிர்வாக அறங்காவலர்)

திரு. ஆர். இராதாகிருஷ்ண நாயுடு, திரு. எம். பாலச்சந்திரம் பிள்ளை.

ஸ்ரீ வீரமாகாளியம்மன் திருக்கோயில்

ஆத்தாளூர்

பேராவூரணி அஞ்சல் **பட்டுக்கோட்டை வட்டம்**

இத்திருக்கோயில் பேராவூரணியிலிருந்து பட்டுக்கோட்டைக்குச் செல்லும் பெருந்துவழியில் பேராவூரணி அரசினர் ஆண்கள் இடைநிலைப்பள்ளிக்கு கிழக்கில் 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதத்தில் வருடாந்திரப் பெருந்திருவிழா மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்படு கின்றது. ஒன்பதாம் நாள் திருவிழாவின்போது களத்தூர், தென்னங்குடி, முடப்புள்ளிக்காடு, கழனிவாசல் ஆகிய நான்கு கிராமத்தார்களினுலும் "மது எடுத்தல்" விழா சிறப்பான ஒரு நிகழ்ச்சியாகும். மிக தொன்மையான ஆலயம்.

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி :

திரு. மு. கிருட்டினமூர்த்தி M. L. A. திரு. கி. வயிரவன் B. A.

திரு. மு. குஞ்சிதம். திரு. சு. சொக்கலிங்கம்.

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

பெரம்பூர்

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - திருவாரூர் பெருவழியில் உள்ள மங்கநல்லூரிலிருந்து கிழக்கே மூன்றரை கல் தொலைவில் உள்ளது. இங்கு விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்த சஷ்டி, திருக்கார்த்திகை ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. மயிலுக்கு உபதேசம் செய்த இடம் என இந்தத் தலத்தைக் கூறுவர்.

நிர்வாக அதிகாரி :

திரு. கே. எம். சுப்பிரமணியம்

அறங்காவலர்கள்:

திரு. என். ராமநாதன் (தலைவர்)

திரு. ஜி. கிருஷ்ணன் பி. ஏ., பி. எல்.,

திரு. து. கைலாசம்

ஸ்ரீ சௌந்திரராசப்பெருமாள் திருக்கோயில்

நாகப்பட்டினம்

நாகை நகரின் நடுநாயகமாகத் திகழும் இத்திருக்கோயில் சோழர்காலத்தில் கட்டப்பட்டது. பாடல்பெற்ற தலம். பாடியவர் திருமங்கையாழ்வார். கிடந்த, நின்ற, இருந்த ஆகிய மூன்று கோலங்களில் பெருமாள் காட்சி தருகிறார். தாயார், ஆண்டாள், ஸ்ரீனிவாசப்பெருமாள், இராமர் ஆகியோருக்குத் தனித்தனி ஆலயங்கள் உள்ளன. சென்ற மே மாதத்தில் லட்சரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றது.

இங்கு ஆனியில் நடைபெறும் ஸ்ரீ தாயார் பிரம்மோற்சவமும், ஆடியில் நடைபெறும் ஸ்ரீ ஆண்டாள் ஆடிப்பூர விழாவும், புரட்டாசியில் நடைபெறும் நவராத்திரி விழாவும், மார்கழியில் நடைபெறும் வைகுண்ட ஏகாதசி விழாவும், பங்குனியில் நிகழும் ஸ்ரீ பெருமாள் பிரம்மோற்சவமும் சிறப்புடையன.

அறங்காவலர்கள்:

திரு. ஆர். ஆர். வரதராஜுலுநாயுடு

திரு. வி. சுப்பிரமணிய அய்யர்

திரு. ஐ. குமரசாமி

நிர்வாக அதிகாரி:

திரு. ஏ. ராஜகோபாலன் பி. ஏ.,

ஸ்ரீ பக்தவத்ஸலபெருமாள் திருக்கோயில்

திருக்கண்ணமங்கை

நன்னிலம் வட்டம் **தஞ்சை மாவட்டம்**

ஆழ்வார்களால் பாடல்பெற்ற 108 தலங்களில் இத்திருத்தலமும் ஒன்றாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று சிறப்புகளும் ஒருங்கே அமையப்பெற்றது இத்தலம். திருவாரூர் - கும்பகோணம்சாலையில் திருவாரூரிலிருந்து மேற்கே 5 கல் தொலைவில் உள்ளது. இங்கு பட்சிராஜன் மிகுந்த வரப்பிரசாதியாக விளங்குகிறார். இத்திருக்கோயிலைப் புகழ்ந்து திருமங்கையாழ்வார், பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் ஆகியோர் பாடியுள்ளனர்.

மார்கழி மாதத்தில் 20 நாட்களுக்கு திரு அத்யானத் திருவிழா இங்கு நடைபெறுகின்றது. இங்கு கோயில்கொண்டு கிழக்குநோக்கி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பிரானின் மூலத்தானத்திற்கு பெரும்புறக்கடல் என்றும், உற்சவமூர்த்திக்கு பக்தர் - ஆவி, பக்தவத்சலன் என்பதும் திருநாமங்களாகும்.

அறங்காவலர்கள் :

திரு. E. V. இராசரத்தினம் (தலைவர்)

திரு. R. கோவிந்தப்பிச்சை,

திரு. P. சண்முகம்.

நிர்வாக அதிகாரி :

திரு. G. குஞ்சிதபாதம்.

ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

மஞ்சவயல் மரவக்காடு அஞ்சல்

பட்டுக்கோட்டை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயவரம் – காரைக்குடி புகைவண்டிப் பாதையில் மரவக்காடு நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது.

சித்திரையில் நடைபெறும் பிர்மோற்சவம் மிகவும் சிறப்புடையது.

பரம்பரை அறங்காவலர்கள் :

திரு. M. V. பாலசுப்பிரமணிய பிள்ளை.

திரு. A. V. முருகையா பிள்ளை.

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

திருவிடைக்கழி

மாயவரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்தலம் குமரக்கடவுள் வீற்றிருக்கும் திவ்வியத் தலங்களுள் சிறப்பு மிக்கது. 9-ஆம் திருமுறையாகிய திருவிசைப்பா பதிகம் பெற்றது. அருணகிரிநாதரால் பாடல்பெற்றது. மாயவரம் வட்டத்திலுள்ள திருக்கடையூருக்குத் தென்மேற்கில் 4 கல் தொலைவிலும், தில்லையாடி புகைவண்டி நிலையத்திலிருந்து 2 கல் தொலைவிலும் உள்ளது. கடலாழி ஆற்றின் தென்கரையில் இத்தலம் அமைந்துள்ளது. இவ்வாலயம் முசுகுந்தப் பேரரசனல் தோற்றுவிக்கப்பட்டதாக வரலாறு. முருகனுடைய கர்ப்பக்கிரகத்திலேயே முருகனுக்குப் பின்புறமாக இடதுபாகத்திலே சிவபெருமான் சிவலிங்க உருவத்தில் காட்சி தருகிருர்.

இங்கு ஒவ்வொரு கிருத்திகையிலும் முருகனுக்கு விசேட பூசைகள் நடைபெறுகின்றன. கந்தசஷ்டி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

அறங்காவலர்கள் :

திரு. K. கனகசபைபிள்ளை.

திரு. T. முத்துராமலிங்கம் செட்டியார்.

நிர்வாக அதிகாரி

திரு. K. அய்யாத்துரை.

ஸ்ரீ ரங்கநாதசுவாமி திருக்கோயில்

ஸ்ரீரங்கம் (திருச்சி மாவட்டம்)

" கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாயன் என்உள்ளங் கவர்ந்தானை
அண்டர்கோன் அணிஅரங்கன் என் அமுதனை
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே "

இத்திருக்கோயில் 108 வைணவத்தலங்களில் தலைசிறந்தது. ஆழ்வார்கள் பதின்மரால் மங்களா சாசனம் செய்யப்பட்டது. பூலோக வைகுண்டம் எனப்படும் தலமாகும். தென் இந்தியாவில் உள்ள ஆலயங்களில் மிகச்சிறந்தது.

நிர்வாக அதிகாரி

திரு. V. முருகன்

அறங்காவலர்கள் :

திரு. K. சீனிவாச அய்யங்கார் (தலைவர்)
திரு. R. வரதராஜ அய்யங்கார்
திரு. R. S. கிருஷ்ணராவ் B. A., B. L.,
திரு. K. ராஜவேலு M. A., B. L.,
திரு. U. T. சடகோபாச்சாரியார்

ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயில்

விளநகர்

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரத்திலிருந்து 5 கல் தொலைவில் உள்ளது. மாயூரத்திலிருந்து பேருந்து வசதி உண்டு. இங்கு நடைபெறும் அத்யயன திருவிழா, ஸ்ரீராம நவமி, வசந்த திருவிழா ஆகியவை மிகவும் சிறப்பு உடையன. பெருமாள் நின்ற திருக்கோலம். இத்திருக்கோயிலின் மேற்கே சம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் கோயில் இருக்கின்றது.

நிர்வாக அதிகாரி

திரு. P. S. பாண்டியன் B.Sc.,

அறங்காவலர்கள் :

திரு. S. R. பாண்டுரங்கன்

திரு. A. N. கல்யாணசுந்தரம் M. A., (Hons.)

திரு. M. மாணிக்கம் B. A., B. L.,

திரு. S. பொன்னையா முதலியார்

திரு. P. V. K. நடேசன்

திருக்கடவூர் மயானம்

என்ற

திருமயானத்தின் விசேஷ குறிப்புகள்

ஸ்தலத்தின் பெயர் :

பிரமபுரி, கடவூர் மயானம், ஸ்ரீ வில்வாரண்யம்.

ஸ்தல விருட்சம் :

வில்வம்.

ஸ்தலம் இருக்குமிடம் :

தஞ்சை ஜில்லா மாயூரம் தாலுக்கா பிள்ளைபெருமாநல்லூர் வட்டம். திருமயானம் கோவிலின் விஸ்தீரணம் 6 ஏக்கர். மேற்படி ஸ்தலம் திருக்கடையூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கிழக்கே ஒரு மைல். அதன் கிழக்கே 2 மைல் தூரத்தில் கடல்.

இத்தலம் அப்பர், சுந்தரர், சம்பந்தர் மூவர்களால் பாடல் பெற்றது. சுவாமியின் பெயர் பிரம்மபுரீஸ்வரர், அம்மன் பெயர் வாடாமுலைநாயகி, தயாளமலர்க்குழல்நாயகி, அம்லாகுஜநாயகி என்பன.

கோவிலின் முக்கிய வருஷ விழாக்கள் :

1. விஜயதசமி, 2, கந்தர் சஷ்டி சூரசம்மாரம், 3. திருக் கார்த்திகை, 4. அசுபதி முதலியன. மற்றும் மாதம் வாரம் ஏறு படிகளும் நாலுகால பூசையும் நடைபெற்று வருகின்றன.

ஷை கோவில் நிர்வாகம் திருக்கடையூர் பிச்சைக்கட்டளை எஸ்டேட் பரம்பரை டிரஸ்டி உயர்திரு. K. கனகசபைப் பிள்ளை அவர்களாலும் அவர்கள் மூதாதையர்கள் காலமுதல் மிகவும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. 9—9—1928-ல் கனகசபைப் பிள்ளை அவர்கள் தகப்பனுர் அவர்களால் மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ பிச்சைக் கட்டளை

திருக்கடையூர்

மாயவரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இந்தக் கட்டளை திரு கனகசபைபிள்ளை அவர்களின் முன்னோர்களால் நிறுவப்பட்டது. கட்டளைக்கு 1100 ஏக்கர் நிலம் உள்ளது. வருட வருமானம் ஏறத்தாழ ஒருலட்சம். திருக்கடையூர் ஸ்ரீ அபிராமியம்மனுக்கு நித்திய பூசை இக் கட்டளை நிதியிலிருந்து நடைபெறுகின்றது. வருடவிழா விலும் இக்கட்டளை பங்கு ஏற்கிறது.

கட்டளைக்கு,கிள்ளியூர், சாங்காந்தி,களமாநல்லூர் ஆகிய கிராமங்களில் ஆலயங்கள்உள்ளன. அபிராமி அம்மையின் தாயகமெனும் ஸ்ரீ அமிர்த நாராயணப்பெருமாள் திருக் கோயில் இக்கட்டளை நிதியிலிருந்து பராமரிக்கப்படுகிறது. ஸ்ரீ அபிராமிபட்டர், ஸ்ரீ உய்ய வந்த தேவநாயனர், ஸ்ரீ காரி நாயனர், ஸ்ரீ குங்கிலியக்கலய நாயனர் ஆகியோருக்கு இக் கட்டளையின் சார்பில் ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. இத் திருக்கோயிலில் திருமணம் செய்து கொள்ளும் ஏழைத் தம்பதிகளுக்குக் கட்டளை நிதியிலிருந்து திருமாங்கல்யம் வழங்கப்படுகிறது. தேவாரப்பாடசாலை ஒன்றும் ஆரம்ப பாடசாலைஒன்றும் கட்டளையினல் நடத்தப்படுகின்றன. மதிய உணவு மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

பூம்புகார் கலைக்கல்லூரிக்கு இக்கட்டளை நிதியிலிருந்து ரூபாய் 2 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. திருக்கடையூர் மருத்துவமனையில் ஒரு மகப்பேறு பகுதி இக்கட்டளையால் கட்டப்பட்டுள்ளது.

பரம்பரை அறங்காவலர்

திரு. கே. கனகசபைப்பிள்ளை

ஸ்ரீ ஆலந்துறையப்பர் திருக்கோயில்

சித்தர்காடு

மாயூரம் அஞ்சல் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் புகைவண்டி நிலையத்திலிருந்து ½ கிலோமீட்டர் தூரத்தில் மேற்கே மாயூரம் கும்பகோணம் செல்லும் பெருவழியில் தென்புரம் உள்ளது. காவிரி நதியின் தென்பால் சித்தர் வனத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் சித்தர்கள் பலர் தங்கி யோகம் புரிந்த இடமாதலால் 'சித்தக்காடு' எனப் பெயர் பெற்றது.

இத்தலத்திற்கு "வடவாரண்யம்" எனும் பெயரும் உண்டு. தேவி விருச்சிகாம்பாள். இங்குக் கந்தர்சஷ்டி விழா சிறப்பாக நடைபெறுகிறது. ஆலய நிதியிலிருந்து ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப் படுகிறது.

நிர்வாக அதிகாரி

திரு. M. R. சங்கரன் B. A.,

அறங்காவலர்கள் :

திரு. R. **இராமலிங்கம் பிள்ளை** (*தலைவர்*)

திரு. S. **இராதாகிஷ்ருணன்** B. Com.,

திரு. K. S. **இராஜகோபால்நாயுடு**

ஸ்ரீ பரிமள ரெங்கநாதர் திருக்கோயில்

திருஇந்தளூர்

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

பஞ்ச அரங்கங்களில் ஒன்றான இத்தலத்தில் இறைவனது திருமேனி பச்சை மரகதத் திருமேனியாக உள்ளது. அம்பரிச மாமன்னன் இப்பெருமாளுக்கு கோபுரங்கள் சமைத்துள்ளார். துலாமாதத்தில் காவேரியில் நீராடி பரிமள ரெங்கநாதனை தரிசித்தல் மிகவும் மேன்மை என்பது வரலாறு கண்ட உண்மை.

சென்ற 5—2—68-ல் குடமுழுக்கு பெருவிழா நடைபெற்றது. திருக்கோயில் நிதியிலிருந்து பிரபந்தபாடசாலை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

இத்தலம் மாயூரம் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. இங்கு ஐப்பசி மாதத்தில் 10 நாட்களும், பங்குனி மாதத்தில் 10 நாட்களும், பெருந்திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

நிர்வாக அதிகாரி

திரு. சி. மாணிக்க முதலியார்

அறங்காவலர்கள் :

திரு. **ஆர். பழனிசாமி நாடார்** (*தலைவர்*)
திரு. **எஸ். என். குருமூர்த்தி**
திரு. **இ. எஸ். கணபதி**
திரு. **கே. எஸ். இராஜகோபாலன்**
திரு. **பி. கிருஷ்ணமூர்த்தி**

ஸ்ரீ கோணேஸ்வரசுவாமி திருக்கோயில்

திருக்குடைவாயில் (குடவாசல்)

தஞ்சை மாவட்டம்

இத்திருத்தலம் கும்பகோணம் - திருவாரூர் பெருவழித்துறையில் கும்ப கோணத்திலிருந்து தென்கிழக்கே 12 கல் தொலைவில் உள்ளது. திருவாரூரில் இருந்தும், கும்பகோணத்திலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. இத்திருக் கோயில் ஞானசம்பந்தரால் பாடல்பெற்றது. தொன்மையான இந்த ஆலயம் கோச்செங்கட்சோழனால் அமைக்கப்பெற்ற மாடக்கோயில்களுள் ஒன்றாகும். இங் குள்ள சுப்பிரமணிய சுவாமியைப் புகழ்ந்து அருணகிரிநாதர் பாடி இருக்கிறார்.

12 ஆண்டுகட்கு ஒருமுறை வரும் மகாமகம் என்னும் பெருந்திருவிழாவில் பக்தர்கள் இத்தலத்திலுள்ள அமிர்த தீர்த்தத்தில் நீராடிவிட்டுப் பின்னர் கும்ப கோணம் மகாமக குளத்தில் நீராடினால் பயனடைவர் என்பது வரலாறு.

அறங்காவலர்கள் :   *நிர்வாக அதிகாரி :*

திரு. K. S. இராமசாமி.   திரு. N. சுப்பிரமணியன்.

திரு. R. சுந்தரமூர்த்தி முதலியார்,   திரு. R. வெங்கடாசலம்,

திரு. S. முத்துகிருஷ்ணன்,   திரு. V. S. சண்முகவேல் அதியமார்.

ஸ்ரீ சத்குணநாதசுவாமி திருக்கோயில்

இடும்பாவனம்

திருத்துறைப்பூண்டி வட்டம்   தஞ்சை மாவட்டம்

சமயகுரவர்களில் இருவர்களான நாவுக்கரசராலும், ஞானசம்பந்தராலும் பாடல்பெற்ற இத்தலம் மிகவும் தொன்மையானது, இத்திருக்கோயிலில் உள்ள எம தீர்த்தத்தில் மூழ்கினால் மரணபயம் நீங்கும் என்பது நம்பிக்கை. இத்தலம் தில்லைவிளாகம் புகைவண்டி நிலையத்திற்கு அண்மையில் உள்ளது. நான்முகன் படைப்புத் தொழிலுக்கு இன்றியமையாத சக்தியை இறைவனைவேண்டிப் பெற்றதும், இடும்பை என்ற அரக்கி அரக்கவடிவம் நீங்கி நல்ல எழில்பெற்றதும் இத்தலத்தில்தான் என்பது வரலாறு.

ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் இத்திருக்கோயிலில் 10 நாட்கள் பெருந்திருவிழா நடைபெறுகின்றது.

நிர்வாக அதிகாரி :

திரு. S. சங்கரன் பி. ஏ.

அறங்காவலர்கள் :

திரு. An. St. S. ரெத்தினசாமித்தேவர் (*தலைவர்*)

திரு. V. K. கந்தவேல் செட்டியார்,   திரு. P. தியாகு வாய்க்காரர்.

ஸ்ரீ வாகீசுவரசுவாமி திருக்கோயில்

பெருஞ்சேரி

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் திருவாரூர் புகைவண்டிப் பாதையில், மங்கைநல்லூர் நிலையத்திலிருந்து வடகிழக்கில் 1 கல் தொலைவில் உள்ளது. தக்கன் யாகத்தில் மூக்கு அறுபட்ட சரசுவதி இத்தலத்தில் வந்து இலிங்கம் அமைத்து விதிப்படி பூசித்து, இழந்த மூக்கை மீண்டும் பெற்றதாக வரலாறு.

புரட்டாசி மாதங்களில் தத்த சோழமன்னன் காட்சித் திருவிழாவும், மார்கழி மாதங்களில் வியாழக்கிழமைதோறும் எமகண்ட தீர்த்த விசேடமும், திருவாதிரைத் திருவிழாவும், மாசி மாதத்தில் மாசிமகத் திருவிழாவும் இங்கு சிறப்புற நடைபெறுகின்றது.

நிர்வாக அதிகாரி

திரு. ஓ. பாஸ்கரசேதுராஜ் B. Com.,

அறங்காவலர்கள் :

திரு. P. S. பாலசுப்பிரமணிய பிள்ளை (தலைவர்)

திரு. தி. சம்பந்தம் பிள்ளை

திரு. ரெ. கிருஷ்ணமூர்த்தி

ஸ்ரீ ராஜகோபாலசுவாமி திருக்கோயில்

மன்னார்குடி (தஞ்சை மாவட்டம்)

குலோத்துங்க சோழ மன்னனால் கட்டப்பெற்ற இவ்வாலயம் நேர் கிழக்கு முகமாக அமைந்துள்ளது. ஏழு பிரகாரங்களை இத்திருக்கோயில் தன்னகத்தே கொண்டது. இங்குள்ள ஆயிரக்கால் மண்டபம் சிறப்பு வாய்ந்தது. இறைவன் திருநாமம் ஸ்ரீ வாசுதேவப்பெருமாள். இறைவி மூலவர் சேமாப்ஜநாயகி.

பெருமாளுக்கு எல்லா மாதங்களிலும் திருவிழா நடைபெற்று வருகிறது. இவற்றுள் பங்குனி மாதம் நடைபெறும் திருவிழா மிகவும் புகழ் வாய்ந்தது. 18 தினங்கள் இத்திருவிழா நடைபெறுகின்றது.

ஸ்ரீ கொழுந்தீஸ்வரசுவாமி திருக்கோயில்

கோட்டூர்

மன்னார்குடி வட்டம் தஞ்சை மாவட்டம்

மன்னார்குடி – திருத்துறைப்பூண்டி பெருவழியில் மன்னார்குடியிலிருந்து பதினைந்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இந்தத் திருக்கோயில் தேவாரத்தில் திருஞான சம்பந்தரால் பதிகம் பாடப்பெற்றது.

நிர்வாக அதிகாரி:

திரு. K. கல்யாணம் M. A.,

அறங்காவலர்கள்:

திரு. T. B. சிங்காரவேலு உடையார் (தலைவர்)

திரு. S. விஜயராகவலு செட்டியார், திரு. S. ராமதுரை.

ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில்

திருவெண்காடு :: தஞ்சை மாவட்டம்



மிகச்சிறந்த பாடல்பெற்ற பதிகளில் ஒன்று திருவெண்காடு. திருஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் மூவராலும் பாடல் பெற்ற தலம். பெண்ணாகடத்து அச்சுதகளப்பாளர் தமக்குப் பிள்ளைப் பேறில்லாத குறை நீங்கும் பொருட்டுத் தமது குலகுருவான திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியரிடம் விண்ணப்பிக்க அவர் தேவாரத்தில் கயிறு சாத்திப் பார்த்து ஆணையிட்டவண்ணம், தாமும் தம் மனைவியும் திருவெண்காடு சென்று சிலகாலம் தங்கி, முக்குள நீராடி இறைவனை வழிபட்டு ஒரு ஆண்மகவைப் பெற்றடுத்து சுவேதவனப்பெருமாள் என்று பெயரிட்டனர். அந்த இளங்குழந்தையே சைவசித்தாந்தத் தலைமணி நூலான சிவஞானபோதத்தை உலகுக்களித்த மெய்கண்ட தேவராவர்.

ஆடிப்பூரம், நவராத்திரி, இந்திர மகோத்ஸவம் விமரிசையாக நடைபெறுகின்றன. இவ்வாலய கல்வெட்டுகளிலிருந்து ராஜராஜசோழன் திருவெண்காடுடையாருக்கு ஐப்பசித் திங்கள் சதயத்திருநாளன்று திருமஞ்சனமாடவும் அதற்கு முன்பு ஆறு நாள் திருவிழாப் போதவும் நெல் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

இவ்வாலயம் சீகாழி புகைவண்டி நிலையத்திலிருந்து 8 கல் தொலைவிலுள்ளது. வழிபடுவோர்கள் வசதிக்காக எல்லா வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதி கட்டப்பட்டு உள்ளது. ஆலய உபரி நிதியிலிருந்து ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரசுவாமி பெண்கள் உயர் நிலைப்பள்ளியும், ஸ்ரீ மெய்கண்டார் ஆரம்பப் பாடசாலையும் நடைபெறுகின்றன.

அறங்காவலர்கள் *நிர்வாக அதிகாரி*

டி. ஜி. பாலசுப்பிரமணிய முதலியார், தலைவர் எஸ். மகாலிங்கம், பி. எஸ்ஸி.,

கே. கனகசபை பிள்ளை, ஏ. ஹரிகிருஷ்ணசாமி நயினார்,

எம். ராமசாமி, ஆர். ராஜசேகரன், பி. எஸ்ஸி., பி. எல்.,

ஸ்ரீ கற்பகநாதசுவாமி திருக்கோயில்

கற்பகநாதர்குளம் (திருக்கடிக்குளம்)

திருத்துறைப்பூண்டி வட்டம் தஞ்சை மாவட்டம்

சமய குரவர்களில் ஒருவரான ஞானசம்பந்தரால் பாடல் பெற்றது இத்தலம். இத்திருக்கோயிலிலுள்ள லிங்கம் எட்டுப்பட்டை வடிவமுள்ளது. கற்பகவிநாயகர் மாங்கனிபெற்ற திருத்தலம். இறைவன் பெயர் கற்பகநாதர். இறைவியின் பெயர் பாலசுந்தரி. இறைவியை வழிபட்டால் மலம் நீங்கும் என்பது வரலாறு.

நிர்வாக அதிகாரி :

திரு. R. குப்புசாமி

அறங்காவலர்கள் :

திரு. ந. சற்குணநாதன் (தலைவர்)

திரு. V. S. நடேசத்தேவர், திரு. M. கந்தையா வாய்க்காரர்.

ஸ்ரீ வேதபுரீசுவரசுவாமி திருக்கோயில்

தேரழுந்தூர்

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் கும்பகோணம் – மாயூரம் பெருவழியில் குத்தாலத்திற்கு தெற்கே 2 கல் தொலைவிலுள்ளது. புகைவண்டிப் பாதையில் தேரழுந்தூர் நிலையத்திலிருந்து 2 கல் தொலைவிலுள்ளது. சமயகுரவர்களில் மூவரான ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியவர்களால் பாடல்பெற்றது. கவிச்சக்கரவர்த்தி கம்பரின் பிறப்பிடம் இத்தலம்.

வருடந்தோறும் சித்திராபருவத் திருவிழா, மாசி புனர்வசுத் திருவிழா இவை வெகு சிறப்புடன் நடைபெறுகிறது. திருமாலும் சிவனும் இங்குள்ள செக்கட்டான் மண்டபத்தில் சொக்கட்டான் ஆடியதாக வரலாறு.

அறங்காவலர்கள் :

திரு. T. R. ராஜு (தலைவர்),

திரு. T. R. கேசவன், திரு. T. S. சுவாமிநாத முதலியார்.

நிர்வாக அதிகாரி

திரு. B. பத்மநாபன்.

ஸ்ரீ கண்டேஸ்வரசுவாமி திருக்கோயில்

தாமரங்கோட்டை

பட்டுக்கோட்டை வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் பட்டுக்கோட்டை - திருத்துறைப்பூண்டி பெருவழியில் உள்ளது. இங்கு வைகாசி மாதத்தில் நடைபெறும் விசாகப் பெருவிழா மிகவும் சிறப்புடையது

நிர்வாக அதிகாரி

திரு. அ. பஞ்சாட்சரம்

அறங்காவலர்கள் :

திரு. கு. வை. குழந்தைவேலு வேளாளர் (தலைவர்)

திரு. ஆ. கு. மு. சு. வேலாயுத வேளாளர், திரு. மு. சின்னகுட்டி வேளாளர்,

திரு. கோ. பெரியசாமி சேண்டாபிரியர், திரு. சி. ஆதிமுத்து ஆர்சுத்தியார்.

ஸ்ரீ அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில்

கஞ்சனூர்

கும்பகோணம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயவரம் - கும்பகோணம் புகைவண்டிப் பாதையிலுள்ள நரசிங்கன்பேட்டை புகைவண்டி நிலயத்திலிருந்து வடமேற்கே 2 கல் தொலைவில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து கிழக்கே 10 கல் தொலைவில் உள்ளது.

நாவுக்கரசரால் பாடல்பெற்ற இத்திருக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவைகளினுல் சிறப்பு வாய்ந்தது. இங்கு மாசி மாதத்தில் பிர்மோத்சவம் சிறப்புடையது.

நிர்வாக அதிகாரி

திரு. பி. எஸ். இராமலிங்கம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

மதுரை ஆதீனகர்த்தர் (பரம்பரை அறங்காவலர்)

ஸ்ரீ நாகநாதசுவாமி திருக்கோயில்

பாமணி

மன்னார்குடி வட்டம்   தஞ்சை மாவட்டம்

இத்தலம் மன்னார்குடிக்கு வடக்கே $1\frac{1}{2}$ கல் தொலைவில் உள்ளது. சமயகுரவர்களில் மூவர் இத்திருக்கோயிலைப் பாடியுள்ளனர். வைகாசி மாதம் நடைபெறும் பிர்மோத்சவத்திருவிழா மிகவும் சிறப்புடையது. ஆலய நுழைவாயிலில் கைலாசபர்வதம், பார்வதி பரமேஸ்வரர் கோபுரம் அமைந்துள்ளது.

மேலாளர் (நிர்வாக அதிகாரி)
திரு. K. ராமலிங்கம்

அறங்காவலர் :
ஒக்கூர் திரு. S. KR. SL. KL. ஆதப்ப செட்டியார்.

ஸ்ரீ கண்ணாயிரமுடையார் திருக்கோயில்

திருக்கண்ணார்கோயில் (குருமாணக்குடி)

கொண்டத்தூர் (வழி)   தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் வைத்தீஸ்வரன்கோயில் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கே $1\frac{1}{2}$ மைல் தொலைவில் உள்ளது. சமயகுரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது. சேக்கிழார், வள்ளலார் இவர்களும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். இந்திரனுக்கு பெண்ணாசையால் ஏற்பட்ட பாபம் நீங்கப்பட்டது இத்தலத்திலேயாகும். எனவே கன்னியர்கள் தங்களுக்கு விரைவில் திருமணம் நிகழவேண்டும் என்று எண்ணினால், இத்திருக்கோயிலில் உள்ள இந்திர தீர்த்தத்தில் நீராடி, இறைவனுக்கும், இறைவிக்கும் ஞாயிறுதோறும் அர்ச்சனைசெய்து சுமங்கிலிதானம் செய்தால் ஒரு மண்டலத்தில் அவர்களுடைய எண்ணம் ஈடேறும் என்பது மக்கள் கண்கூடாகக் கண்டுவரும் உண்மை.

திரு. R. நாச்சியப்பசெட்டியார்
நிர்வாக அறங்காவலர்.

ஸ்ரீ பவ ஔடதீசுவரசுவாமி திருக்கோயில்

திருத்துறைப்பூண்டி

தஞ்சை மாவட்டம்

திரு பெரியநாயகியுடன் கூடிய திரு பிறவிமருந்தீஸ்வரர் சுயம்புலிங்கமாக இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். இத்திருக்கோயிலிலுள்ள ஸ்ரீ கஜசம்ஹார மூர்த்தி ஓர் சிறப்பு அம்சமாகும். இந்த ஆலயத்திலுள்ள பஞ்சமுகவாத்தியம் பிர்மோற்சவத்தில் வசந்தனன்றும், நிறைபணி உற்சவத்தன்றும் ஸ்ரீ தியாகராஜா வுக்கு வாசிக்கப்பெறுகிறது. இத்தலம் சப்தவிடங்கத்தில் இடம்பெறுவிட்டாலும், ஸ்ரீ தியாகராஜாவும், விடங்கரும் (மரகதலிங்கமும்) உள்ளன. பொதுமக்களது நன்மைக்கு குடிநீர்த்தொட்டி கட்டப்பெற்றுள்ளது. பிர்மோற்சவம் சித்திரைத் திங்களில் 22 நாட்கள் விசேடமாகக் கொண்டாடப்படுகிறது.

அறங்காவலர்கள்:

திரு. S, கோபாலரெத்தினம் (தலைவர்)

திரு. S. முத்துகிருஷ்ணராஜா, திரு. N. வெங்கிடாஜலராஜா,

திரு. N. குப்புசாமி பி. ஏ., பி. எல்.

நிர்வாக அதிகாரி:

எம். பழனியப்பன்.

ஸ்ரீ சதுரங்க வல்லபநாதசுவாமி திருக்கோயில்

பூவனூர்

மன்னார்குடி வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் பூவனூர் பாமணி ஆற்றின் மேல்கரையில் உள்ளது. நீடாமங்கலத்திலிருந்து மன்னார்குடிசெல்லும் பெருவழிப் பாதையில் நீடாமங்க லத்திலிருந்து 2 கல் தொலைவிலுள்ளது, அப்பர் பெருமானல் பாடல்பெற்றது. மைசூர் மன்னரின் குலதெய்வமான ஸ்ரீ சாமுண்டீஸ்வரி இத்திருக்கோவிலில் அமர்ந்திருக்கிறார், எலிகடி போன்ற விஷக்கடிகளுக்கு ஸ்ரீ சாமுண்டீஸ்வரியின் சந்நிதியில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்வேர் கட்டப்படுகிறது. வேர்கட்டிய சில நிமிடங்களில் விஷம் நீங்கிவிடுகிறது. இதற்கென்றே தமிழகத்தின் பல இடங் களிலிருந்து மக்கள் வருகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதத்தில் இங்கு பிர்மோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. ஸ்ரீ சாமுண்டீஸ்வரிக்கு சித்திரை மாதத்தில் திருவிழா நடை பெறுகிறது.

நிர்வாக அதிகாரி:

திரு. R, நாசிம்மன்.

அறங்காவலர்கள் :

திரு. P. சுப்பையா முதலியார் (தலைவர்)

திரு. T. B. ஐயாத்துரை உடையார், திரு. M. செல்லையன்.

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

எண்கண்

(தஞ்சை மாவட்டம்)

இத்தலம் திருவாரூர் - தஞ்சாவூர் சாலையில், திருவாரூரிலிருந்து மேற்கே 11 கிலோமீட்டர் தொலைவில் உள்ள முகுந்தனூர் என்னும் கிராமத்திலிருந்து வடக்கே ஒரு கிலோமீட்டர் தூரத்திலுள்ளது. தொன்மையான இந்த ஆலயம் நாவுக்கரசரால் பாடல்பெற்றது. இங்கு உள்ள ஆறுமுகனை அருணகிரியார் பாடியுள்ளார்.

சிக்கலில் கட்டைவிரலையும், எட்டுகுடியில் கண்ணையும், இழந்த சிற்பி, கண்ணில்லாது இருப்பினும், கட்டைவிரல் இல்லாது இருப்பினும், மயிலேறும் வேலனுக்கு மயில்காலே ஆதாரமாகக்கொண்டு, எண்ணமே கண்ணாகக்கொண்டு, முருகனுக்கு சிலை வடித்ததால், எண்கண் எனப் பெயர்பெற்றது. மேலும் அச் சிற்பி, வேலனுக்கு சிலை அமைத்து முடியும் தருவாயில் அருகில் அமர்ந்து உதவி செய்த பெண்மணியின் கையில் உளிபட்டு இரத்தம் பீறிட்டு, பீறிட்ட இரத்தம் சிற்பியின் கண்களில்பட்டு கண்கள் பளீரென திறந்து பார்க்கும் சக்தியைப் பெற்றது என்பது வரலாறு.

அறங்காவலர்கள் :

திரு. K. சச்சிதானந்தம் (தலைவர்)
திரு. A. சுப்பிரமணியம், திரு. G. நடராஜன.

நிர்வாக அதிகாரி :

திரு. R. கோவிந்தராஜன்.

ஸ்ரீ மந்தரபுரீசுவரசுவாமி திருக்கோயில்

கோவிலூர்

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் முத்துப்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒருகல் தொலைவில் உள்ளது. இறைவன் பெயர் மந்தரபுரீஸ்வரர், இறைவி பெயர் பெரியநாயகி. இராமச்சந்திரமூர்த்தி சேது அணை கட்டுவதற்கு முன்பு திருமறைக்காடு, மணமேல்குடி முதலிய பல இடங்களில் அணை கட்டுவதற்கு முயன்று, முடியாமல்போகவே இந்தத் தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டு, இறைவனிடம் மந்திர உபதேசம் பெற்றுச் சென்று சேது அணைக்கட்டு கட்டி முடித்ததாக வரலாறு. இதனுல் இறைவனுக்கு மந்தரபுரீஸ்வரர் என்ற திரு நாமம் அமைந்ததாகக் கூறுவர்.

இத்தலம் ஞானசம்பந்தரால் பாடல்பெற்றது. சென்ற 24-4-69-ல் இத் திருக்கோயிலுக்கு பெருமுழுக்கு விழா நடைபெற்றது. இறைவனுக்கு சேர, சோழ மன்னர்களால் பல நிபந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அறங்காவலர்கள் :

திரு. R. K. மாரியப்பதேவர் (தலைவர்)
திரு. S. ராஜகோபால் பிள்ளை, திரு. M. தண்டபாணிப்பிள்ளை.

நிர்வாக அதிகாரி :

திரு. ப. முத்துசாமி.

ஸ்ரீ வேங்கடாசலபதிசுவாமி திருக்கோயில்

ஒப்பிலியப்பன்கோவில்

திருநாகேசுவரம் அஞ்சல் கும்பகோணம் வட்டம்

குடந்தையை அடுத்த திருநாகேசுவரத்தின் தென்பால் திருவிண்ணகர் என்னும் தலத்தில் ஸ்ரீ பூமிதேவி சமேத ஸ்ரீ சீனிவாசப்பெருமாள் திருக்கோவில் அமைந்திருக்கிறது. இப்பெருமானைப்பற்றி பன்னிரு ஆழ்வார்களில், நம்மாழ்வார் திருமங்கையாழ்வார், பேயாழ்வார், பொய்கையாழ்வார், ஆகிய நால்வரும் பிரபந்த பாசுரங்கள் பாடியுள்ளனர். 'தென் திருப்பதி' என வழங்கும் இத்தலத்தில் ஸ்ரீ மார்க்கண்டேயரின் தவப்புதல்வியாக ஸ்ரீ பூமிதேவி நாச்சியார் அவதரித்து எம்பெருமானைத் திருமணம் புரிந்ததாக ஐதீகம். இங்குத் தாயார் திருமணக் கோலத்துடனும், பெருமாள் கன்னிகாதானம் பெற்றுக்கொள்ளும் கோலத்துடனும் ஒரே சந்நதியிலுள்ளனர். இப்பெருமானை ஆழ்வார்கள் என்னப்பன், பொன் னப்பன், மணியப்பன், முத்தப்பன் எனப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

இக்கோவிலுக்கு பொருள் வசதியும், சொத்து வசதியும் இல்லாது போனுலும் சேவார்த்திகளின் கைங்கரியத்தைக்கொண்டு வைகாசியில் வசந்தோற் சவமும், புரட்டாசியில் பிர்மோற்சவமும், ஐப்பசியில் திருக்கல்யாண உற்சவமும், தைமாதத்தில் தெப்போற்சவமும், பங்குனியில் பெருமாள் அவதார பிர்மோற் சவமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோவிலில் திருமணங்கள் அதிகமாக நடைபெற பொதுமக்களின் சௌகரியத்திற்கு ஒருபெரிய திருமணக் கூடமும், தங்குவதற்கு இரண்டு சத்திரங்களும் கோவில் நிர்வாகத்தில் இருந்து வருகின்றன. இக்கோவிலில் திருப்பதி போன்று பிரார்த்தனை திருக்கல்யாணங் களும், பிரார்த்தனை கெருடசேவையும் செய்து வைப்பதுண்டு.

ஒவ்வொரு மாத சிரவணத்தன்றும் இக்கோவிலிலுள்ள அகோரார்த்திர சூரிய புஷ்கரணியில் பக்தகோடிகள் நீராடி சிரவணதீபம் தெரிசித்து அவதார திருநக்ஷத்திர உற்சவத்தைக் கொண்டாடுகின்றனர். இத்திருக்கோவிலையடைய குடந்தை பேருந்து நிலையத்திலிருந்து நகர்ப்புறபேருந்துகள் 7, 13, 15, செல்லு கின்றன. திருநாகேச்சுர புகைவண்டி நிலையத்திலிருந்து 3 கிலோமீட்டர் தெற்கே உள்ளது. இத்திருக்கோவில் மேலும்,மேலும் சிறப்புற்று விளங்க மெய்யன்பர்கள் பெருமளவில் காணிக்கைகளை செலுத்தி எம்பெருமானை சேவிக்க வேண்டுகிறோம்.

திரு. ஏ. ஆதிமூலம் பிள்ளை
மேலாளும் அறங்காவலர்

திரு. எஸ். சீனிவாசன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

திரு. ஆர். நரசிம்ம அய்யங்கார் திரு. டி. ஆதிமூலம்

திரு. சி. சீனிவாசன் திரு. வி. ஜெனர்த்தனம்

ஸ்ரீ மார்க்கசகாயசுவாமி
திருக்கோயில்
மூவலூர்

மாயூரம் வட்டம்   தஞ்சை பாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரத்தின் அருகிலுள்ளது. நாவுக்கரசர்
திருநெய்த் தானம் திருத்தாண்டகத்தில் இத்திருக்
கோயிலேப் போற்றுகிருர். இத்தலம் மூர்த்தி, தலம்,
தீர்த்தம் ஆகிய மூன்று விசேடமும் பெற்றது.
சுவாமி கோயிலின் உட்பிரகாரத்தில்
பிரமன் ,விஷ்ணு, ருத்திரன் என்ற
மூவரும் வணங்கும் கல்வெட்டு
சிற்பம் அமைந்துள்ளது.
பங்குனித் திங்களில்
பிர்மோத்சவம்
நடைபெறு
கிறது.

2 OCT 1969

நிர்வாக அதிகாரி

திரு. வி. இராகவசாமி பி.எஸ்ஸி.,

அறங்காவலர்கள் :

திரு. எம். துரைசாமி   திரு. ஆர். சேதுராமய்யர்
திரு. சி. அய்யாத்துரை

Sri Namasivayamurthi press, Thiruvavaduthurai.